
கல்கி
KALKI
ஜனவரி 16, 1955
4 அணா


அழகான, உறுதியான கட்டிட வேலைகளுக்கு..
சூலம் மார்க்
சங்கர் பிராண்ட்
போர்ட்லண்ட் ஸிமெண்ட்
SANKAR
I C
BRAND
திடத்திலும், தரத்திலும் தேர்ந்தது
இந்தியா ஸிமெண்ட்ஸ் லிட்..... மதராஸ் - 1

மலர் 14 · இதழ் 25

கல்கி

ஜய ஹு :: தை 3

1955 ஜனவரி 16

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


இப்பொழுது
நடைபெறுகிறது
கிருஷ்ணா பிக்சர்ஸ்
காவேரி
கதை, வசனம்: டைரக்ஷன்:
ஏ.எஸ்.ஏ.சாமி • யோகானந்த்
பாடல்கள்:
உடுமலை நாராயணகவி
சென்னை
ஸ்ரீ கிருஷ்ணா • பாரகன்
ராஜகுமாரி, உமா
மற்றும் தென்னாடெங்கும்



தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்

கல்கி அன்பர்களுக்கு என் வணக்கம்!

"எதிர்பாராதது நடந்து விட்டது!" என்று நம்முடைய ராஜாஜி டிஸம்பர் ஐந்தாந் தேதியன்று ரேடியோவில் சொன்னார்கள்.

எல்லாவிதத்திலும் எதிர்பாராததாகவே நடந்து விட்டது அது!

அன்பும் அருமைப் பாங்கும் நிரம்பிய ஆசிரியர் கல்கி அவர்களோடு, அவர்களின் மறைவுக்கு முந்திய வாரம் பேசிக் கொண்டிருந்தேன். இலக்கிய சம்பந்தமாய்ப் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தோம். கல்கி அவர்கள் தம்மைப் பற்றியும், தம்முடைய கனவுகளைப் பற்றியும், தம்மை உருவாக்கிய பெரியார்களைப் பற்றியும் எல்லாம் விரிவாகச் சொன்னார்கள். இரவு ஒன்பது மணிக்குமேல் ஆகிவிட்டது!

"உங்களுக்குக் களைப்பு உண்டாகுமே, ஓய்வு எடுத்துக் கொள்ளுங்களேன்!" என்று நான் சொன்னேன். அவர்கள் கேட்கவில்லை. சிரிப்பும் கும்மாளியுமாகக் குலுங்கக் குலுங்கப் பேசினார்கள். அதுதான் என்னோடு அவர்கள் கடைசியாகப் பேசிய பேச்சு. அந்தப் பேச்சில் தம்முடைய சொந்த வாழ்க்கையைப் பற்றியும், கனவுகள் இலட்சியங்கள் ஆகியவற்றைக் குறித்தும் அவ்வளவு தூரம் மனம் விட்டுப் பேசியதை இப்பொழுது எண்ணிப் பார்க்கும்போது, "எதிர்பாராதது" என்ற சொல்லின் முழுப் பொருளும் புலனாகிறது.

ஆசிரியர் கல்கி அவர்களை நான் முதன் முதல் சந்தித்தபோது, எனக்குப் பதினைந்து வயது. நான் டி.கே.சி. அவர்களின் "வட்டத் தொட்டி"யில் கலந்து கொண்டு வருவது வழக்கம். "தம்பி! நீ ஏன் கதைகளை எழுதுவதில்லை? உன்னோடு வட்டத் தொட்டியில் உள்ள எல்லா இளைய நண்பர்களும் விகடனுக்கு எழுதுகிறார்களே!" என்று என்னைக் கேட்டார்கள். நான் பதில் சொல்லத் தயங்கியதைப் பார்த்து, அவர்களே தொடர்ந்து கூறினார்கள்:

"எழுதினால் அது நன்றாக இருக்க வேண்டுமே என்று பயப்படுகிறாய். ரொம்ப சரி. நன்றாயில்லையென்றால் நான் திருப்பி யனுப்பி விடுகிறேன்!" என்று என்னுடைய பயமெல்லாம் ஓடிப் போகும்படி பளிச்செனச் சொன்னார்கள்!

அதன்மேல் 'ஆனந்த விகட'னுக்கு ஒரு கதை எழுதி யனுப்பினேன். கல்கி அவர்கள் அதை எனக்குத் திருப்பி யனுப்பவில்லை.

அருமையான பாராட்டுக் கடிதம் ஒன்று மறு தபாலிலேயே வந்தது. அந்தக் கடிதத்தைக் கண்டதும் எனக்கு ஏற்பட்ட எக்களிப்பை எழுத்தில் விளக்க முடியாது.

எனக்குக் கல்கி அவர்கள் எழுதிய முதலாவது கடிதத்தைப் போலவே அவர்கள் சென்ற ஆண்டு நவம்பர் ஐந்தாந்தேதி எனக்கு எழுதிய இறுதிக் கடிதமும் அமைந்திருக்கிறது. அதுவே சென்ற வாரத்துக் 'கல்கி'யில் வெளிவந்தது.

என்னுடைய நன்றிக்கும் அன்புக்கும் உரிய பேராசிரியர் இப்பொழுது மறைந்து விட்டார். அவர் ஏற்றி வைத்த இந்தச் சிறு விளக்கு இப்பொழுது அந்த ஜோதியிருந்த கோயிலிலேயே வைக்கப்படுகிறது. பொறுப்பின் பாரத்தைப் பூரணமாக உணர்கிறேன். அச்சமே உண்டாகிறது. என்றாலும் கல்கி அவர்களுடைய இலட்சியங்களைத் தொடர்ந்து பணியாற்றுவதே நான் அவர்களுக்குச் செய்யக் கூடிய நன்றியும் கடமையும் ஆகும் என்று கருதி, அதைச் செய்யத் துணிவதில் ஒரு மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தப் புதிய பணியில் என்னை ஈடுபடும்படி பணித்து, எனக்கு வழிகாட்டியாகவும் உறு துணையாகவும் அமர்ந்து என்னை ஆட்கொண்ட மதிப்புக்கு உரிய ராஜாஜியின் ஆசீர்வாதமே இந்தத் தருணத்தில் எனக்கு ஊக்கம் தந்து உதவுகிறது.

"மூட்டையைக் கண்டு பயப்படாதே. தானாகத் தூக்கி வைத்துக் கொள்ளுவதென்றால் பயமாக இருக்கலாம். இன்னொருவர் தூக்கி வைத்து விட்ட பிறகு, அதைச்


உலகெங்கும் பொங்கல்!
“இனிப்பாயிருக்கிறதா?”
சமாதானம்
உலகம்
பொங்கல் விழா தென்னாடு மாத்திரமல்ல; அகில உலகமும் கொண்டாடக் கூடிய பண்டிகை.
கார்ட்டூன்
கேள்விக்குப்...
“ஆசிய மக்களே! என்னை நம்புங்கள்!”
V.O.A.
“அணுகுண்டு யுத்த ஆபத்திலிருந்து ஆசியா மக்களுக்கு அமெரிக்கா பாதுகாப்பு அளிக்கும்” — ஐஸனோவர்
...பதில்!
ஹிரோஷிமா
“ஹிரோஷிமா அணுகுண்டு சம்பவம் எங்களுக்கு நன்கு நினைவிருக்கிறது!” — ராஜாஜி
மூன்று காரியங்கள்!
விண்ணப்பம்
இலங்கை இந்தியர்கள்
இலங்கை சர்க்கார்
பான்மையான இலங்கை இந்தியர்களின் பிரஜா உரிமை மனுக்கள் நிராகரிக்கப்பட்டு விடலாம் — என்று புதிய இலங்கை ஹைகமிஷனர் ஸர் எட்வின் விஜயரத்ன பயப்படாமல் கூறினார்.


இரும்புப் பிடி!
பிரிட்டிஷ் எஃகு முதலாளிகள்
ரஷ்ய எஃகு நிபுணர்கள்
டி.டி.கே.
ரஷ்யாவும் பிரிட்டனும் இந்தியாவிலிருந்து எஃகு கண்டிராக்டை அடையப் போட்டா போட்டியில் இறங்கியிருக்கின்றன.
கதம்பம்
ரகி
புதிய வெள்ளம்
பட்டம் தாணுப் பிள்ளை மந்திரி சபை
தி.கொ. அரசியல் நிலைமை
பட்டம் தாணுப் பிள்ளை மந்திரி சபையை ஆதரிப்பதில்லை என்று திருவாங்கூர் காங்கிரஸ் முடிவு செய்து விட்டது.
ஒரு யோசனை!
தக்ஷிண ரயில்வே ஆவடிக் காங்கிரஸ் விழாவுக்காகச் சகல வசதிகளும் செய்து வருகிறது - செய்தி
இட நெருக்கடியைச் சமாளிக்க ரயில் வண்டிகளின் மேலேயும் ஆசனங்கள் போடலாம் அல்லவா?

சுமப்பது உன்னுடைய கடமை. நிமிர்ந்து நின்றால் பாரம் குறைந்து போகும். இது மூட்டையைத் தூக்குகிறவர்களுக்கு நன்றாகத் தெரியும்'' என்றார்கள். தைரியம் உண்டாயிற்று.

கல்கி அவர்களோடு நீண்டகாலம் உழைத்து இந்தப் பத்திரிகையை உருவாக்கிய ஸ்ரீ சதாசிவம் அவர்களின் அன்பும், தமிழ்ப் பெரு மக்களுடைய ஆதரவும், கல்கி அவர்களிடம் நீண்ட நாள் பயிற்சி பெற்ற சகாக்கள் கூட இருப்பதும்,—எல்லாம் சேர்ந்து என்னை வழி நடத்தும் என்று நம்புகிறேன்.

என்னை ஒரு ஆளாக்கி அருளிய தந்தையனைய பரிவாளர் டி. கே. சி. அவர்கள் அருவமாக நின்று எனக்குத் துணை புரிவார்கள்.

தமிழ் நாடெங்கும் கொண்டாடி மகிழ்கிற இந்தப் பொங்கல் நன்னாளில், அன்பார்ந்த நேயர்கள் அனைவருக்கும் என் உள்ளம் தோய்ந்த வணக்கத்தைச் செலுத்துகிறேன். பால் பொங்குக!

'கல்கி' காரியாலயம்,
சென்னை.

சோமு

சரியான மார்க்கம்

அமெரிக்காவும் ரஷ்யாவும் அணுகுண்டைத் தூக்கிக் கடலிலே எறிந்துவிட வேண்டும் என்றும், அமெரிக்கா இந்த நல்ல காரியத்தைத் தானாகவே செய்து வழிகாட்ட வேண்டும் என்றும் யோசனை கூறி, ராஜாஜி அவர்கள் பிரபல அமெரிக்கப் பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதியனுப்பியது வாசகர்களுக்குத் தெரியும் அல்லவா! அந்த விஷயத்தைப் பற்றி மறுபடியும் விளக்கி இந்தியப் பத்திரிகைகளுக்கு ராஜாஜி கொடுத்த பேட்டியும் வாசகர்கள் படித்திருப்பார்கள்.

அணுகுண்டு பலத்தினால் பிற நாடுகளைப் பயமுறுத்தி அந்த பயத்தைக் கொண்டு யுத்தத்தைத் தடுத்து அடையக் கூடிய சமாதானமானது மக்களின் சாந்திக்கும் முன்னேற்றத்துக்கும் உதவாது.

ராஜாஜியின் கடிதத்திலும், அவருடைய விளக்கத்திலும் கூர்ந்து பார்த்தால் அவருக்கு அமெரிக்காவிடம் உள்ள மதிப்பும் பிரியமும் நன்றாகக் காணலாம்.

"அணுகுண்டை வைத்துக் கொண்டு பயமுறுத்துகிற காரியத்தினால், அமெரிக்காவைப் பற்றி ஆசியாவிலுள்ள மதிப்பு குறையுமே தவிர, உயராது" என்று ராஜாஜி எண்ணுகிறார்.

இந்த சந்தர்ப்பத்தில் ஒரு முக்கியமான உண்மையை நினைவு படுத்திக் கொள்ள வேண்டும். தீயவன் என்றைக்குமே தீமையைச் செய்ய அஞ்சுவதில்லை. ஆனால் நல்லவன் எந்தக் காரணத்தினாலாவது தீமை கலந்த காரியத்தைச் செய்ய வேண்டி நேரிட்டால், அதை அஞ்சி அஞ்சியே செய்வான். அமெரிக்கா தன்னுடைய சரித்திரத்துக்கும், பண்பாட்டுக்கும் மாறாக இந்தப் பெரும் பிசாசை ஏவித் தீமையைச் செய்ய முனைந்தால், அரைகுறையாகத் தான் செய்ய மனம் ஒப்பும். கண்ணை மூடிக் கொண்டு வகை தொகையின்றிப் பூரண நாசம் செய்ய அதனால் இயலாது. அதனுடைய மனசாட்சியும் பண்பும் இடம் தராது. இது நிச்சயம். புலியைக் கொல்ல நினைத்து ஒரு குண்டை எறிந்து, கொன்று முடிக்காமல் அதன் சீற்றத்தை மட்டிலும் கிளப்பி விட்டு, அதன் காரணமாக அது முழு வேகத்துடன் ஆக்ரோஷமாகத் திரும்பிப் பாயும் விபரீதமே போல் நடந்து விடும்! அதையே ஒரு காரணமாகக் கொண்டு விரோதியானவன் பன்மடங்கு வேகத்துடன் தொழிற்பட ஏதுவாகும். நல்லவன் தயங்கித் தயங்கிச் செய்கிற ஒரு கேடானது கெட்டவனின் பெரும் அக்கிரமத்துக்கு ஒரு காரணமாக அமைந்து விடும். ஆனபடியால் இந்த அணுகுண்டுப் பிரயோகத்தினால் அமெரிக்காவுக்கே அதிக அபாயம் என்பது ராஜாஜியின் கருத்து. இந்த நுட்பமான விஷயம் அந்த நாட்டு அறிஞர்களின் கூரிய சிந்தனைக்கு உரியதாகும்.

அமெரிக்க சர்க்கார் அணுகுண்டைப் பற்றிய நினைவையே பூரணமாக விட்டு விட்டால், ஆசியாவில் மட்டுமல்லாமல், உலக அரங்கிலேயே அந்த நாட்டின் ஸ்தானம் உயரும் என்பதில் சந்தேகமில்லை. அமெரிக்காவிலேயே எண்ணற்ற மக்களுக்கு சாந்தியைத் தரும்.

'கல்கி' காங்கிரஸ் மலர்

சட்டம் போட்டு வைத்துக் கொள்வதற்கு உரிய முறையில் ஆசிரியர் கல்கி அவர்களின் புகைப் படப் பிரதி வேண்டும் என்று கோரி, பல நூற்றுக் கணக்கான நேயர்கள் நமக்கு எழுதியிருக்கிறார்கள். வருகிற 23ந் தேதி 'கல்கி' காங்கிரஸ் மலரில், அன்பர்களின் இந்த விருப்பத்தை நிறைவேற்றும் வகையில், உயர்ந்த ஆர்ட் காகிதத்தில் கல்கி அவர்களின் புகைப் படம் ஒன்று சேர்த்திருக்கிறோம். மலரினுள் இது முகப்புப் படமாக விளங்கும் என்பதை நேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கல்கி' காங்கிரஸ் மலரில், தேசத் தலைவர்களின் திருவுருவப் படங்கள், தியாக சீலர்களின் வாழ்க்கை வரலாறுகள், பாரத சரித்திரத்தைச் சித்திரிக்கும் வண்ண ஓவியங்கள், கதைகள், கட்டுரைகள், கல்கி இதழ்களின் தொடர் அம்சங்கள் ஆகியன நிரம்பி யிருக்கும். தமிழ் நாட்டின் அரச பரம்பரைக் காட்சிகளும், ஞானச் செல்வர்களின் வர்ணப் படங்களும் சித்திர மடல்களாக வருகின்றன. பார்க்கவும் படிக்கவும் ரஸமாக இருக்கும் இந்த மலர், நூற்றைம்பது பக்கங்களுக்கு மேல் கொண்டது. விலை எட்டணா.

ஜனவரி 14ம் முதல்

சென்னை
வெலிங்டன்
பிரபாத்
சரஸ்வதி
மூன்று தியேட்டர்களிலும்
மற்றும்



பெங்களூர்
மதுரை
கோயமுத்தூர்
மைசூர்
திருநெல்வேலி
தஞ்சாவூர்
கும்பகோணம்
ஈரோடு
திண்டுக்கல்
காஞ்சிபுரம்
திருப்பாபுலியூர்
புதுச்சேரி
பொள்ளாச்சி
கரூர்
தென்காசி
போடிநாயக்கனூர்
ராஜபாளையம்
நாகர்கோயில்
ராபர்ட்சன்பேட்டை
சாம்ராஜ் நகர்

ஜெமினி
ஒளவையார்

சென்னையில் தினசரி 3 காட்சிகள்: 2-30, 6 & 9-30




உங்களுக்கு அதிகப்படி சக்தியை... துரிதமாக அளிக்கிறது!



உங்களுடைய சிறு பிள்ளைகளுக்கு அவர்களுடைய வாழ்நாளில் ஏற்படும் சங்கடங்களைச் சமாளிக்க உதவிபுரியுங்கள். "ருஜு"வான ஆரோக்கிய டானிக், வாட்டர்பரீஸ் காம்பவுண்டின் மூலம் அவர்களை தேக சௌக்யமுள்ளவர்களாக இருக்கச் செய்யுங்கள்.

தினசரி உட்கொண்டால், ருசிக்கினிய வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் கடுமையான வேலையிலிருந்தும், விளையாட்டிலிருந்தும் அடைந்த சிறுவர்களுடைய அதிக களைப்பை அகற்ற அதிகப்படிச் சக்தியை அளிக்கிறது. மேலும் அது அவர்களை இருமலிலிருந்தும் ஜலதோஷத்திலிருந்தும் காப்பாற்றுகிறது. அதிகப்படி ஆகாரமாக உட்கொள்ளப்படும் இம் மருந்து திடமான வளர்ச்சிக்குத் தேவையான ஜீவாதார போஷணையை அவர்களுக்கு அளிக்கிறது. தினசரி வேலைக்கும் விளையாட்டுக்கும் அது உரமான வீரியத்தை அளிக்கிறது.

வாட்டர்பரீஸ் காம்பவுண்டிலிருந்து உங்களுடைய சிறு பிள்ளைகள் அதிகப்படிச் சக்தியைப் பெறுவர்... உங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் ஒரு ருஜுவான ஆரோக்கிய டானிக் அதுவே!



ஆரோக்கியத்தைத் தரும்
வாட்டர்பரீஸ் காம்பவுண்டை
உங்களை சௌக்யமாகவைக்க உட்கொள்ளுங்கள்

NAS 268

புதிய சீனாவும் பழைய கலையும்

சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்த நவசீனாவின் கலைத் தூது கோஷ்டியினருக்குச் சென்னை நகரம் நல்ல வரவேற்பளித்தது.

அவர்கள் தமிழகத்திலுள்ள பல்வகைக் கலைகளைக் கண்டு களித்தார்கள். நமது கர்நாடக சங்கீதம், வாத்ய இசை, கும்மி, கோலாட்டம், பரத நாட்டியம், கதகளி முதலிய பலப்பல கலை அம்சங்கள் அவர்களுக்குத் தக்க முறையில் எடுத்துக் காட்டப்பட்டன.

சென்னை வாசிகள் கலைத் துறையில் மிகப் பரந்த நோக்குமுள்ளவர்கள் என்ற நல்ல பெயரைச் சம்பாதித்தவர்கள். அதற்கு ஏற்பவே, சீனக் கலைஞர்கள் வழங்கிய இசை—நடன நிகழ்ச்சிகளுக்கு ஆயிரக் கணக்கில் சென்று அனுபவித்து, கைதட்டி ஆரவாரித்து உற்சாகப் படுத்தினார்கள்.

அவர்கள் நிகழ்த்திய 'தாமரை நடனம்' வெகு நேர்த்தியாக இருந்தது. சீனப் பெண்மணிகள் சுற்றிச் சுற்றி மேடையில் வந்தபோது, தெளிந்த நீருள்ள தாமரைக் குளங்களிலே, பச்சிலைகளுடன் காணப்படும் தாமரை மலர்கள், மெல்லிய தென்றலில் அசைவது போன்ற பிரமையே யுண்டாயிற்று.

ஒரு பெண் ஆற்றின் அக்கரையிலுள்ள காதலனைப் பார்க்கத் துடிக்கிறாள். அவளை அக்கரை சேர்க்க வேண்டிய படகோட்டிக் கிழவனோ பலே பேர்வழி! அவள் உள்ளத் துடிப்பை யெல்லாம் நன்கு உணர்ந்து கொண்டு விட்டான். வேண்டுமென்றே படகை ஆட்டி அசைத்தும், வெள்ளத்தில் சுற்றிச் சுற்றி வரச் செய்தும், அவள் தலையைக் கிறுகிறுக்க வைக்கிறான்!

மேடையில் தண்ணீர் காண்பிக்கப் படுவதில்லை. தண்ணீர்த் துறை என்பதை உணர்த்த எவ்விதத் திரைக் காட்சியும் காண்பிக்கப்படுவதில்லை. பெண், படகோட்டிக் கிழவன், துடுப்பு—இவ்வளவுதான் மேடையில் காண்கிறோம். காதலியாக நடிக்கும் சீன மங்கையும் படகோட்டியாக நடிப்பவரும் தங்களுடைய அபார நடிப்புத் திறமையினால் பிரமையும் உணர்ச்சியும் ஊட்டி விட்டார்கள்.

அவர்களது வாத்திய இசை, நமது வீணை, புல்லாங்குழல், கோட்டு வாத்தியம் முதலியவற்றுக்கு ஒப்பவும், கர்நாடக ராகங்களின் சாயலுடனும் விளங்குகிறது.

ஒரு கலைஞர், தமது வாத்தியத்தில் பல வகைப் பறவைகளின் நாதத்தை ஒலித்து, சபையோர்கள் ஒரு பூஞ்சோலையிலிருப்பது போன்ற மயக்கத்தையே யுண்டாக்கி விட்டார்!

மேடையில் தோன்றிய சீனக் கலைஞர்களின் ஆடை அலங்காரத்தைப் பற்றியும் குறிப்பிட வேண்டும். அவர்கள் வேஷம் தரித்தபோது ஆடைப் பஞ்சமே இல்லை.

கலை என்ற பெயரில் உடையைக் குறைக்கும் முயற்சி இருக்கவில்லை. இதை நம்முடைய கலைப் பண்டிதர்கள் கவனிக்க வேண்டும்.

கலை நிகழ்ச்சிகளில் பொதுவாக உற்சாகமும், கரகோஷமும் மேடைக்கு அருகில் இருக்கும் உயர் வகுப்பிலிருந்து 'காலரி' வகுப்பு வரை அலை அலையாகப் போகும். ஆனால் சீனக் கலைக் காட்சி நிகழ்ந்த கலாமண்டபத்தில் பல தடவை கரகோஷம், காலரியிலிருந்து தொடங்கி, முதல் வகுப்பிலுள்ளவர்களையும் கரகோஷம் செய்ய வைத்தது. நமது பொது மக்கள் கலையை யனுபவிக்கும் உயர்ந்த முறை இதிலிருந்தே நன்கு தெரிகிறதல்லவா!

நவசீனக் கலை கோஷ்டியினர் நடித்துக் காண்பித்த இசை நாடக நிகழ்ச்சிகள் யாவும், புதிய சீன சர்க்காரினால் புதிதாக சிருஷ்டிக்கப் பட்டவை யல்ல என்பதையும் நாம் உணர வேண்டும். அதுவே முக்கியம்.

சில நிகழ்ச்சிகள் ஐந்நூறு ஆண்டு பழமையானவை; சில ஆயிரம் ஆண்டு பழமையானவை; சில இரண்டாயிரம் ஆண்டு பழமையானவை என்று அறிவித்தனர். நவசீன சர்க்கார், தங்கள் நாட்டுப் பழங் கதைகளும் நாட்டியம் முதலிய பழைய கலை நிகழ்ச்சிகளும் உயர்வானவை என்று மதித்துப் பாராட்டுவதை நமக்குக் காட்டவே இந்தக் கோஷ்டியை அனுப்பி வைத்திருந்தனர். இதன் பயனாக நம் இரு நாடுகளிடையே உள்ள புராதன உறவு இன்னும் உறுதிப்படும்.

பொங்கல் திருநாள்!

உலகில் மனிதனுடைய அறிவு சாதித்த அதிசயமான காரியங்களில் எல்லாம் அதி அற்புதமான காரியம், 'உழவு' என்ற முறையைக் கண்டு பிடித்ததுதான். 'வானம் பொழியுது, பூமி விளையுது' என்றாலும், வானம் எப்பொழுது 'பொழியுது' பூமி எப்படி 'விளையுது', என்று கண்டு தேர்ந்து இயற்கையின் நிலைக்கு ஏற்ற வகையில் நிலத்தைத் திருத்தி வித்திட்டு, உழுது, அறுவடை செய்யக் கற்றுக் கொண்டானே இந்தக் கல்விக்கு நிகர் ஏது உண்டு உலகில்!

தைப்பொங்கல் என்றால் அது உழவுப் பண்டிகை. வான தேவனாகிய ஆதவனும், பூமிதேவியாகிய நிலமகளும் தங்கள் காதலிலே பெற்றெடுத்த செந்நெல்லைக் கண்டு களிக்கும் பொன்னாள் இது!

எத்தனையோ பல நூற்றாண்டுகளாகத் தமிழர்கள் இந்தப் பண்டிகையைக் குதூகலமான முறையிலே கொண்டாடி வந்திருக்கிறார்கள். பூமகளின் புன்னகையும் இதயக் கனிவுமாக உதிக்கிற செந் நெல்லும் தீங்கரும்பும், தோரணமும், வாழையும் சூரிய தேவனுக்கு வரவேற்புக் கூறுகின்றன. பானையிலே பால் பொங்குவதைக் கண்டு ஆதவனுடைய உள்ளம் பொங்குகிறது. குத்து விளக்குக்கு முன்னால் நிற்கும் குல விளக்கான மனைமகள் பக்தியும் சிரத்தையும் பொங்கியவளாக அந்தப் புனிதப் பானையைக் கையொற்றி வணங்குகிறாள். கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் பாடியது போல,

"பானையுமே பொங்கிப்
பால்வடியும் வேளை
வானமுழக் குரவை
வழங்கிவலம் வருவோம்!"

வலம் வருவதற்கு நிற்கும் மனைத் தலைவியையும் அருமையான பொங்கல் திருக் காட்சியையும் இந்தப் பொங்கல் இதழின் அட்டைப் படமாகச் சித்திரித்திருக்கிறார், நமது ஓவியர் மணியம்.

சர்மாவின் கோபம்



ராஜாஜி

[சர்மா ஐ.ஸி.எஸ். மேஜைக்கு எதிரே நாற்காலியில் உட்கார்ந்து காலை போஜனம் செய்து கொண்டிருக்கிறார்.]

சர்மாவின் மனைவி ஜானகியம்மாள் : இதோ ஸர்க்கார் உத்தரவு !

சர் : வந்து விட்டதா? பிரமாத பர்மிட்! மனுச் செய்து ஒரு மாதம்தானே ஆகிறது! அடடா! தேவலையே! ரொம்ப சுருசுருப்பு! ஹூம்! அந்த பிரிட்டிஷ் நிர்வாகம் நிர்வாகந்தான்! வேலை தெரியும் அதற்கு! இந்த 'அப்ஸ்டார்ட்' துரைத்தனத்துக்குச் சதா தற்புகழ்ச்சிக்குத்தானே நேரம் இருக்கிறது! வேலை செய்யப் பொழுது ஏது?

ஜா : ஒரு யூனிட்டுக்குப் பர்மிட் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

சர் : என்ன! ஒரு யூனிட்டா? நான் நாலுக்கல்லவா போட்டிருந்தேன் ?

ஜா : (படிக்கிறாள்) 'சர்க்கார் மனுவை நன்றாகப் பரிசீலனை செய்துள்ளார்கள். மதுவிலக்குச் சட்டம் ஏற்படுவதற்கு முன்பு மனுதாருக்கு மதுபானப் பழக்கம் உண்டாகிவிட்டது என்பதையும், அவருடைய தற்போதைய வயதும் உடல் நிலையும் காரணமாக அந்த வழக்கத்தை மாற்றிக் கொள்ளுவது கஷ்டம் என்பதையும், அநுதாபத்தோடு சீர்தூக்கிப் பார்த்து ஒரு யூனிட்டுக்குப் பர்மிட் வழங்கும்படி ஸர்க்கார் உத்தரவு பிறப்பிக்கலானார்கள்!'


சர் : அடே! என்ன திமிர்! நான் என்னத்தை எவ்வளவு உட்கொள்ள வேண்டும் என்று உத்தரவு போட இவர்கள் யார்? —இந்த ஆஷாடபூதிகள்! அட்டகாசம்! அட்டகாசம்! இதைப் பொறுக்க முடியாது!

[கோப்பையை உடைத்து விடுகிறார்.]

ஜா : இதோ பாருங்கள். நீங்கள் இந்த மாதிரி கோபத்தில் இறங்கக் கூடாது என்று டாக்டர் எச்சரித்திருக்கிறார் இல்லையா?

சர் : கெட்டார் அந்த டாக்டர்! இது இன்னொரு கொடுமை, இந்த டாக்டர்களின் அட்டகாசம். அவர் இங்கே வந்து என்னுடைய ரத்தத் துடிப்பை எடுப்பது, ஒன்றும் இல்லாததற்கு எல்லாம் வீட்டில் எல்லாரையும் கவலைப் படுத்துவது — இதெல்லாம் எனக்குப் பிடிக்கவே இல்லை!

ஜா : நாங்கள் ஒன்றும் கவலைப்படவில்லை, கலங்கிப் போகவில்லை. ஆனால் அவர் சொல்லுவதை அசட்டை செய்து விடுவதா? ஏதோ காரணம் வைத்துத்தான் சொல்லுகிறார். நாம் நிச்சயம் கவனமாகத்தான்



இருக்க வேண்டும். ஏதாவது தப்புத் தவறு நேர்ந்து விட்டால், என்ன ஆவது? உங்கள் பென்ஷன் ஒன்றைத்தான் நாங்கள் எல்லோரும் நம்பி யிருக்கிறோம்.

சுசீலா (சர்மா அவர்களின் மகள்): இந்தா, அம்மா, எப்பொழுதும் பயங்கரமான விஷயங்களையே பேசிக் கொண்டிருக்காதே!

சர்: ஹரிஹரன் எப்படி யிருக்கிறான்? அவனையாவது இந்தப் பிச்சைக்கார சர்க்கார் நன்றாக நடத்துகிறார்களாமா?

[ஹரிஹரன் சுசீலாவின் கணவன்— ஐ. ஏ. எஸ். உத்தியோகஸ்தர்]

ஜா: மாப்பிள்ளை நன்றாகத்தான் இருக்கிறார். இப்பொழுது 'பப்ளிக் ரிலேஷன்ஸில்' போட்டிருக்கிறார்களாம், — அந்தஸ்தையும் உயர்த்தி—

சர்மா: பப்ளிக் ரிலேஷன்ஸா? அப்பப்பா! இப்பொழுதுதான் எத்தனை எத்தனை இலாகாக்கள்!—எல்லாம் அவர்களுடைய 'மாமன் மச்சானு'க்கு உத்தியோகம் கொடுக்கத்தான்!

ஜா: சரியாய்ப் போயிற்று! ஹரிஹரன் உங்களுடைய மாப்பிள்ளை யாக்கும்! அவர்களுடைய மாமன் மச்சான் இல்லையே!

சர்மா: சரி, சரி, உளறாதே! கொஞ்சம் ஹரியைக் கவனித்துக் கொள். 'பார்ட்டிகள்' எல்லாம் அவனுக்கு இப்பொழுது அதிகமாகி விட்டதாம்! தெரிந்ததா? 'பார்ட்டி'களில் குடிப்பழக்கம் பிடிக்காதபடி சுசீலாதான் அவனைப் பார்த்துக் கொள்ள வேணும்.

சுசீலா: அவர் தானே-பெரிய பெரிய மனிதர்களை உபசரித்துக் கவனித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. விருந்துகள் இல்லாமல் 'பப்ளிக் ரிலேஷன்ஸ்' எப்படி? அவர்களோடு கொஞ்சம் பானத்தில் சேர்ந்து கொள்ளாமல் விருந்து எப்படி நடத்துவது? விருந்தாளிகளை எப்படி சந்தோஷப்படுத்த முடியும்?

சர்மா: ஆனால் ஸர்க்கார் இந்த விருந்துகளுக்குப் பணம் தருகிறார்களோ?

சுசீலா: அதற்கு ஒன்றும் 'அலவன்ஸ்' கிடையாது! ஆனால் உத்தியோகத்தில் நல்ல வேலை செய்து காண்பிக்க வேண்டுமோ, இல்லையோ? உபசரிப்பு நடத்தாமல் நல்ல பெயர் கிடைக்குமா!

சர்மா: பார், பார்! உங்கள் புது ஸர்க்கார் என்ன செய்கிறது, என்று! சரியான சம்பளம் கிடையாது. ஆனால் சிப்பந்திகள் எல்லாம் தேச பக்தர்கள் மாதிரி உழைக்க வேண்டுமாம்! தேசமாம், பக்தியாம். வெறும் பித்தலாட்டம்!

ஜா: இதோ பாருங்கள், அப்பாவும் தாத்தாவும் எப்படியோ அப்படித்தான் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் ஆவார்கள்!

நாம் தினமும் அவர்கள் எதிரில் செய்வதை, அவர்களைச் செய்ய வேண்டாம் என்று எப்படிச் சொல்லுவது?

சா: தர்மோபதேசம் போதும்! நிறுத்துங்கள்! இந்தத் தில்லுமுல்லெல்லாம் குழந்தைகள் செய்யாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். அவ்வளவுதானே?

ஜா: எப்படியானாலும், சிறுவர்களுக்கு மதுபானச் சரக்குக் கிடைப்பது கஷ்டமாக ஸர்க்கார் பண்ணி வருவது ரொம்ப நல்ல காரியமில்லையா?

சா: ஆமாம், ஒப்புக் கொள்கிறேன். விவாதத்தில் என்றைக்குமே நீ கெட்டிதான்! ஆனால் என்னைப் போய் இதைச் சாப்பிடு, இதைச் சாப்பிடாதே, இதைக் குடி இதைக் குடிக்காதே என்று கட்டாயப் படுத்துகிற இந்த சர்க்கார் முட்டாள்தனம் எனக்குச் சகிக்க முடியவில்லை! முழு கம்யூனிஸ்டுகளே தேவலை! நான் அதை வரவேற்பேன்!

ஜா: நான் உங்களோடு வாதாடவில்லை. உங்களுக்குக் கோபந்தான் வருகிறது. இப்பொழுது ஹரிஹரனிடம் என்ன சொல்வது? முடிவில் இந்தப் பழக்கம் அவனையும் பற்றிப் பிடித்துக் கொள்ளும் என்றே பயமாக இருக்கிறது.

சா: அது நமக்குத் தெரியாது. சுசிலா பாடு. அவள் புருஷன் பாடு!

[ஹரிஹரன் கையில் ஒரு பத்திரிகையோடு பரபரப்புடன் வருகிறார்.]

ஹரி.: தெரியுமா, சமாசாரம்! ஆந்திராவில் மது விலக்கை ஒழித்துக் கட்டிவிட ஓட்டுச் செய்து விட்டார்கள்! ஹாூம்! அருமையான செய்தி!

சா: என்ன என்ன! இது ஒரு நல்ல செய்தி என்று நீ நினைக்கிறாயா?

ஹரி: ஆமாம்! கட்டாயத்தினால் ஒரு விஷயத்தை வற்புறுத்துவது முட்டாள்தனம். ஆந்திராவில் இதை உணர்ந்து காரியம் செய்திருப்பது பற்றி எவ்வளவோ சந்தோஷம்!

சா: அதென்னவோ எனக்குத் தெரியவில்லை. 'வற்புறுத்தல்' என்று எதைச் சொல்லுகிறாய்? சர்க்காருக்கு வரும் வருமானத்தை உத்தேசித்துக் கடை வைத்து ஏழை மக்களுக்கு ஆசை காட்டுவது 'வற்புறுத்தல்' இல்லையா? ஒன்று சொல்கிறேன், ஹரி, மதுபானம் இளைஞர்களுக்கு அபாயம். அவர்கள் ஏமாந்து போகும்படி விடக் கூடாது. மதுவிலக்குச் சட்டம் எனக்கு ரொம்பப் பிடிக்கிறது. மதுவிலக்கு என்பது வலையில் விழுவதிலிருந்து தடுப்பதுதானே!

ஹரி: எனக்கு இந்தத் தத்துவம் எல்லாம் புரியவில்லை! சர்க்கார் வருமானம் என்ன ஆவது?

சா: இதோ பார், பைத்தியக்காரத்தனமாய்ப் பேசாதே. ஜனங்களைக் கள்ளிலும் சாராயத்திலும் கொண்டு போய்ப் பணத்தைக் கொட்டும்படி செய்வது, சர்க்கார்


தமிழ்நாடெங்கும்
ஜனவரி 14 உ வெளியீடு
விஜயா வின்
மிஸ்ஸியம்மா
பிரசாத்
தயாரிப்பு... நாகிரெட்டி & சக்ரபாணி


வியக்கத் தகுந்த புதிய வெளுக்கும் சாதனம்
துணிகளுக்கு
கண்ணைப் பறிக்கும் வெண்மையைத்
தருகிறது
டினோபால் பி வி என் ஓர் உயர்தர வெண்மை தரும் பவுடர். நீலம் போடுவதற்குப் பதிலாக உபயோகிக்கப்படுவது. துணிகளுக்கு இது வரை எப்பொருள் உபயோகிப்பதினாலும் ஏற்படாத, உண்மையில் கண்ணைப் பறிக்கும், வெண்மையைத் தருவது. டினோபால் சிக்கனமானதும் கூட! ஏனெனில் ஒரு தரம் உபயோகிப்பதால் ஏற்படும் வெண்மை 3 அல்லது 4 சலவைகள் வரை நீடித்திருக்கிறது. டினோபால் முதன் முதலாகவிட்டு உபயோகத்திற்கென ஒரு அவுன்ஸ் பிடிக்கும் அழகான பிளாஸ்டிக் புட்டியில் தயாரிக்கப்பட்டுள்ளது. இன்றே ஒரு டினோபால் புட்டி வாங்குங்கள். உங்கள் பருத்தி, பட்டாடைகளில் ஏற்படும் மாறுதல்களைக் கண்டு நீங்கள் ஆனந்திப்பீர்கள்.
குறிப்பு :— முன்பே சோப்பினால் சுத்தம் செய்து அலசிய துணிகளுக்கே டினோபால் பி வி என் உபயோகிக்க வேண்டும்.
எல்லா உயர்ந்த
கெமிஸ்ட்களிடமும் கடைகளிலும் கிடைக்கும்.
டினோபால்
டினோபால் பி வி என் ஓர் உயர்ந்த வெளுக்கும் சாதனம்!
Geigy
ஒரு கெய்கி தயாரிப்பு
அமால்கமேடட் கெமிகல்ஸ் & டைஸ்டப்ஸ் கம்பெனி லிமிடெட்,
தபால் பெட்டி நெ. 965, பம்பாய்.

வருமானத்துக்கு ஒரு வழியா? நிதி இலாகாவில் பத்து வருஷம் நான் இருந்ததுசும்மா போகாது தெரியுமா? இந்தப் பொய் வாதம் எல்லாம் நன்றாகத் தெரியும் எனக்கு!

ஹரி: மாமா, நீங்கள் பேசுவது புதிதாக இருக்கிறதே? என்ன நேர்ந்தது?

சர்: ஒன்றும் நேரவில்லை. இனி மேல் பர்மிட் வேண்டும் என்று நான் கேட்கப் போவதில்லை. அந்த விஷயமே நமக்கு வேண்டியதில்லை!

ஹரி: அப்படியானால் டாக்டர் சொன்னது?

சர்: ஓ! டாக்டரா! (சிரித்துக் கொண்டே) அவர் சொன்னார், இந்த மது விஷயமே எனக்கு நல்லதில்லை என்று! அவருக்குச் சரியானபடி 'பீஸ்' கொடுத்தேன், அவர் ஸர்டிபிகேட் கொடுத்தார்! லேசாகக் குடித்தால் என் உடம்புக்கு நல்லது என்று எழுதினார். எது நோய் செய்ததோ அதையே மருந்தாக எழுதிக் கொடுத்தார்! நம்முடைய குடும்ப டாக்டர் அபிப்பிராயமும் நான் சொல்லுகிறபடிதான்.

ஹரி: என்ன! ஏதேதோ வியாதிகள் பெயர்களையெல்லாம் 'லாடின்' பாஷையில் எழுதி உங்கள் உடம்புக்குக் கொஞ்சம் மதுஸாரம் ரொம்ப அவசியம் என்று குறித்திருந்தாரே!

சர்: ஆகா! தெரியுமே! அதற்கு எவ்வளவு விலை என்பது பணம் கொடுத்தவனுக்கல்லவா தெரியும்? — எனக்கு பர்மிட் வேண்டியதில்லை.

ஜா: ஹரி, அவரோடு வாதாடாதே! மாமா தீர்மானம் குடும்பத்துக்கே நல்லது.

சுசீலா: எனக்கும் அப்படித்தான் படுகிறது.

ஹரி: ஊஹும், தீர்மானமான முடிவுக்கு வருவதற்கு முன்னால் இன்னும் கொஞ்சம் யோசிக்க வேண்டும்.

சர்: யோசிப்பதா?—இல்லை. அது முடிவான விஷயம்.

ஹரி: ஆனால் நீங்கள் ராத்திரி தூங்க முடியாமல் இருப்பதும், உங்கள் நெஞ்சு படபடப்பதும், என்ன ஆவது?

சர்: அதன் விஷயம் எனக்குத் தெரியும். இரவு கொஞ்சம் உபாயமாகச் சாப்பிட்டு விட்டுப் படுத்தால் இந்தக் கோளாறு வராது! கொஞ்சம் பசியாக இருக்கும். ஆனால் சரியாகத் தூங்கி முழித்து விடுவேன்.

ஹரி: பர்மிட்டை விட்டு விடுவதற்கு முன்பு டாக்டரை ஒரு வார்த்தை கேட்டு விடுவது நல்லதல்லவா?

சுசீலா: ஆனால் பர்மிட்டிலே போட்டிருப்பதற்கு மேல் வாங்க முடியாதே, அதை வைத்துக் கொண்டு! ஒரு "யூனிட்"தானே கொடுக்கிறார்கள்?

ஹரி: ஓ! பரவாயில்லை. அதற்கெல்லாம் வழி உண்டு.

சர்: இல்லை, ஹரி! அதெல்லாம் நடவாது. நான் பழைய காலத்து ஆள். குடிக்கிறேன் என்றால், அதை வெளியே சொல்லுவேன். சொல்லிக் கொள்ள வெட்கமோ பயமோ என்றால் குடிப்பதையே நிறுத்தி விடுவேன்! எனக்கு வைராக்கியம் உண்டு, நான் தீர்மானித்தபடி ஒன்றைச் செய்ய அல்லது செய்யாமல் இருக்க! எனக்குப் புரட்டு பித்தலாட்டம் எல்லாம் பிடிக்காது.

ஜா: ரொம்ப சரி. ரொம்ப சரி.

சுசீலா (புருஷனைப்பார்த்து): அதுதான் சரி!

ஹரி: சரி, சரி! என் கட்சி தோல்வி!

சர்: நம் ஊர்க்காரன் ஒருவன் வந்து வாய்த்திருக்கிறானே செக்ரடரி – அவனுக்கு இப்பொழுதே 'டோஸ்' கொடுத்து ஒரு கடிதம் எழுதப் போகிறேன்—இந்தக் காலத்து அதிகாரிகள் எல்லாரும் மேலதிகாரியைப் புகழ்ந்து புகழ்ந்து 'ஆமாம்' போடுகிற ஆசாமிகளாக அல்லவா இருக்கிறார்கள்!

சுசீலா: (சிரித்தவாறு கணவனைப் பார்த்துக் கொண்டே) இங்கேயுள்ள அதிகாரிகளைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் அப்படித்தான்.

அன்புடையீர்,

அண்மையில் இரண்டு பெரிய தலைவர்கள் உலகத்துக்கு மிக மிக இன்றியமையாத செய்தியொன்றைக் கூறினார்கள் — எப்படிக் கூற வேண்டுமோ அப்படிக் கூறினார்கள்.

நமது மதிப்பிற்குரிய தலைவர் ராஜாஜி அவர்கள் அணுகுண்டுகளையெல்லாம் கடலிலே போடுங்கள் என்று மாபெரும் வல்லரசுகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

நமது அன்பிற்குரிய விஞ்ஞானப் பெருந்தகையான திரு சி. வி. ராமன் அணுகுண்டு உற்பத்தியாளர்களுக்கு, மாபெரும் மனித வர்க்கத்தையே அழிக்க முயல்பவர்களுக்குச் சுடச்சுடப் பதில் கொடுத்திருக்கிறார். அந்த விஞ்ஞான மேதை பேசும்போது அவரது உடல் உணர்ச்சி வசத்தால் ஆடியதாம் — உள்ளமும் கொதித்திருக்க வேண்டும்.

அணுகுண்டுகளைக் கடலிலே போட வேண்டும் என்ற தைரியமான ராஜாஜியின் வேண்டுகோளும் அணுகுண்டுகளை உற்பத்தி செய்பவர்கள் அவற்றைத் தங்களுக்குள்ளாகவே போட்டுக் கொள்ளட்டும் என்ற உணர்ச்சி மிக்க—உண்மை நிரம்பிய — ராமனின் பேச்சும், நமது பாரத பூமியிலிருந்து — புத்தரையும் சங்கரரையும் பிறப்பித்த மண்ணிலிருந்து உலகமெங்கும் பரவக் கேட்கப் பட்டிருக்கின்றன.

ஆம். ராஜாஜி — ராமன் பேச்சுக்கள், அரசியல் அறிஞரும் விஞ்ஞான மேதையும் உதிர்த்த கருத்துக்கள், இந்தியாவின் இரண்டு இணையற்ற குரல்கள்; உலகத்தின் ஆதிக்க மூல நோய்க்கு முழு மருந்து; சர்வாதிகாரப் பேராசைக்காரர்களுக்கு எதிராக ஆகிய உணர்வு விளைப்பும் எச்சரிக்கை முழக்கம்.

அந்தக் குரல்கள் நம் குரல்கள்; பர்மியர், இந்தோனேஷியர், நேபாளர், இலங்கையர் முதலியவர்கள் குரல்கள்-சமாதானத்தின் குரல்கள்—ஜவாஹரின் குரல்!

விஜயவாடா
7—1—55

கே. சி. லக்ஷ்மி நாராயணன்.

சர்மா : இந்த பர்மிட்டை எனக்கு வேண்டாம் என்று சொல்லி விட்டு ஒரு சூடான கடிதம் எழுதப் போகிறேன். (போகிறர்)

ஹரி : அப்பா சட்டுச் சட்டென்று தீர்மானத்துக்கு வருவார், அத்தனை சீக்கிரம் மாற்றியும் விடுவார்!

ஜா : ஹூம்! அவருக்கு ஒரு காலத்தில் எவ்வளவு வைராக்கியம் இருந்தது! பிடித்த பிடியாக இருந்தாரே அந்தக் காலத்தில்!

சுசீலா :— இந்த மதுபானம்தான் வைராக்கியத்தைக் கெடுத்து விடுகிறது என்று டாக்டர்கள் சொல்கிறார்களே!

ஹரி : மண்ணாங்கட்டி! எத்தனையோ வைராக்கிய மன்னர்களை யெல்லாம் பார்த்திருக்கிறேன், நன்றாகக் குடிப்பார்கள், நன்றாகவே இருப்பார்கள். ஏதோ சில்லறைப் பத்திரிகைகளைப் படித்து விட்டுப் புத்திசாலியாகிவிடப் பார்க்காதே!

சுசீலா : மற்றவர்கள்தான் பெரிய புத்தகங்களைப் படிக்கிறார்களா? கொண்டு வந்து பீரோவில் அலங்காரமாகத்தானே வைத்திருக்கிறார்கள்!

ஹரி : நல்ல போடு போட்டாயடியம்மா! பேஷ்! இனிமேல் நமக்குள் சச்சரவு வேண்டாம்! அப்பா தீர்மானம் செய்கிறார், ஆனால் அவரால் நிறைவேற்ற முடியாது என்று எனக்குத் தெரியும்!

ஜா : நாம் அவருக்கு மனோபலம் தந்து ஒத்தாசை செய்யவேண்டுமே தவிர, இப்படியெல்லாம் அதைரியப்படுத்தக்கூடாது. நல்லமுடிவுகள்செய்து தெய்வத்தை நம்பினால், ஒருபொழுதும் கடவுள் நம்மைக் கைவிட மாட்டார்.


ஹரி : அதாவது, கடவுள் என்று நீங்கள் அழைக்கிற ஒருவர் இருந்தால்......?

சுசீலா : இந்த மாதிரி யெல்லாம் நாஸ்திகம் பேசாதீர்கள். நாமே இந்தப் போக்கிலே போனால் நம் குழந்தைகள் என்ன ஆகும்? உங்கள் திருக்கூட்டம் எல்லாம் யாராவது 'ஸையன்டிஸ்ட்' என்று பெயர் வைத்துக் கொண்டு சொன்னால் எதையும் நம்பிவிடுவீர்கள்! எனக்கென்னவோ கடவுள் என்கிற நம்பிக்கைதான் பிடிக்கிறது. காணாததெல்லாம் இல்லை என்று சொல்லி விடலாமா?

ஹரி : நீ சொல்வது சரியாக இருக்கலாம் என்று நினைக்கிறேன். இப்போது அணுவுக்குள் பெரும் சக்தியைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். மனித உள்ளத்திலும் அதிசய சக்திகள் இருக்கலாம். உலகம் அளாவிய சக்தியின் அலைகள், எங்கேயெல்லாமோ இருக்கலாம். என்னவெல்லாமோ செய்யலாம்!

ஜா : அலைகளோ, கலைகளோ! தெரியாது. ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரியும், குடிப்பது அறிவைக் கெடுத்து விடுகிறது. அந்தக் காலத்தில் அவர் எப்படி இருந்தார் தெரியுமா!

அணு குண்டு அக்ஷதை!



அணுகுண்டைத் தயாரித்தவர்கள் பரஸ்பரம் தங்கள் தலையிலேயே போட்டுக் கொண்டால் உலகத்துக்கு க்ஷேமம் உண்டாகும் என்று விஞ்ஞானி பாரதரத்ன ஸி. வி. ராமன் சொன்னார்.



"அதற்குச்
சிறிதும்
சந்தேகம்
கிடையாது
அவர்
வெகு அழகாக
அணிந்து
கொண்டிருப்பது
பின்னிமில்
துணிகளே"
வாங்குமிடம் :
வெங்கடேஷ்
வஸ்திராலயா
இங்கு வாங்குவதே ஒரு ஆனந்தம்
ரீடேய்ல் ஷோரூம் :
வெங்கடேஷ் வஸ்திராலயா
2, தம்பு செட்டித் தெரு (போன் : 4688) மதராஸ்-1


HINDOOSTHAN
KANE (MADRAS) LTD
HLM 1955

ரானே ஸ்தாபனத்தின் வெள்ளி விழா!

கடந்த டிஸம்பர் 27-ந் தேதி சென்னை ரானே லிமிடெட் ஸ்தாபனத்தார் அந்த ஸ்தாபனத்தின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவை யொட்டி வெள்ளி விழாக் கொண்டாடினார்கள். அப்பொழுது, புதிதாக அமைக்கப்பட்டு விற்பனைக்குத் தயாராக இருக்கும் "ஹிந்துஸ்தான் லாண்ட் மாஸ்டர்" புதிய காரைக் குறித்து ஸ்தாபனத்தின் மானேஜிங் டைரக்டர் ஸ்ரீ எல். எல். நாராயணன் பத்திரிகை நிருபர்களுக்கு எடுத்துச் சொன்னார்.

இந்த வெள்ளி விழா நிகழ்ச்சியானது, சென்னை ரானே ஸ்தாபனத்தின் ஸ்தாபகர் ஸ்ரீ டி. ஆர். கணபதி ஐயர் அவர்களுடைய நீண்ட நாள் உழைப்பின் சிகரமாகும். வெகு காட்களுக்கு முன் அவர் கண்ட உன்னதமான கனவே இன்று நனவாகிறது என்று சொல்ல வேண்டும்.



ஸ்ரீ டி. ஆர். கணபதி ஐயர்

சென்னை ரானே ஸ்தாபனத்தின் ஸ்தாபகர் ஸ்ரீ டி. ஆர். கணபதி ஐயர் அவர்கள் ஆரம்பத்தில் ஒரு சிறு ஸ்தாபனமாக இதைத் தொடங்கி, உறுதியான உழைப்பினாலும், தளராத ஊக்கத்தினாலும் இந்த ஸ்தாபனத்தை இப்படி வளர்த்தார். திருச்சூரில் நான்காவது பாரம் படித்துக் கொண்டிருந்தபோதே தமது கல்வியை நிறுத்த நேர்ந்த கணபதி ஐயர் அவர்கள், தமது பதினேழாவது வயதில் பம்பாய்க்குச் சென்றார். ஒரு ஐரோப்பிய அலுவலகத்தில் குமாஸ்தாவாகச் சேர்ந்து ஏழு வருஷம் உழைத்தார். அந்த ஏழு வருஷத்தில் அவர் சாதித்த சாதனை அபாரமானது. பத்து மணிக்கு வந்து ஐந்து மணிக்கு வீட்டுக்குச் செல்லும் குமாஸ்தாவாக அவர் இருந்திருந்தால் குமாஸ்தாவாகவே அவர் வாழ்வு முடிந்திருக்கும். ஆனால் ஸ்ரீ கணபதி ஐயர் தமக் கிட்ட பணிகளைச் செய்ததுடன் திருப்தியடையாமல் தாம் ஈடுபட்டு உழைத்த ஸ்தாபனத்தின் வளர்ச்சியை விரும்பிப் பாடுபட்டார். அவருடைய திறமையைக் கண்டு ஐரோப்பிய முதலாளிகள் வியந்து பாராட்டினர்.

அவருடைய திறமை இதர தொழில் ஸ்தாபன அதிபர்கள் மத்தியிலும் பரவியது. பின்னர் பம்பாய் ரானே ஸ்தாபனத்தின் நிர்வாகிகளான 'எம்பயர் ஆட்டோ மொபீல்'லில் ஒரு சாதாரண டைப் அடிக்கும் குமாஸ்தாவாகச் சேர்ந்தார்.

இரண்டே ஆண்டுகளில் தமது சாமர்த்தியத்தினாலும் உழைப்பினாலும் உயர்ந்தார். கணபதி ஐயர் அவர்களின் நிர்வாகத் திறமையும், சலியாத ஊக்கமும் அவருக்கு மேலும் துணை செய்தன. இதன் பயனாக, பம்பாய் ரானே ஸ்தாபனத்தின் பங்குதாரராகி, பின்னர் சென்னைக் கிளைக்கு நிர்வாகியாகிப் பிறகு சென்னையில் 'ரானே' என்ற பெயருடன் ஒரு தனி ஸ்தாபனமே நிறுவக் கூடிய அளவுக்கு முன்னேற்றம் அடைந்தார். அவருடைய நாணயத்தினாலும், வியாபார ஒழுக்கத்தினாலும் இந்த ஸ்தாபனம் விரைவாக வளர்ச்சியுற்று மோட்டார்த் தொழிலிலேயே ஒரு முக்கிய ஸ்தாபனமாக இன்று விளங்குகிறது.

தாம் ஆரம்பித்து வளர்த்த ஸ்தாபனத்தின் பூரண உயர்வையும் கண்டு களிக்க முடியாமல் 1946-ம் ஆண்டு ஸ்ரீ கணபதி ஐயர் மறைந்தார். இதன் பின்னர் இந்தப் பெரிய ஸ்தாபனத்தின் நிர்வாகப் பொறுப்பை ஸ்ரீ கணபதி ஐயர் அவர்களின் மருமகன் ஸ்ரீ எல். எல். நாராயணன் ஏற்றுத் திறம்பட நடத்தி வருகிறார். ஸ்ரீ கணபதி ஐயர் அவர்களின் புதல்வர் ஸ்ரீ டி. ஜி. கே. ராமன் அவர்கள் இதன் டைரக்டராகவும் தொழில் நுட்ப நிர்வாகியாகவும் அமர்ந்து துணை செய்து வருகிறார்.

இந்த இரு திறமைசாலிகளின் கூட்டு முயற்சியாலும் வெள்ளி விழாக் கொண்டாடிய இந்தச் சென்னை ரானே ஸ்தாபனம் மோட்டார்த் தொழிலில் மேலும் மேலும் வளர்ந்து நமது நாட்டிலேயே ஒரு முக்கிய ஸ்தாபனமாக உயருமாக!

இந்த வெள்ளி விழாக் காட்சிகளில் சிலவற்றை எதிர்ப் பக்கத்தில் காணலாம்.



நீங்கள் மலேரியாவிலிருந்து
நிவர்த்தி அடையலாம்
நிச்சயமாக – ஆபத்தில்லாமல் – குறைந்த செலவில்
'பாலுட்ரின்'
மலேரியாவை வீழ்த்துகிறது
மலேரியாவின் சின்னங்கள்:
முதலில் குளிரால் நடுக்கமுண்டாகும். ஜுரம் ஆரம்பமாகும். பிறகு உடம்பு முழுவதும் வியர்த்து வலி உண்டாகும். இந்த அறிகுறிகள் ஏற்பட்டால் உடனேயே டாக்டரைப் பாருங்கள்.
எப்பொழுதும் 'பாலுட்ரின்' சாப்பாட்டிற்குப் பிறகு ஒரு டம்ளர் தண்ணீருடன் உட்கொள்ளுங்கள்.
வயதுவந்தவர்களுக்கும் 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும்: ஒரு மாத்திரை. (0.3 Gm.)
6 லிருந்து 12 வயதுவரையுள்ள குழந்தைகளுக்கு: அரை மாத்திரை
6 வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கு: கால் மாத்திரை
தினந்தோறும் ஜுரம் குணம் அடையும் வரை கொடுக்கவும்.
ICI
ICP 288




அத்தியாயம் 33

"தந்தி வந்தது!"

நான் சமையல் அறையில் காரியமாக இருந்தேன். "இந்துமதி!" என்று கூப்பிடும் குரல் கேட்டது. ரங்கதுரையின் குரல்தான். ஓட்டமாக ஓடினேன். நேற்று மாலையிலிருந்து ரங்கதுரை எதற்காக அவசரமாகப் போயிருப்பார்? தங்க பாண்டியன் சொல்லி யனுப்பியதற்குக் காரணம் என்னவாக இருக்கும் என்று கவலைப்பட்டுக் கொண்டே யிருந்தேன். அவருடைய குரலைக் கேட்டதும் ஆவலுடன் விசாரிப்பதற்காக ஓடினேன்.

என்னைக் கண்ட உடனேயே அவர், "இந்து எனக்குச் சென்னையிலிருந்து தந்தி வந்திருக்கிறது. நான் உடனே சீமைக்குப் போகிறேன். அதற்கு உத்தரவு வந்து விட்டதாம். என் கல்லூரியின் பிரின்ஸிபல் தந்தி அடித்திருக்கிறார்" என்று சொல்லிக் கொண்டே போனார். என் முகம் மாறியதையும், கண்களில் நீர் ததும்பி வழியத் தயாராக நின்றதையும் அவர் கவனித்து விட்டு, "அடி அசடே, நான் சீமைக்குப் போவது தான் முன்னாலேயே தெரிந்த விஷயமாயிற்றே. நீ எதற்கு இப்படிக் கலங்குகிறாய்? தைரியமாக இருக்கிறேன் என்று நேற்றுச் சொன்னாயே. இன்றைக்கு என்ன வந்து விட்டது?" என்றார். நான் பதிலே சொல்லாமல் சமையல் அறைக்குள்ளே போய்ப் புகுந்து கொண்டேன். கண்களிலிருந்து பெருகிய கண்ணீரை என்னால் நிறுத்தவே முடியவில்லை. சிறிது நேரம் கழித்து நான் மறுபடியும் வாசல் அறைக்குச் சென்றேன். அப்பாவும் ரங்கதுரையும் பேசிக்கொண் டிருந்தார்கள்.



"நேற்று எங்கள் கல்லூரி பிரின்ஸிபலிடமிருந்து தந்தி வந்திருந்த படியால் தான் தங்க பாண்டியன் அவ்வளவு அவசரமாகக் கூப்பிட்டனுப்பினான். அதைப் பார்த்த உடனேயே சில முக்கியமான கடிதங்கள் எழுதி விட்டு, சாமான்களையெல்லாம் சேகரித்துக் கொண்டு புறப்படத் தயாராகி விட்டேன். இன்றே புறப்படுவதாக இருந்தேன். ஆனால் சொக்கையா நாளை விருந்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறாராம். அது ஆன பிறகுதான் போக வேண்டும் என்று கண்டிப்பாய்ச் சொல்லி விட்டார்கள். நாளை இரவு ஒன்பதரை மணிக்குத் திருநந்தி புரத்துக்குப் போய் ரயிலேற வேண்டும். காரில் போவதால் இங்கிருந்து எட்டு மணிக்குப் புறப்பட்டால் போதும்" என்று ரங்கதுரை சொல்லிக் கொண்டிருந்தார்.

நான், "சொக்கையா யாருக்கு விருந்து வைக்கிறார்?" என்று கேட்டேன்.

"எனக்குத்தான், இந்து. நான் சீமைக்குப் போகிறேனல்லவா? அதற்காக உபசார விருந்து!"

"அது என்ன சொக்கையா விருந்து வைக்கிறார்? அவருக்குத் தான் உங்களைப் பிடிக்காதே."

"இல்லை, இந்து! இப்போது சொக்கையாவின் மனம் மாறி விட்டது. இரண்டு மூன்று நாட்களாகவே சற்று சகஜமாக இருந்தார். நேற்று முதல் ரொம்பவும் கலகலப்பாக இருக்கிறார். சந்தோஷமாக மனம் விட்டுப் பேசுகிறார்.

என்னை அவருக்கு எப்படியோ திடீரென்று பிடித்து விட்டது!"

"ஆமாம்! திடீரென்று பிடித்து விட்டதாக்கும். நீங்கள் போவதற்காக சந்தோஷப்பட்டுக் கொண்டிருப்பார்."

எனக்கு என் தந்தை காசிலிங்கம் இந்தச் சொக்கையாவிடம் சிநேகமானது என்ன காரணத்தாலோ என் தாயாருக்குப் பிடிக்காம லிருந்தது நினைவுக்கு வந்தது.



அதற்குள் ரங்கதுரை, "எதற்காக அப்படி அர்த்தம் செய்து கொள்ள வேண்டும்? உண்மையிலேயே மனம் மாறியிருந்தாலும் இருக்கலாம். ஆனல் மாருவிட்டாலும் பெரிய நஷ்டம் ஒன்றும் இல்லையே? விருந்து கொடுத்தால் சாப்பிட்டுவிட்டுப் போகிறது. அதில் எதற்கு மனக் கசப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்?" என்ருர்.

"சரி, பேஷாக விருந்து சாப்பிடுங்கள். ஆனல் அதற்காக அவர் பேச்சில் மயங்கி விட வேண்டாம். எங்கள் சுசீலாதேவி சொக்கையாவைப் பற்றிச் சொன்னதை நீங்கள் கேட்டிருந்தால் இப்படி யெல்லாம் பேச மாட்டீர்கள்."

"ஒருவருக்குப் பிடிக்காதவரை இன்னெருத்தருக்குப் பிடிக்காம லிருக்குமா, என்ன? ஒருவர் சொன்னதை வைத்துக் கொண்டு நாம் இன்னெருவரை அவசரப்பட்டு மதிப்பிடக் கூடாது. அவரவர்களுடைய அனுபவத்திலிருந்து தான் மதிப்பிட வேண்டும்."

"நீங்கள் சொல்வது ரொம்ப உண்மை. ஆனல் சுசீலாதேவி ஒரு நாளும் இன்னெருவரைப் பற்றிக் குறை கூறவே மாட்டார். அவர் அன்பின் வடிவம். அவருக்கே ஒருவரைப் பிடிக்காமலிருக்க வேண்டும் என்ருல் நிச்சயமாக அந்த மனிதர் மிக மோசமானவராகத்தான் இருக்க வேண்டும். அதில் எனக்குச் சிறிதும் சந்தேகமே இல்லை."

"இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும், தேவி? நானை விருந்துக்கு வர முடியாதென்று சொல்லி விட்டு இன்றிரவே ஊருக்குக் கிளம்பி விடட்டுமா?" என்று தமக்கே உரியதான குறும்புப் புன்னகையுடன் கொஞ்சுவது போல் கேட்டார் ரங்கதுரை.

இதற்கு என்ன பதில் சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை.

"நீங்கள் கட்டாயம் விருந்து சாப்பிடத்தான் வேண்டும். ஆனல் அதற்காகச் சொக்கையாவை நல்லவன் என்று சொல்ல வேண்டாம்" என்றேன்.

ரங்கதுரை அப்பாவிடம், "இந்தப் பெண்களே இப்படித்தான். நாம் உண்டு என்ருல் அவர்கள் இல்லை என்று தர்க்கம் செய்வார்கள். இல்லை என்ருல் உண்டு என்பார்கள். ஒவ்வொரு பெண்ணும் வக்கீல் வேலையில் நன்ருகப் பிரகாசிப்பார்கள். வக்கீல்களின் தொழிலே தர்க்கம் செய்வதுதானே?" என்ருர்.

என் தந்தை மந்திரமூர்த்தி, "அதிலும் இந்து பேசினல் பிரதம ஜட்ஜ் கூட, 'அம்மா! இதோ நீ சொல்கிறபடி கேட்டு விடுகிறேன்' என்பார். நீதான் கல்யாணம் பண்ணிக் கொண்ட பிறகு இந்துவைச் சட்டக் கல்லூரியில் சேர்த்து விடேன்" என்ருர்.

அன்று முழுதும் எனக்கு ஒரு வேலையும் ஓடவில்லை. இனந் தெரியாத ஒரு வேதனை உள்ளத்தை அரித்துக் கொண்டே இருந்தது. ரங்க துரையை நான் சந்தித்து ஒரு மாதம்தான் ஆகியிருந்தது. அதற்குள் எப்படி என் மனம் அவரிடம் அவ்வளவு தூரம் ஈடுபட்டதென்பதை எண்ணி வியந்தேன். அவ்வளவு குறுகிய காலம் பழகிய ஒரு மனிதரைப் பிரிவதற்கு இத்தனை வருத்தம் ஏற்படக் காரணமென்ன என்பது எனக்குப் புரியவே இல்லை. 'அன்பு' என்பது இன்பத்தைத் தருவதா அல்லது துன்பத்தைத் தருவதா? கண்ணுக்குப் புலப்படாத இந்த அன்பு எப்படியெல்லாம் நம்மை ஆட்டி வைக்கிறது என்று எண்ணிக் கொண்டே மாட்டுக் கொட்டிலுக்குச் சென்றேன்.

தண்ணீர் காட்டும்போது என் அருமைக் கன்றுக்குட்டி வில்லி என்னை விளையாட்டாக முட்டியது. நான் அதன் அருகில் உட்கார்ந்து அதன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, "வில்லி! உன்னை நான் கொஞ்ச நாளாகச் சரியாகக் கவனிக்கவில்லை என்று கோபமா? இனிமேல் எனக்கு நீதான் சிநேகிதி. புதிய சிநேகத்தில் உன்னை மறந்து போய்விட்டேன். இனிமேல் உன்னை மறக்க மாட்டேன், சரியாகக் கவனித்துக் கொள்கிறேன்" என்று சொல்லிக் கொண்டிருந்தேன்.

பின்னால் சிரிக்கும் சத்தம் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

ரங்கதுரைதான் வாசற்படிச் சட்டத்தைப் பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தார். அவர் சிரித்துக் கொண்டு சந்தோஷமாக இருந்தது என் ஆத்திரத்தைக் கிளப்பி விட்டது.

“என்னை விட்டுப் போகிறதற்காக சந்தோஷப்படுகிறீர்களாக்கும்?” என்றேன்.

“சே! என்ன இப்படிச் சொல்கிறாயே? ‘புதிய சிநேகம்’ என்று லில்லியிடம் நீ சொல்லிக் கொண்டிருந்தாய், அல்லவா? அதற்குத்தான் சிரித்தேன்.”

“ஏன்? அதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது?” என்று கேட்டேன்.

“எனக்கு அப்படித் தோன்றவில்லையே என்று அதிசயமாக இருக்கிறது. யுகம் யுகமாய் உன்னோடு பழகியிருப்பது போலவும், இன்னும் எத்தனையோ யுகங்கள் உன்னுடன் நான் வாழ்க்கை நடத்தப் போவது போலவுமேதான் எனக்குத் தோன்றுகிறது. நீ என்னுடையவளாகவேதான் தோன்றுகிறாய். இப்படி இருக்கையில் ‘புதிய சிநேகம்’ என்று நீ சொன்னால் நான் சிரிக்காமல் என்ன செய்வது?” என்றார் ரங்கதுரை.

என் உள்ளம் நெகிழ்ந்து போயிற்று. “உங்களைப் பிரிய வேண்டியிருக்கிறதே என்ற வருத்தத்தில் ஏதேதோ பிதற்றுகிறேன். தயவு செய்து மன்னித்து விடுங்கள்” என்றேன் நான்.

“எனக்குத் தெரியாதா, இந்து? நீ சந்தோஷமாக விடை கொடுத்தால்தான் நான் நிம்மதியோடு போய் விட்டு வர முடியும். உன்னை இன்னும் இரண்டு வருஷங்கள் நான் பார்க்க முடியாது. அந்த இரண்டு வருஷங்களும் உன்னுடைய மலர்ந்த முகம் என் முன்னே தோன்றிக் கொண்டிருக்க வேண்டாமா? நீ இப்போது அழுதால், உன் கண்ணீர் வழியும் முகம்தான் எனக்கு நினைவிருக்கும். அது எனக்கு உற்சாகமாக இருக்குமா?”



“நீங்கள் நிஜமாகவே என்னை நினைவு வைத்துக் கொள்வீர்களா?”

“ஏன், கதைகளில் வருவது போல் சத்தியம் செய்து கொடுக்க வேண்டுமா? ஆகாச வாணி, பூமிதேவி சாட்சியாக, இந்த மாட்டுக் கொட்டில், மாடுகள், கன்றுக் குட்டிகள் சாட்சியாக......”

“வேண்டாம், வேண்டாம்! இப்படியெல்லாம் சத்தியம் செய்யாமலேயே நினைவு வைத்துக் கொண்டால் போதும். ‘பிரயாணத்துக்கு இன்னும் ஆறு மாதம் இருக்கிறது. அதற்குள் உன்னை வந்து பார்த்து விட்டுப் போகிறேன்’ என்று சொன்னீர்களே. நீங்கள் இவ்வளவு சீக்கிரம் புறப்பட்டு விடுகிறீர்களே என்றுதான் வருத்தமாக இருக்கிறது.”

“ஏன், இந்து! சீக்கிரம் போனால் நல்லதுதானே. இன்னும் ஆறு மாதத்துக்குப் பிறகு போனேன் என்றால் திரும்பி வரும்போது இரண்டரை வருஷம் ஆகி விடுமல்லவா? இப்போது புறப்பட்டால் சரியாக இரண்டு வருஷம் தானே ஆகும்? அதனால் கடவுள் நம்மை இன்னும் சீக்கிரம் சேர்த்து வைக்க விரும்புகிறார் என்றே நினைக்கிறேன்.”

“அப்படியே இருக்கட்டும். உங்களுக்கு நாளைக்குத்தானே சொக்கையா விருந்து வைக்கிறார். இன்று என் விருந்தை இருந்து சாப்பிட்டு விட்டுப் போகலாமல்லவா?”

“கட்டாயம், நீ சொல்லா விட்டாலும் இங்குதான் சாப்பிடுவதென்று முன்னாலேயே தீர்மானித்து விட்டேன். நான் சீமையிலிருந்து திரும்பி வரும் வரை உடம்பைப் பார்த்துக் கொண்டு தைரியமாக இருக்கிறாயா?”

“அதெல்லாம் சரிதான். நீங்கள் தவறாமல் கடிதம் எழுத வேண்டும். உங்கள் விலாஸம் எனக்கு எப்படித் தெரிவிப்பீர்கள்?” என்று கேட்டேன்.

“இந்து! அங்கு போய்ச் சேர்ந்தவுடன் விவரமாகக் கடிதம் எழுதுகிறேன். இப்போது எனக்கே ஒன்றும் தெரியவில்லை. கல்லூரி பிரின்ஸிபலைச் சந்தித்த பிறகுதான் எனக்கு விவரங்கள் தெரியும். அதெல்லாம் தெரிந்தவுடனேயே உனக்குச் சென்னையிலிருந்து கடிதம் எழுதி விடுகிறேன்.”

“சரி! உள்ளே வாருங்கள். சாப்பிட நாழியாகிறது.”

“இந்து! மாலை கட்டாயம் பாதிரித் தோட்டத்துக்கு வருகிறாயா?”

“கண்டிப்பாய் வருகிறேன்!”

அப்பா என்னைக் கூப்பிடுவது கேட்டது. நான் ஓடினேன்.

சாப்பிட்ட பிறகு ரங்கதுரை வெகு நேரம் வரையில் அப்பாவிடமும் அய்யாக்

குட்டியிடமும் சிரிக்கச் சிரிக்கப் பேசிக் கொண்டிருந்தார்.


அய்யாக்குட்டியும் இன்று கலகலப்பாக இருந்தார். ஆனால் அவர் அப்படி இல்லாம லிருப்பதே நலம் என்று எனக்குத் தோன்றியது. ஏதேதோ விரஸமாகப் பேசினார். இங்கிலாந்து தேசத்தின் பழக்க வழக்கங்களைக் கேலி செய்தார். ரங்கதுரைக்கு அப்படியெல்லாம் அவர் பேசுவது பிடிக்கவில்லை என்று நன்றாகத் தெரிந்தது.

"ஜாக்கிரதையாக இருங்கள், மிஸ்டர் ரங்கதுரை! இங்கிலாந்தில் இங்கிலீஷ் 'கர்ல்ஸ்' எல்லாம் ரொம்ப முன்னேறி யிருக்கிறார்களாம். என் சிநேகிதர் ஒருவர் இங்கிலாந்தி லிருந்து திரும்பி யிருக்கிறார். உங்களைப் போன்ற இளம் வயதினரை எல்லாம் வலையில் போட்டுக் கொள்ள முயற்சிப்பார்கள். கொஞ்சம் அசந்து விட்டால் தொலைந்தீர்கள்!" என்றார் அய்யாக்குட்டி.

எனக்கு ஆத்திரம் பொங்கி வந்தது. ஆனால் அதற்குள் என் தந்தை, "சீச்சீ! என்ன இப்படியெல்லாம் பேசுகிறாய், அய்யாக்குட்டி! அதெல்லாம் சுத்தப் பொய். எந்த தேசத்திலும் கழிசடைகள் சில பேர் இருப்பார்கள். அதற்காக எல்லாரையும் நிந்திக்கலாமா? அப்படிப் பேசாதே, இனிமேல்!" என்று சொன்னார்.







அதன் பிறகு அய்யாக்குட்டி அடங்கி விட்டார். இங்கிலாந்து தேசத்தின் சீதோஷ்ணம், தாவரம், வியாபாரம் முதலியவற்றைப் பற்றி மட்டுமே பேசினார்.

பிறகு, "மிஸ்டர், ரங்கதுரை! நீங்கள் இங்கிலாந்துக்கு மாத்திரம் போய்ப் பிரயோஜனமில்லை. அங்கிருந்து ஸ்காண்டினேவியாவுக்குப் போக வேண்டும். அந்தமாதிரியான இடம் உலகத்திலேயே கிடையாது, தெரியுமா?" என்றார்.

"ஸ்காண்டினேவியாவா? அது எங்கே இருக்கிறது?" என்று கேட்டார் மந்திரமூர்த்திப் பண்ணையார்.

"ஸ்காண்டினேவியா இங்கிலாந்துக்குக் கிழக்கே இருக்கிறது. நார்வே,ஸ்விடன்என்று இரண்டு தேசங்கள் அந்த தீப கற்பத்தில் இருக்கின்றன. அந்த

தேசத்தில் அத்தனை பேரும் விவசாயிகள் தான். ஆனால் அத்தனை பேரும் பணக்காரர்கள்!'' என்றார் அய்யாக்குட்டி.

ரங்கதுரை, "அதெல்லாம் சரிதான். ஸ்காண்டினேவியாவுக்கும், ஸ்விட்ஸர்லாந்துக்கும் போய் உல்லாசமாகப் பிரயாணம் செய்ய எனக்கு அரசாங்கத்தில் பணம் கொடுக்க மாட்டார்களே!'' என்று சிரித்துக் கொண்டே கூறினர்.

அய்யாக்குட்டி ரங்கதுரையின் பேச்சைக் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. தமக்குத் தெரிந்ததையெல்லாம், — தெரியாததைக் கூட—சொல்லி மந்திர மூர்த்தியைப் பிரமிக்கச் செய்து விடவேண்டுமென்று அவருக்கு ஆசையிருந்ததாகத் தோன்றியது.

"நார்வேயில் பேப்பர் நிறையச் செய்கிறார்கள். நார்வேக்காரர்களே ரொம்ப கெட்டிக்காரர்கள். இங்கிலீஷ்காரர்கள் இவர்களிடம் பிச்சை வாங்க வேண்டும். உலகத்திலேயே நார்வே தேசத்தாருக்குத்தான் சராசரி வயது அதிகம். எல்லாரும் அவ்வளவு படிப்பாளிகள்!''— இப்படி அளந்து கொண்டே போனர்.

"ஆமாம்! சராசரி வயது அதிகமாக இருப்பதற்கும் படிப்புக்கும் என்ன சம்பந்தம்?'' என்று கேட்டு விட்டேன்.

ரங்கதுரை பரிகாசமாக, "என்ன, இந்து! இதுகூடத் தெரியவில்லையா உனக்கு? படித்தால்தானே உடம்பை நன்ருக வைத்துக் கொள்ளத் தெரியும்! நார்வேயில் ஒவ்வொருவருக்கும் சராசரி எழுபத்தாறு வயதாம். அதனுலேயே அவர்கள் ரொம்பப் படித்தவர்கள் என்று தெரியவில்லையா?'' என்ருர்.

ரங்கதுரை கேலி செய்கிருர் என்று அய்யாக்குட்டிக்குத் தெரிந்து கோபம் வந்து விட்டது. "என்னைப் பரிகாசம் செய்கிறீர்களா?'' என்று கேட்டார்.

"நீங்கள் திரிலோக சஞ்சாரியான நாரதரைப்போல் விஷயங்களைச் சேர்த்து வைத்திருந்து சொல்லுகிறீர்கள். உங்களைப் போய் நான் பரிகாசம் செய்வேனு?'' என்ருர் ரங்கதுரை.

"என்னைக் கலகக்காரன் என்று சொல்லுகிறீர்களா, மிஸ்டர் ரங்கதுரை?'' என்ருர் அய்யாக்குட்டி.

நானும் என் தந்தையும் சிரித்து விட்டோம். தாம் சிரித்ததை மறைப்பதற்காக என் தந்தை உடனே என்னைக் கோபித்துக் கொண்டார். "இந்து! எதற்காக இப்படிச் சிரிக்கிருய்? சந்தர்ப்பமே தெரியாது உனக்கு'' என்று சொல்லி விட்டு அய்யாக்குட்டியைச் சமாதானப் படுத்தினர்.

"நீயாக எதையாவது நினைத்துக் கொள்ளாதே, அய்யாக்குட்டி. சின்ன வயதிலிருந்த மாதிரியே கோபக்காரனுக இருக்கிருயே? விளையாட்டாகச் சொன்னல், அதைப் போய்ப் பிரமாதப் படுத்தாதே'' என்ருர்.

"நேரமாகி விட்டது. நான் வருகிறேன்'' என்று சொல்லி விட்டு ரங்கதுரை என் தந்தைக்கு சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார். என் தந்தை தம் மடியிலிருந்த விபூதி சம்புடத்தை எடுத்துக் கொஞ்சம் விபூதியை ரங்கதுரையின் நெற்றியில் இட்டு விட்டு, "உன் பிரயாணம் சுகமாக முடிய வேண்டுமென்று குங்கும நாயகியைப் பிரார்த்திக்கிறேன். அருவிக்கரை விநாயகருக்கும், குங்கும நாயகிக்கும் உன் பெயரில் அர்ச்சனை செய்யச் சொல்லுகிறேன்'' என்ருர்.

"நாளைக்கு முடிந்தால் வருகிறேன். சில முக்கியமான காரியங்கள் இருப்பதால் ஒருவேளை நேரமிருக்காது. தங்கபாண்டியனுக்குச் சில உதவிகள் செய்வதாகக் கூறியிருக்கிறேன். இந்த ஜமீன் அதிகார பூர்வமாக அவன் கைக்கு வருவதற்குச் சில ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இன்னும் ஒரு வாரத்தில் செய்து விடலாமென்று நினைத்துக் கொண்டிருந்தேன். நாளைக்கே போக வேண்டியிருப்பதால், இன்றைக்கும் நாளைக்குமாகச் செய்ய வேண்டியதைச் சீக்கிரம் செய்து விட்டு நான் புறப்பட வேண்டும். நேரமிருந்தால் கண்டிப்பாய் வருகிறேன்'' என்று விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார் ரங்கதுரை.

அத்தியாயம் 34

"போவதும் எங்கேயோ?''

மாலை ஆவலுடன் பாதிரித் தோட்டத்துக்கு ஓடினேன். என்னென்னவோ சொல்ல வேண்டும் என்று எண்ணிக் கொண்டே போனேன். அவர் என் உடம்பைக் கவனித்துக் கொள்ளச் சொன்னரே. நான் 'உங்கள் உடம்பைச் சரியாகக் கவனித்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லவில்லையே என்று வருத்தமாக


ராய்சவுத்ரி
நடனக்குழுவுடன்
பொங்கல்
வணக்கத்தைச்
செலுத்துகிறார்


அழகை அதிகரிக்க உதவும் அற்புத
சாதனங்கள்
TSR
சந்தனாதித் தைலம்
அரக்கீரை விதைத் தைலம்
கோகுல் கூந்தல் தைலம்
அரகஜா
ஸ்னாப் பவுடர்
டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம், தென்னிந்தியா.

ருசியான உணவை சமைக்க

ஏற்றது...




துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், கர்நூல்.

துஷார் சுத்திகரித்த எண்ணெயும் கிடைக்கும்

நறுமணம் விரும்புகிறவர்களுக்கு...

மைசூர் சந்தன சோப்பினுல் ஸ்நானம்செய்வதே ஓர் அலாதியான இன்ப அனுபவம். அதன் மிருதுவான நுரை சருமத் துவாரங்களிலும் ஊடேறி சுத்தம் செய்து, சருமத்தை மழமழப்பாகவும் பளபளப்பாகவும் பட்டுப்போல் செய்கிறது. அதன் இன்பமூட்டும் ரம்மியமான மணம் உங்கள் தேக முழுவதும் பல மணி நேரம் நீடித்துப் பரிமளிக்கும்.

மைசூர்
சந்தன
சோப்



கவர்ன்மெண்ட் சோப் பேக்டரி, பெங்களூர்

இந்திய சோப், வாசனைப் பொருள்கள் உற்பத்தியாளர் சங்கத்தின் அங்கத்தினர்

இருந்தது. அவர் எத்தனை அழகாகப் பேசினார். நாம் எரிந்து விழுவதுபோலப் பேசினோமே? அழகாக அவர்மாதிரி ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் போய் விட்டோமே என்றெல்லாம் மனம் வேதனைப் பட்டுக் கொண்டே இருந்தது.

ஒற்றையடிப் பாதை வழியாக நான் நடந்து கொண்டிருந்தேன். ஆனால் என் உள்ளம் ரங்கதுரையுடன் நடந்துகொண்டிருந்தது. ரங்கதுரை கப்பலின் மேல் தளத்தில் நின்று கொண்டிருக்கிறார். நானும் அருகில் நின்று கொண்டிருக்கிறேன். மேலே, நீல நிர்மலமான வானம். கீழே ஆழ்ந்த கருநீலமான கடல். ஆயிரக்கணக்கான நக்ஷத்திரங்கள் வானத்தில் பட்டை தீர்ந்த வைரங்களைப்போல் ஜாஜ்வல்யமாய் ஜ்வலித்துக் கொண்டிருக்கின்றன.

நானும் அவரும் கிழக்குத் திக்கையே பார்த்துக் கொண்டு நிற்கிறோம். திடீரென்று வெகு தூரத்தில் ஒரு தங்க விளிம்பு தெரிகிறது. ஒரு நிமிஷத்தில் அது சற்று வளர்கிறது. சில நிமிஷங்களில் சிவந்த பொன்னிறமுடைய சந்திரன் மேலே எழும்புகிறான். ரங்கதுரை என்னைப் பார்த்து, "இந்து! உனக்கு 'இந்துமதி' என்ற பெயர் என்ன பொருத்தமாக இருக்கிறதென்று இந்தச் சந்திரோதயத்தைப் பார்த்த பிறகுதான் தெரிகிறது. இந்த வான வெளியில் உதயமாகும் சந்திரன் அஸ்தமித்து விடுவான். ஆனால் என் இதய வானில் நீ ஒவ்வொரு கணமும் உதயசந்திரனாகவே இருப்பாய்" என்கிறார்.

காலில் ஒரு கல் தடுக்கியது. நானும் கற்பனை உலகத்திலிருந்து இந்த உலகத்திற்கு வந்தேன். கட்டை விரல் நகத்தில் பட்டுத் தாங்க முடியாமல் வலித்தது. நான் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தேன். பாதிரித் தோட்டத்து வேலியருகே வந்து விட்டேன். வழக்கம் போல் வேலியோரத்தில் புதருக்குப் பின்னால் நின்று கொண்டு, ரங்கதுரை வழக்கமாய் உட்காரும் மரத்தைப் பார்த்தேன். அந்த இடம் சூனியமாய் இருந்தது. என் உள்ளமும் சூனியமாகி விட்டது போல் ஒரு உணர்ச்சி உண்டாயிற்று.

கொஞ்ச நேரம் நின்று கொண்டே இருந்தேன். ரங்கதுரையைக் காணவில்லை. திடீரென்று 'ஒரு வேளை குறும்புக்காக எங்கேயாவது ஒளிந்து கொண்டிருப்பாரோ' என்று தோன்றிற்று. உள்ளே சென்று தேடிப் பார்க்கவும் பயமாக இருந்தது. நின்ற இடத்திலிருந்தே தோட்டத்தைக் கண்ணுக் கெட்டிய வரையில் சுற்றிச் சுற்றிப் பார்த்தேன்! 'சரிதான், அன்று அவர் சொன்னது போல் இன்று நான் இந்தச் சிவப்புப் பங்களாவுக்குத் துணையாக இப்படியே நிற்கவேண்டியதுதான் போலிருக்கிறது!' என்று எண்ணினேன்.

யாரோ ஒருவன் வேலி யோரமாக நடந்து சென்றான். என்னை அவன் பார்த்த பார்வை எரித்து விடுவதுபோலிருந்தது. எனக்கு அதற்குமேல் அங்கு நிற்கத் தயக்கமாக இருந்தது. சரி! களத்து மேட்டிற்குப் போய் விட்டு மறுபடி திரும்பி வரலாமென்று களத்து மேட்டிற்குப் போனேன்.

அப்போது அறுவடைக் காலம் இல்லை. சில குடியானவப் பெண்கள் மாத்திரம் களை பிடுங்கிக் கொண்டிருந்தார்கள். என்னைக் கண்டதும் அவர்கள் ஓடி வந்து விட்டார்கள். முன்பெல்லாம் அடிக்கடி வயல் வெளிகளுக்குச் சென்று கொண்டிருப்பேன். அந்தக் குடியானவப் பெண்களும் என்னிடம் மிகப் பிரியமாக இருப்பார்கள். கொஞ்ச நாட்களாக நான் அந்தப் பக்கமே போகாமலிருந்து விட்டதால் ஆவலுடன் என்னைச் சூழ்ந்து கொண்டு விசாரிக்க ஆரம்பித்தார்கள்.

"என்னும்மா! எம்பிட்டு நாளா உன் தலையைக் காணல்லையே? அம்புட்டுப் பேரையும் மறந்திட்டாயா?" என்று கேட்டாள் பொன்னி.

அதற்குள் வள்ளி, "என்னா புள்ளே அப்பிடிக் கேக்கறே? குளந்தை கண்ணாலங் கட்டிக்கப் போவுது. இனிமே வயக்காட்டுலே திரியுமாக்கும்!" என்றாள். அவள் கொஞ்சம் வயதானவள்.

"சிமைக்கில்லே போறாராம் மாப்பிள்ளை. ஜமீன்தார் ஊட்டுக்கும் நம்ம ஊட்டுக்குங் கூட இனிமே சண்டையிருக்காதாமில்ல?" என்று சொன்னாள் இன்னொருத்தி.

இத்தனைக்கும் இடையில் என் மனம் "ஐயோ! நாம் இங்கு வந்து விட்டோமே. ஒருவேளை ரங்கதுரை அங்கு வந்து நான் இல்லை என்று திரும்பி விட்டால் என்ன செய்வது?" என்று தவித்தது.

அவர்களிடம், "இதைப் பத்தியெல்லாம் யாரு சொன்னா உங்களுக்கு? போய் வேலையைப் பாருங்கள்" என்று அதட்டலாகச் சொன்னேன்.

அதற்குள் வள்ளி, "இதோ பாரு குளந்தை. உன் கண்ணாலத்துக்காக இந்த நஞ்சை நிலம் ரெண்டு வேலியை

யும் ஐயா வித்துடப் போறாராம். அந்த தர்ம ராஜா, இதை வித்துட்டார்னு எங்க பொளைப்பிலே மண் விழுந்திடும். அதுவும் சொக்கையா ராஜாவில்ல வாங்கப் போறாராம்? நீ சொல்லி ஐயாவை நிலத்தை விக்காமெ இருக்க ஏற்பாடு பண்ணவேணும்'' என்று அழமாட்டாத குறையாகக் கூறினாள்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. இந்த இரண்டு வேலி நிலம்தான் எங்கள் வாழ்க்கைக்கு ஜீவாதாரமாக இருந்ததென்று எனக்குத் தெரியும். அதுவும் இல்லாவிட்டால் எப்படி உயிர் வாழ்வது? அப்படி அதை விற்கும்படியான நிர்ப்பந்தம் இப்போது அப்பாவுக்கு என்ன ஏற்பட்டிருக்கும்? என் கல்யாணம் கூட இவர்கள் சொல்வது போல் அவ்வளவு சீக்கிரம் நடக்கப் போவதில்லையே?

வள்ளியிடம், ''உனக்கு யார் சொன்னார்கள், இந்த விஷயத்தை?'' என்று படபடப்பாகக் கேட்டேன்.

''எங்க வீட்டுக்காரருதாம்மா சொன்னாரு. வேலை கூடப் பேசியாச்சாமே. சொக்கையா ராஜாவோடே ஆளு வந்து நிலத்தைப் பத்தியெல்லாம் விசாரிச்சாரு. அவரு அழுதுகிட்டே இருக்காரும்மா. நீதான் எங்களை யெல்லாம் காப்பாத்தணும்'' என்று சொன்னாள்.

''ஆகட்டும். நான் ஐயாவிடம் கட்டாயம் சொல்கிறேன்'' என்று சொல்லிவிட்டு மறுபடியும் பாதிரித் தோட்டத்துக்கு ஓடினேன். ஆனால் மறுபடியும் ஏமாற்றந்தான். ரங்கதுரை அங்கு இல்லை. இன்று ரங்கதுரையைக் கட்டாயம் பார்த்துவிட வேண்டும் என்று துடித்தேன். அப்பா நிலத்தை விற்கப் போகும் சமாசாரத்தையும் அவரிடம் சொல்லிவிட வேண்டு மென்றும், அதற்கு அவர் யோசனையையும் கேட்க வேண்டு மென்றும் நினைத்தேன்.

நேரமாக ஆக என் தவிப்புத்தான் அதிகமாயிற்று. அவரைக் காணவேயில்லை. குங்குமத்துறையில் எப்போதுமே வெகு சீக்கிரம் இருட்டி விடும். மேற்குத் திக்கில் வானளாவிய மலைச் சிகரங்கள் இருந்த படியால் சூரிய பகவான் வெகு சீக்கிரம் மலைக்குப் பின்னால் மறைந்து விடுவார். 'சூரியன் மலைவாயில் விழுந்து விட்டது' என்று சொல்வதுண்டு அல்லவா? அதை அங்கே கண்கூடாகக் காணலாம். ஏதோ மலையின் வாய் திறந்து அப்படியே சூரியனை விழுங்கி விடுவது போலவே இருக்கும். இன்று அந்தக் காட்சி எனக்குப் பயங்கரமாகத் தோன்றியது. என்னைச் சுற்றிலும் கவிழ்ந்து வந்த இருள், என் உள்ளத்தையும் சூழ்ந்து கொண்டது.

அரண்மனையி லிருந்து வரும் ஒற்றையடிப் பாதையைப் பார்த்துப் பார்த்துக் கண்கள் பூத்துப் போய் விட்டன. வருகிறவர்களை யெல்லாம் முதலில் ரங்கதுரை என்று எண்ணி ஏமாந்து போனேன். அதற்கு மேலும் அங்கு நின்று பிரயோஜனமில்லை என்று நன்றாகத் தெரிந்து போய் விட்டது. இருந்த போதிலும் அங்கிருந்து நகர மனம் வரவில்லை. மேலும் சிறிது நேரம் இங்கு மங்கும் நடந்து விட்டுக் கடைசியில் அப்பா கோபித்துக் கொள்ளப் போகிறாரே என்று வீடு நோக்கி நடந்தேன். ஏமாற்றத்தினால் மனம் குமுறி வெடித்து விடும் போலிருந்தது. 'இன்று வராமலிருந்ததற்கு ஏதேனும் முக்கிய காரணம் இருந்திருக்க வேண்டும். அதுதான் காலையிலேயே தங்க பாண்டியனுடைய காரியம் இருக்கிறது என்று சொன்னாரே. அதனால் நாளைக்குக் கட்டாயம் வீட்டுக்கு வருவார்' என்று சமாதானப்படுத்திக் கொண்டு நடந்தேன்.

'இருந்தாலும் ஒரு வார்த்தை வந்து சொல்லி விட்டுப் போய் இருக்கலாம். பாவம்! இந்துமதியிடம் கட்டாயம் வரச் சொல்லி விட்டு வந்தோமே. காத்துக் கொண்டிருப்பாளே' என்று தோன்ற வேண்டாமா? என்ன இருந்தாலும் ஆண்கள் சற்று நெஞ்சழுத்தக்காரர்கள்தான். இன்றே இப்படி மறந்து விட்டாரே? இன்னும் இரண்டு வருடம் சீமையில் போய்ப் படிக்க வேண்டுமே? அத்தனை வேலைகளுக் கிடையில் என் நினைவு அவருக்கு இருக்குமா? இப்படி எண்ணிக் கொண்டே வந்த போது என்னை யறியாமல் அழுகை வந்து விட்டது. சில சமயம் சிறிய விஷயங்கள் கூட நமக்கு மிகப் பெரிதாகத் தென்படுகின்றன அல்லவா?

என் தாயார் அடிக்கடி முன் பெல்லாம் பாடிக் கொண்டிருந்த கீதம் என் நெஞ்சில் வட்டமிட்டது. பங்கிம் சந்திரரின் நாவலான ஆனந்த மடத்தில்,

''புரவியில் ஏறி என் இன்னுயிர்க் காதல
போவதும் எங்கேயோ!''

என்ற பாட்டு வருகிறது. இப்பொழுது நினைத்தாலும், என் அன்னை கண்ணீர் சோர இந்தப் பாட்டைப் பாடிக் கொண்டு ஜன்னலருகில் நின்று மலைட்

பாதையைப் பார்க்கும் காட்சி கண் முன்னே தோன்றுகிறது.

அன்னையைப் பற்றிய நினைவு வந்ததும் இன்னும் துயரம் அதிகமாயிற்று.

நான் விட்டுக்குப் போனதும் என் தந்தை என்னைப் பார்த்துவிட்டு, "இந்து! வருத்தப்படாதே, அம்மா. நான் இருக்கும் போது உனக்கு என்ன கவலை? ரங்கதுரை எப்படியிருந்தாலும் சீமைக்குப் போய்த்தானே ஆக வேண்டும்? அவர் உடனே போய்த் திரும்பி விடுவதே நல்லதென்று எனக்குப் படுகிறது. உன்னைச் சீக்கிரம் அவரிடம் ஒப்படைத்து விட்டால்தானே எனக்கு நிம்மதியாக இருக்கும்" என்றார்.

நான் மௌனமாக நின்றேன். சற்றுப் பொறுத்து அவர், "நீ எல்லா விஷயங்களிலும் உன் அம்மா மாதிரியே இருக்கிறாய். உருவத்தில்தான் அத்தனை ஒற்றுமை என்று நினைத்திருந்தேன்; இப்போது குணத்திலும் ரொம்ப ஒற்றுமை இருப்பது தெரிகிறது!" என்றார்.

"என்ன தெரிகிறது?"

"உன் தாயார் இப்படித்தான் அழுதால் அழுது கொண்டே இருப்பாள். பயப்பட்டால் ஓரேயடியாகப் பயப்படுவாள். தைரியமாக இருக்க வேண்டுமென்று நினைத்து விட்டாளானால் அவள் தைரியத்தின் அருகில் கூட நான் போக முடியாது. காசிலிங்கத்தோடு, இங்கே இருந்த நாட்களில் வீட்டில் ஒவ்வொரு நிமிஷமும் அவளுடைய சிரிப்பொலி நிறைந்திருக்கும். 'அப்படிச் சிரிப்பதற்கு என்ன விஷயமிருக்கும்?' என்று நான் வியந்திருக்கிறேன். காசிலிங்கத்திடம் அன்பைச் சொரிந்ததிலும் அப்படியே தான். அப்படி அவள் இருந்ததாலேயே பிற்காலத்தில் அவள் வாழ்வு துயரம் நிரம்பியதாக இருந்தது. அவ்வளவு தீவிரமான அன்பு இல்லாமலிருந்திருந்தால் இன்னும் கொஞ்ச நாட்கள் உயிரோடும் இருந்திருப்பாள். உன் கல்யாணத்தையும் பார்த்திருப்பாள். காசிலிங்கம் இல்லாததைத் தவிர, இறந்து போகும்படி இங்கே அவளுக்கு என்ன குறை இருந்தது?" என்று சொல்லி விட்டு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார் பண்ணையார்.

"நீயும், காசிலிங்கத்திடம் அவள் பழகியது போலவே, ரங்கதுரையிடம் வெகு சீக்கிரம் பழகி விட்டாயே! அதனால்தான் உன் தாயார் மாதிரியே இருக்கிறாய் என்று சொன்னேன்."

"நான் ஒன்றும் அதற்காக இப்போது வருத்தப்படவில்லை. எனக்கு அம்மாவின் ஞாபகம் வந்தது. அவ்வளவுதான்."

"ஆமாம்; அம்மாவின் ஞாபகம் வந்ததினால்தான், 'புரவியில் ஏறி' என்று பாட்டை முணுமுணுத்துக் கொண்டு வந்தாயாக்கும்" என்றார் பண்ணையார்.

அய்யாக்குட்டி எங்கோ போய்விட்டு, அப்போது திரும்பி வந்தார். நான் நில விஷயமாய் மந்திரமூர்த்தியிடம் கேட்க நினைத்ததைப் பிறகு தனியாகக் கேட்டுக் கொள்ளலாம் என்று என் காரியத்தைக் கவனிக்கச் சென்றேன்.

மறு நாள் ரங்கதுரைக்காகக் காத்திருந்து காத்திருந்து அலுத்து விட்டது. காலையில் வருவார் என்று எதிர்பார்த்துக் கவனமாக அலங்கரித்துக் கொண்டு ஆவலோடு வாசலிலேயே நின்று கொண்டிருந்தேன். உள்ளே ஒரு காரியமும் ஓடவில்லை. எனக்குப் பசிக்கவில்லை என்பதனால், அப்பாவும் அய்யாக்குட்டியும் சாப்பிடாமலிருக்க முடியுமா என்று நினைத்துக் கொண்டே ஏதோ காமா சோமா என்று சமைத்தேன். வாசலுக்கும், சமையற்கட்டிற்கும் ஆயிரந் தடவையாவது அலைந்திருப்பேன்.

இருவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, வாசலில் ஏதோ சத்தம் கேட்ட மாதிரி தோன்றவே, பரபரப்பில் அய்யாக்குட்டியின் இலையில் அப்படியே ரஸத்தைச் சாய்த்து விட்டேன்.

என் தந்தை என்னைக் கடிந்து கொண்டார். "என்ன இந்து! நிதானம் வேண்டாமா? வயதாகவில்லையா உனக்கு?" என்றார். நான் அதைச் சிறிதும் லட்சியமே செய்யவில்லை. ஆனால் அப்போதும் ரங்கதுரை வரவில்லை. 'சரி, இனிமேல் விருந்துக்குப் பிறகுதானே வர முடியும்?' என்று எண்ணினேன்.

இப்படியே மாலை வரையில் தவித்துக் கொண்டுதான் இருந்தேன். ரங்கதுரைக்கு ஏதேனும் நினைவுக்காகக் கொடுக்க வேண்டுமென்று ஆசையாக இருந்தது. வீடு முழுதும் ஏதாவது கிடைக்குமா வென்று தேடினேன். ஒன்றும் அழகானதாகக் கிடைக்கவில்லை. கடைசியில் என்னிடமிருந்த தந்தத்தினால் செய்த சிறிய விநாயகர் விக்கிரகத்தைக் கொடுப்பதென்று தீர்மானித்தேன்.

விக்கிரகத்தை எதிரில் வைத்துக் கொண்டு எனக்குத் தெரிந்த கணபதி ஸ்தோத்திரங்களையெல்லாம் சொன்னேன். பிறகு, "ஸ்வாமி! என் அன்பருக்கு ஒரு குறைவும் வராமல், பிரயாணத்தில் விக்னம் நேராமல் காப்பதற்காக உங்களை அவருடன் துணையாக அனுப்பப் போகிறேன். ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் பொறுப்புத்தான்" என்று வாய் விட்டு அவரிடம் கூறினேன். பிறகுதான் ஒரு வித நிம்மதி ஏற்பட்டது.

இதையெல்லாம் நான் ரங்கதுரை ஒருவருக்காகத்தான் இவ்வளவு விவரமாக எழுதுகிறேன். என் குழந்தை உள்ளத்தில் தோன்றிய அன்பு எப்படிப்பட்டது, அது எத்தனை ஏமாற்றங்களுக்கு உள்ளாயிற்று என்பதையெல்லாம் அவர் தெரிந்து கொண்டால்தான் நான் நடந்து கொண்ட விதத்தை மன்னிக்க முடியும். ஏன், என் மனம் அவ்வளவு தூரம் கசந்து போயிற்றென்பதை அவர் அறிந்து கொள்ளுவதற்காகவே இதையெல்லாம் எழுதுகிறேன்.

பகல் சாய்ந்து விட்டது. இன்னும் ரங்கதுரை வரவில்லை. நான் எப்படி ஏமாந்து போனேன் என்பது என்னைப் படைத்த இறைவனுக்குத்தான் தெரியும். என் தந்தை, அய்யாக் குட்டி இருவரும் எங்கேயோ போய் விட்டார்கள். நான் மட்டும் தனியாக இருந்தேன். மணி ஆறடித்து விட்டது. ஆறரையும் ஆகிவிட்டது. என் உள்ளம் சோர்ந்து போயிற்று. இனிமேல் ரங்கதுரை வர மாட்டார் என்று தோன்றியதும் விக்ன விநாயகரிடம் தாங்க முடியாத கோபம் வந்தது. அந்த விநாயகரைக் கையில் எடுத்துக் கொண்டு, "ரங்கதுரையோடு போவதற்கு இஷ்டமில்லாததால், அவரையே இங்கு வராமல் செய்து விட்டீர்களா?" என்று கேட்டேன்.

அந்த சமயத்தில் யாரோ "அம்மா!" என்று கூப்பிடுவது கேட்டது. ஒரு சிறு பையன் கையில் ஒரு கவருடன் நின்று கொண்டிருந்தான்.

ஓடிச் சென்று உறையை ஆவலுடன் வாங்கிக் கொண்டேன். அந்தப் பையன் ஓடி விட்டான். அவசரமாக உறையைக் கிழித்துக் கடிதத்தை எடுத்துக் கொண்டு விளக்கின் அருகில் ஓடினேன்.

'என் அன்பே!

இன்று முழுவதும் வராமலிருந்ததற்கு மன்னித்து விடு. உடனே பாதிரித் தோட்டத்துக்கு வா. உனக்கு ஒரு அன்பளிப்பு வைத்திருக்கிறேன். வீட்டுக்கு வர நேரமில்லை. உன்னைப் பார்த்து விட்டு உடனே புறப்பட வேண்டும். உன் அன்பன்

ரங்கதுரை'

என்று முத்து முத்தான கையெழுத்தில் எழுதியிருந்தது. (தொடரும்)



நீங்கள் இன்று
புரோடெக்ஸ்
உபயோகித்தீர்களா?
நீங்கள் நாள் முழுதும் புதுமையுடனும் வாசனையுடனும் இருக்க, உயர்ந்த, புதிய புரோடெக்ஸ் ஆல்-பர்பஸ் டாய்லட் பவுடர். மென்மையும், நறுமணமும் சேர்ந்த புரோடெக்ஸ் குடும்ப முழுதுக்கும் வெப்பத்தில் குளுமையும் இனிமையும் தருகிறது.
புதிது!
PROTEX
All Purpose
TOILET POWDER
ஸ்நானத்துக்குப் பின் வாசனைப் பூஷணம். ஈரத்தை உறிஞ்சி புதுமை தருகிறது.
குளுமை! குதூகலம்! கோடையின் கொடுமையில்
நேர்த்தியும் மென்மை! யும்-குழந்தைக்கு ஏற்றது.
மிக எடுப்பானது உங்கள் வதனத்தை அழகு படுத்தும் பவுடர்.
கால்கேட்டின் புதிய
சிறந்த தயாரிப்பு
புரோடெக்ஸ்
ஆல் பர்பஸ்
டாய்லட் பவுடர்



1. மயிலாடுதுறை

பாரத நாட்டிலே ஆறுகள் பல உண்டு. வட மலையிலே பிறப்பது கங்கை; குட மலையிலே பிறப்பது காவிரி. இவை இரண்டும் தெய்வ மணங் கமழும் திரு நதிகள்.

ஆற்றிலே ஓடி வருவது பூம்புனல் வெள்ளம்; அதைக் கண்டு மகிழ்வது மாந்தரின் உள்ளம். ஆற்றின் பண்பறிந்து பாட்டிசைப்பான் கவிஞன்; அதன் பயனறிந்து வழிபடுவான் உழவன்.

காவிரியாற்றின் கருணையால் சோழ நாடு வளநாடாயிற்று; பசிப் பிணியை மாற்றும் பழனத் திருநாடாயிற்று.

" உழவர் ஓதை, மதகோதை
   உடைநீர் ஓதை, தண்பதம் கொள்
விழவர் ஓதை சிறந் தார்ப்ப
   நடந்தாய், வாழி காவேரி "

என்று சிலம்பு பாடிற்று. காவிரிக் கரையிலே ஏர் பிடிக்கும் உழவர் இடும் ஓசையும், மதகின் வழியாக மடையிற் பாய்ந்து, தடைகளை உடைத்து ஓடும் தண்ணீரின் ஓசையும், வெள்ளத்திலே மகிழ்ந்து விளையாடும் மாந்தர் இடும் ஓசையும் கலந்ததோர் ஆரவாரத்தை அழகுறப் பாடினார் இளங்கோவடிகள். இத் தகைய முழக்கத்தின் இடையே அமைதியாகக் கண் வளர்கின்றார், காக்கும் தெய்வமாகிய திருமால்.

" காவிரித் திருநதியிலே, ஒரு
   கருணைமா முகில் துயிலுமே "

என்று அத் திருக் காட்சியையும் அழகுறக் காட்டுகின்றார் ஒரு கவிஞர்.

காவிரியின் இருமருங்கும் செழுஞ் சோலைகள். அச் சோலைகளிலே மயில் தோகையை விரித்து ஆடும்; குயில் மறைந்து நின்று கூவும். ஆற்று வெள்ளத்திலே அன்பர்கள் இட்ட மலரும் மாலையும் அசைந்து ஆடும்.

" பூவர் சோலை மயில் ஆட,
   புரிந்து குயில்கள் இசை பாட,
காமர் மாலை அருகசைய
   நடந்தாய் வாழி, காவேரி "

என்று கடலை நோக்கி நடக்கும் காவேரி யாற்றைப் பாடுகின்றார் கவிஞர்; 'இன்று போலவே என்றும் வாழ்க' என்று வாழ்த்துகின்றார்.

சிலம்பு பாடிய வண்ணமே காவிரிக் கரையில் மயில் ஆடும் அழகினைக் கண்டனர் பண்டைத் தமிழ் மக்கள்; அவ் ஆற்றங்கரையில் அமைந்த ஓர் ஊருக்கு 'மயிலாடு துறை' என்றே பெயர் இட்டனர். காவிரியாற்றுத் துறையில் தோகையை விரித்து மயில் ஆடுகின்ற தோற்றம் அப் பெயரிலே விளங்குகின்றது. மயிலாடுதுறையின் வழியாகச் செல்லும் காவிரியாற்றை,

" கந்தமலி சந்தினொடு கார்அகிலும்
   வாரிவரு காவிரி "

என்று சந்தத் தமிழ் பாடிச் சிறப்பித்தார் திருஞான சம்பந்தர். மயிலாடுதுறையில் அமர்ந்து அருளும் ஈசனை,

" மற்றாரும் தன்னொப்பார்
   இல்லாதான் கண்டாய்
மயிலாடு துறைஇடமா
   மகிழ்ந்தான் கண்டாய் "

என்று போற்றினார் திருநாவுக்கரசர். தேவாரத்தில் பாடப் பெற்ற மயிலாடுதுறை பிற்காலத்தில் மாயூரபுரம் ஆயிற்று; அப் பெயர் மாயூரவரம் என மருவிற்று; அதுவே பின்னர் மாயவரம் ஆக மாறிற்று.



பாலூட்டிப் பிள்ளையை வளர்க்கும் தாய் போல், நீரூட்டிப் பயிர் வளர்க்கும் நதிகளை அருமையாகப் போற்றினர் தமிழ் மக்கள்; சிறிய நதிகளுக்கும் சிறந்த பெயர் இட்டனர். தொண்டை நாட்டில் உள்ள ஆறு பாலாறு; பாண்டி நாட்டில் உள்ளது தேனாறு; சேர நாட்டில் நெய்யாறு உண்டு. பாலாற்றில் நீர் சுரக்கும்; தேனாற்றிலே நீர் சொட்டும்; நெய்யாற்றிலே நீர் துளிக்கும். பாலையும் தேனையும் நெய்யையும் அளவறிந்து ஊட்டிப் பிள்ளையைப் பேணி வளர்க்கும் தாய் போல், ஊற்றுப் பெருக்கால் நிலத்துக்கு நீரூட்டி நலம் பயக்கும் நதிகளுக்கு நல்ல பெயர் இட்டனர் நன்றியுள்ள தமிழ் நாட்டார்.

தமிழகத்தை வாழ்விக்கும் ஆறுகளில் சிலவற்றைப் புகழ்ந்து பாடியுள்ளார் பாரதியார்.

"காவிரி தென் பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருனை நதி—என
மேவிய யாறு பல ஓடத்—திரு
மேனி செழித்த தமிழ்நாடு"

என்ற பாட்டில் ஐந்து நதிகள் அமைந்துள்ளன. வையையும் பொருனையும் பாண்டி நாட்டில் உள்ள ஆறுகள். பொய்யறியாப் புலவர்களின் பாமாலை பெற்ற பாண்டியர் குலக் கொடியாகிய வையையை,

"புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி
வையை என்ற பொய்யாக் குலக்கொடி"

என்று போற்றினார் இளங்கோவடிகளும்.

தென் பாண்டி நாட்டின் நதியாகத் திகழும் பொருனை யாற்றைப்

"பொன் திணிந்த புனல் பெருகும்
பொருனை எனும் திருநதி"

என்று புகழ்ந்து பாடினார் கம்பர். முன்னாளில் 'பொன்' என்னும் சொல் பொதுவாக உலோகங்களுக் கெல்லாம் உரிய பெயராக வழங்கிற்று. சங்கத் தமிழில் செம்பொன் என்பது தங்கம். வெண் பொன் என்பது வெள்ளி; கரும்பொன் என்பது இரும்பு. ஐம்பொன் என்ற சொல் பஞ்ச லோகங்களின் பெயராக இக் காலத்திலும் வழங்குகின்றது. இம்முறையில் பொருனை யாற்று நீரில் கலந்துள்ள தாமிரசத்தினைத் தெரிந்து "பொன் திணிந்த" என்று கம்பர் பாடினார் போலும்!

தாமிரவர்ணி என்று இப்போது வழங்கும் பொருனை யாற்றோடு கலப்பது சிற்றாறு என்னும் சித்திரா நதி. திருக்குற்றால மலையிலே பிறப்பது சிற்றாறு. அந்நதி சிற்றாறு என்று பெயர் பெற்றிருப்பினும் சீர்த்தி மிக வாய்ந்தது என்று பயிர்த் தொழில் செய்யும் பள்ளன் வாயிலாக உணர்த்துகின்றார் ஒரு கவிஞர்.

"சிற்றாறு என்பது பெற்றாலும், ஒரு
சிறியவர் மனப் பெருமைபோல்
சித்ரா நன்னதி பெருகி வார
சித்ரம் பாரும் பள்ளீரே"


என்பது பள்ளுப் பாட்டு. குற்றால மலையில் உறையும் நற்றவ முனிவரைக் 'குறு முனிவர்' என்றும் கூறுவர். அம்முனிவர் உருவிற் சிறியவர்; தவத்திற் பெரியவர். குற்றால மலையிலே பிறக்கும் சிற்றாற்றின் பெருமை, அங்கு வாழும் குறுமுனிவரின் கீர்த்தியை ஒக்கும் என்று சிறப்பிக்கின்றார் கவிஞர்.

சிறிதும் பெரிதுமாய் அமைந்துள்ள ஆற்றின் கரைகளில் ஊர்களும் நகரங்களும் உண்டாயின. "ஆறில்லா ஊருக்கு அழகில்லை" என்னும் பழமொழியும் எழுந்தது. சோழ நாட்டின் தலை நகராகிய உறையூர் காவிரி யாற்றங் கரையில் வீற்றிருந்தது. பாண்டி நாட்டின் தலைநகராகிய மதுரை வையை ஆற்றங் கரையில் வளர்ந்து சிறந்தது. சேர நாட்டின் தலைநகராகிய வஞ்சியும் ஓர் ஆற்றின் கரையில் இருந்ததாகக் கூறப்படுகின்றது. எனவே, நதிக்கரையிலே பிறந்து வளர்ந்தது தமிழ் நாட்டின் நாகரிகம் என்பது தெளிவாகின்றது.



அஜீரணம் வாழ்வையே துன்பமயமாக்கி விடுகிறது; வயதுக்கு மிஞ்சிய வயோதிகத் தோற்றமும் உண்டாக்கிவிடுகிறது. மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பௌடர் துரிதமான நிவாரணம் தருகிறது. ஏனெனில் அது ஒரு அபூர்வச் சிறப்புடைய பௌடர்; சாஸ்திரீகமான தயாரிப்புத் திட்டப்படி பக்குவமான பொருட்சேர்க்கையுள்ள இந்தப் பௌடர் மூன்று வேலைகள் செய்கிறது—மிருதுவான இரைப்பைக்குச் சமனமூட்டுகிறது; வயிற்றுப் புளிப்பை மாற்றுகிறது; வலியையும் நிறுத்துகிறது.

மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பௌடர் என்று பெயரைச் சொல்லிக் கேளுங்கள். ஒவ்வொரு பாக்கெட்டிலும் Alex C. Maclean ''அலெக்ஸ் ஸி. மக்ளீன்'' என்ற உண்மைக் கையெழுத்தும் தத்ரூபமாக அச்சிடப் பட்டுள்ளதா என்று நிச்சயப் படுத்திக் கொள்ளுங்கள்.



மக்ளீன்

பிராண்ட் ஸ்டமக் பவுடர்

எப்பொழுதும் கையில் ஒரு பாட்டில் வைத்திருங்கள்.

ஒரு டோஸ்

அஜீரணத்தாலேற்படும் வயிற்றுவலி, உடற்பருமன், இருதய எரிச்சல், வயிற்றுமந்தம், வாந்தி இவற்றை சடுதியில் குணப்படுத்தும்.

MSY. 9-TAM



கோகிலா

ரமண்லால் வஸந்தலால் தேசாய்

மொழிபெயர்ப்பு : ரா. வீ.

35. வந்தவர் யார்?

பூபதாஜியின் சொற்களுக்குச் செவி சாய்க்க வேண்டும் என்று ஜகதீஷுக்கு முதலில் தோன்றவில்லை. 'எத்தனை நாட்களுக்குத்தான் இப்படிப் போலீஸாருக்குப் பயந்து ஓடிக்கொண்டிருப்பது? நாம் இங்கேயே இருப்போம். பிடித்துக்கொண்டு போனால் போகிறார்கள். இம் மாதிரி பயந்து ஒளிவதைக் காட்டிலும் இது மேல் அல்லவா?' என்று மனத்தை உறுதி செய்துகொண்டான். அதனால் மசமசப்போடு சுற்று முற்றும் பார்த்துக்கொண்டு நின்றான். அதே சமயம் பூபதாஜி. "சாமியைப் போய்ச் சட்டென்று எழுப்பி விடவேண்டும். இல்லாவிட்டால் கோபித்துக்கொள்ளும்" என்று சொல்லியவாறே பரபரப்போடு பரணிலிருந்து கீழே இறங்கலானான். பூபதாஜியின் பேச்சு நாத் பாபாவின் நினைவை வருவித்து விடவே, ஜகதீஷ் இறங்க மனம் ஒப்பாமல் இருந்த பொழுதிலும் அரை மனத்துடன் பின் தொடர்ந்தான்.

குடிசைக்குப் போய்ப் பார்த்தால் நாத் பாபா அவர்கள் வருவதற்கு முன்னாலேயே எழுந்து உட்கார்ந்திருந்தார். பூபதாஜி ஆற்றில் படகு காணப்பட்ட விவரத்தை அவருக்குச் சொன்னான்.

"அவர்கள் கட்டாயம் போலீஸ்காரர்களாகத்தான் இருக்க வேண்டும். சாதாரணப் போலீஸ்காரர்கள் என்னைத் துறவியாக எண்ணுகிறார்கள். ஆனால் அதிகாரிகள் வேறுவிதமாக எண்ணுகிறார்கள்!" என்று நகைத்தவாறே சொன்ன நாத்பாபா, குதிரைகளைச் சீக்கிரம் தயார் செய்யுமாறு பூபதாஜிக்கு உத்தரவிட்டார்.

பூபதாஜி தன் பிள்ளையை அழைத்து உடனே குதிரைகளைக் கொண்டு வருமாறு சொன்னான். அதற்குள்ளாக உள்ளிருந்து பூபதாஜியின் மனைவி இரண்டு தட்டுகளில் சிற்றுண்டி கொண்டு வந்து நாத் பாபாவுக்கும் ஜகதீஷுக்கும் எதிரே வைத்தாள்.

"சாமி! இன்னும் நேரம் இருக்கிறது. அவசரப்படாமல் இதை அருந்துங்கள்!" என்று வேண்டினான் பூபதாஜி.

பூபதாஜியின் வற்புறுத்தலின் பேரில் இருவரும் அந்தச் சிற்றுண்டியை அருந்தினர். அதற்குள் பூபதாஜியின் மகன் இரண்டு குதிரைகளைக் கொண்டு வந்து நிறுத்தினான். இரு குதிரைகளும் நல்ல பலம் பொருந்தியவையாகவும் கறுகறுப்பானவையாகவும் வேகமாக ஓடக் கூடியவையாகவும் தோற்றமளித்தன. குதிரைகளின் நிறைவு பெற்ற தோற்றத்தையும், பிடரியையும், வாலையும், நிமிர்ந்த கழுத்தையும் பார்த்த ஜகதீஷ் பிரமிப்புடன் எழுந்து நின்றான்.

துறவியும் எழுந்து பூபதாஜியைப் பார்த்து, "பூபதாஜி! போலீஸ்காரர்கள் வந்தால் நான் ஓங்காரியாவுக்குப் போய் விட்டதாகச் சொல். அவர்கள் வேறு ஏதாவது கேட்டால், எதற்காக வீணாகக் கலவரப் பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? பணம் யாருடைய வசத்திலிருந்து போயிற்றோ, அவர் வீட்டை முதலில் தேடிப் பாருங்கள் என்று சொல். இப்படியெல்லாம் சொல்ல உனக்கு யார் சொல்லிக் கொடுத்தது என்று கேட்டால், தைரியமாக என் பெயரைச் சொல். பயப்படாதே! உன் வயலையும் குடிசையையும் சோதனையிட விரும்பினால், தாராளமாக அவர்களுக்குச் சோதனையிட்டுக் கொள்ள இடம் கொடு. என்ன புரிந்ததா?" என்றார்.

"சரி, சாமி! நீங்கள் எதற்கும் கவலைப் படாதீர்கள். எல்லாவற்றையும் நான் கவனித்துக் கொள்கிறேன். தைரியமாக நீங்கள் போய் வாருங்கள்!" என்றான் பூபதாஜி.

துறவியும் ஜகதீஷும் குதிரையின் மேல் ஏறி உட்கார்ந்தார்கள். துறவி வெகு அநாயாசமாகக் குதிரையை நடத்திச் சென்றார். ஜகதீஷ் அவருக்குப் பின்னாலேயே தன் குதிரையை விட்டான். வயல்களில் குதிரைகள் மெதுவாகப் போயின. துறவியை வழி அனுப்புவதற்காகப் பூபதாஜி சிறிது தூரம் வரை வந்தான். பிறகு நின்று விடை பெற்றுக் கொண்டான். ஜகதீஷுக்குத் துறவியின் வார்த்தைகளைக் கேட்டு ஆச்சரியம் உண்டாயிற்று. "ஏன், சாமி! திருட்டுப் போன பொருள் குறிப்பிட்டவர் வீட்டில்தான் இருக்கிறது என்பது உங்களுக்கு எப்படித் தெரிந்தது? செய்தியைக் கேட்ட பொழுது எனக்கும் இதே சந்தேகம் தான் எழுந்தது!" என்றான்.

"இது ஒரு பெரிய விஷயமா? நான் சொல்வது முழுவதும் மெய். நீ சொல்வதற்கு

முன்பே உன் முகத்தைப் பார்த்ததும் நீ திருடவில்லை என்பதை நான் புரிந்து கொண்டேன். அப்புறம் அந்தப் பங்களாவிலிருந்து போனவர்கள் பேசிக் கொண்டு போனார்களே! அதைக் கேட்ட பின் நிச்சயம் நீ திருடவில்லை என்பதில் எனக்கு இன்னும் நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. என்னைக் கேட்டால் அவருடைய பிள்ளைதான் திருடியிருக்க வேண்டும் என்று சொல்வேன். நான் என்ன, சின்னஞ்சிறு குழந்தையைக் கேட்டால் கூட இதையேதான் சொல்லும். ஆனால் புத்தியில் பெரிய இந்தப் போலீஸ்காரர்கள் புலன் கிடைக்காத இடத்தைத் தான் முதலில் விழுந்து விழுந்து தேடுவார்கள்!'' என்றார் காத்பாபா.

அதைச் சொல்லியவாறே அவர் குதிரையை வேகமாக ஓட்டத் தொடங்கி விட்டார். ஜகதீஷ் வெகு நாட்களாகக் குதிரையின்மேல் ஏறியதில்லை. அதனால் அவன் மிகவும் பின் தங்கி விட்டான். அதைக் கண்ட துறவி ''பயப்படாதே! வேகமாக ஓட்டி வா!'' என்று அவனுக்குத் தைரியமளித்தார்.


இரண்டு குதிரைகளும் வேகமாக ஓடத் தொடங்கின. ஈர மண்ணின் இனிமையான நறு மணம் காற்றில் கலந்து ஜகதீஷின் மூக்கைத் துளைத்துக் கொண்டிருந்தது. அந்த மணம் அவனை விட்டு அகலவே இல்லை.

கோகிலா ஐந்து நிமிஷங்கள் வரை ஜகதீஷுக்காக வாசற்படியிலேயே நின்று கொண்டிருந்தாள். ஆனால் ஜகதீஷ் படியேறி வரவே இல்லை. அவன் ஆளோடியில் காலடி எடுத்து வைப்பதை அவள் தன் கண்களால் கண்டாள். அப்படியிருக்கும் பொழுது படியேறி வர அவனுக்கு இத்தனை நேரம் பிடிப்பானேன்? அவள் பாதிப் படிகள் இறங்கிப் பார்த்தாள். ஜகதீஷைக் காணவில்லை. அதற்குப் பதிலாக ஒரு பட்டிக்காட்டான் படியேறி வந்து கொண்டிருந்தான். அவனுடைய பயங்கரமே உருவான முகத்தைக் கண்ட கோகிலாவுக்கு உள்ளூற உதறல் எடுத்தது.

அவன் கோகிலாவைப் பார்த்து, ''ஏன், அம்மா! ஜகதீஷ் ஐயா இந்த வீட்டில் தானே இருக்கிறார்கள்?'' என்று கேட்டான்.

''ஆமாம். என்ன விஷயம்?'' என்று அவனைப் பார்த்துக் கேட்டாள் கோகிலா.

அதற்கு அவன் பதிலே சொல்லவில்லை. சிறிதும் தயக்கமின்றித் தடதட வென்று படியேறி மேலே வந்து விட்டான். அச்சமும் ஆச்சரியமும் ஒருங்கே தாண்டவ மாடக் கோகிலா அவனுக்குப் பின்னாலேயே படியேறினாள்.



அடுத்த அறையில் போட்டிருந்த ஊஞ்சலில் உட்கார்ந்து பியூஷும் அமரனும் வண்டி விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். ராதா ஒரு புறமாகச் சுவரில் சாய்ந்து உட்கார்ந்து அவர்கள் விளையாட்டை ரசித்துக் கொண்டிருந்தாள். அவள் பார்வை படியேறி வந்தவன்மீது விழுவதற்கு முன்னால் பியூஷின் பார்வை விழுந்தது.

''இதோ பார், அமர்! வண்டியை நிறுத்தி விடு. பூச்சாண்டி பிடித்துக் கொண்டு போய் விடுவான்!'' என்றான் பியூஷ்.


வந்தவனுடைய உருவத்தைப் பார்த்ததும் பியூஷின் மனத்தில் பூச்சாண்டி என்ற கற்பனைதான் இழையோடியது.

வந்தவன் ராதாவைப் பார்த்தான். உடனே அவள் அருகில் போய் நின்றான். அவன் கண்

களும் ராதாவின் கண்களும் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன. இருவருடைய பார்வையும் லயித்து ஒன்றிய பின்னர் தான் கோகிலா அங்கே வந்தாள். அவள் வந்து விட்டாளே என்பதற்காக அவர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்ட பார்வையில் எவ்விதமான வேறுபாடும் ஏற்பட்டதாகத் தோன்றவில்லை.

வந்தவன் சிறையிலிருந்து விடுதலை பெற்று வந்திருக்கும் ராதாவின் கணவனாகத்தான் இருக்க வேண்டும் என்பதைக் கோகிலா கண்ட மாத்திரத்திலேயே தெரிந்து கொண்டாள். பல வருஷங்களாக ஒருவரையொருவர் பிரிந்திருந்த அந்தக் கிராம்யத் தம்பதிகள் நேரில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்ததும் பேச முடியாமல் வாய் அடைத்துப் போய், பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ என்ற மொழிக்கு எடுத்துக் காட்டாக நின்று கொண்டிருந்தனர்.

ஆண் சிங்கமும் பெண் சிங்கமும் புரியும் காதல் சேஷ்டைகளைப் புதிதாக ஒருவன் காண நேரிட்டால், இரண்டும் ஒன்றையொன்று கிழித்துக் கொன்று தின்ன முயற்சிக்கின்றனவோ என்றுதான் எண்ணுவான். ராதாவும் அவன் கணவனும் பார்த்துக் கொண்ட அந்தப் பார்வையைக் கண்ட கோகிலாவும் அப்படித்தான் எண்ணினாள். பசி வெறி பிடித்த ஓநாயைப் போலத் தோற்றும் இந்தக் காட்டுமிராண்டி மனிதன் ராதாவின்மீது பாய்ந்து ராதாவை ரத்தக்காயமாக்கி விடாமல் இருக்க வேண்டுமே என்று கோகிலா பயந்தாள். எனவே, அவள் தன் குரலில் குழைவை வரவழைத்துக் கொண்டு, "வா! அப்பா, வா! உன்னைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். உன் நினைவாகவே இருக்கும் ராதா ஒரு நாள் இரவுகூடக் கண் கொட்டியதில்லை. எப்பொழுது பார்த்தாலும் இவளுக்கு உன் நினைவுதான்!" என்றாள்.



கை விலங்கு, கால் விலங்கு அணிந்து வசவும் திட்டும் கேட்டுக் கேட்டுக் காது புளித்துப் போன ராதாவின் கணவனுக்கு, மதிப்பும் மரியாதையும் மிகுந்த அந்தச் சொற்களில் ஒரு புதுமை மிளிர்வதாகத் தோன்றியது. சிறையிலிருந்து விடுபட்டு வெளி வந்தவன் என்ற காரணத்தினால் எங்கு சென்றாலும் காது கொடுத்துக் கேட்க முடியாத இழி சொற்களைத்தான் நாம் கேட்க நேரிடும் என்று அவன் எதிர்பார்த்தான். அவனது சொந்த மனைவியே அவனுக்குத் தகுந்த மரியாதை செலுத்துவாளோ, மாட்டாளோ? இந்த விஷயத்திலே கூட அவனுக்குச் சந்தேகமாகத்தான் இருந்தது. அவன் நினைத்து வந்ததும் நடப்பதும் நேர் எதிர்மாறாக இருக்கவே அவன் அயர்ந்து போனான். நன்றிப் பெருக்கில் அவன் ஏதோ சொல்ல வாய் எடுத்தான். ஆனால் அவன் வாயிலிருந்து சொற்களே எழும்பவில்லை. எனவே, அவன் எதுவும் சொல்ல மாட்டாமல் அப்படியே தரையில் உட்கார்ந்து விட்டான்.

"உன் பெயர் என்ன?" என்று அவனைப் பார்த்துக் கேட்டாள் கோகிலா. தான் கேட்டு வைத்திருந்த பெயருள்ள மனிதனாக இருப்பானோ மாட்டானோ என்ற சந்தேகம் திடுதிப்பென்று அவளுக்கு முளைத்துவிட்டது. சந்தேகம் என்று ஒன்று ஏற்பட்டுவிட்டால் அதைப் போக்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டியது தானே நியாயம்?

"வத்ஸராஜ்!" என்று பதில் அளித்தான் அவன். ராதாவின் கணவன் பெயர் என்னவென்பதைக் கோகிலா முன்பே கேட்டுத் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தாள்.

கணவனின் பெயரை மனைவி சொல்வதில்லை என்ற பழக்கம் இன்றும் நம் நாட்டில் நிலவி வருகிறது. கணவனின் பெயரைச் சொல்லாமல் காரியம் நடவாது என்ற நிலைமை ஏற்பட்டு விட்ட பொழுதிலும் கூட நம் நாட்டுப் பட்டிக்காட்டுப் பெண்கள் இலேசில் பெயரைச் சொல்லி விடுவதில்லை. அவர்கள் வாய்மொழியாகக் கணவன் பெயரைச் சொல்ல வைப்பதற்கு வெகு பிரயாசை எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்விஷயத்

தில் பெண்கள்தான் சாமர்த்திய சாலிகள். அவர்களுக்குத்தான் வெற்றியும் கிட்டுகிறது. கோகிலா இந்தக் காரியத்தில் வெற்றி கண்டிருந்தாள். வத்ஸராஜ் என்ற பெயரைக் கேட்டதும் அவனுக்கு, அவன்தான் ராதாவின் கணவன் என்ற நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. உடனே ஊஞ்சலில் உட்கார்ந்து ஆடிக்கொண்டிருந்த அமரனை அருகில் அழைத்து "அமர்! இங்கே வந்து பார்! உன் அப்பா வந்திருக்கிறார்!" என்றாள்.

அமரன் விளையாட்டை அப்படியே நிறுத்தி விட்டு இறங்கி வந்தான். அவன் மனம் தந்தையைப் பற்றிய கற்பனையில் லயித்து விட்டது. வத்ஸராஜைப் பார்த்த அவனுக்குப் பயமாகப் போய்விட்டது. மெதுவாக அருகில் வந்தான். தன் தந்தையைத் தேடுவதற்காகத் தானே தாயுடன் அவனும் வீட்டை விட்டுப் புறப்பட்டு வந்திருந்தான்? சிறு குழந்தையாக இருந்த பொழுதிலும் அவனுக்கு இவ்விஷயம் நன்றாக நினைவிருந்தது.

அவன் தேடி வந்த தகப்பன் இவனா? இப்படியும் இருக்குமோ? இத்தகைய தெளிவற்ற எண்ணம் தோய்ந்த கண்களுடன் அவன் தன் தந்தையை நோக்கினான். தந்தையைப் பற்றி அவன் கற்பனை செய்து வைத்திருந்ததற்கும் நேரில் பார்ப்பதற்கும் சம்பந்தமில்லாமல் தோன்றியதனால் அப்படிப் பார்த்தானோ, என்னவோ?

வத்ஸராஜும் கண் கொட்டாமல் பச்சிளம் பாலகனான அமரனைப் பார்த்தான். வத்ஸராஜின் பயங்கர உருவத்தைப் பார்த்த அமரன் அச்சத்துடன் பின் நகர்ந்தான். கோகிலா அவனைத் தூக்கி அவன் தந்தையின் அருகில் உட்கார வைத்தாள்.

வத்ஸராஜ் தன் குழந்தையிடம் அன்பைப் பொழியவில்லை. அவன் தலையைத் தன் கரங்களினால் வருடிக் கொடுத்து ஆதரவு காட்டவில்லை. ஆனால் அவன் தொண்டை தழுதழுத்து நெகிழ்ந்து விட்டது. விழிகளில் சோர்ந்த நீர் முத்திட்டு நின்றது. பிள்ளையை மேலும் பார்த்துக் கொண்டிருக்க முடியாமல் அவன் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டான். அவன் என்னதான் முகத்தைத் திருப்பிக் கொண்டு என்ன? பிள்ளையை விட்டு விலகிய பார்வை மனைவியின் மீது விழுந்தது. ராதா குனிந்த தலையுடன் தரையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அதற்காக அவன் கண்களில் கோத்து நின்ற நீரை வத்ஸராஜ் கவனிக்காமல் இருந்திருப்பான் என்று சொல்லிவிட முடியுமா?

சிறைச்சாலை வாழ்வு அவனைக் கல்நெஞ்சினனாக்கி யிருந்தது. குற்றவாளிக் கூண்டில் ஏறிக் குற்றவாளி என்று ருசுவாகிக் கடுந்தண்டனை அடைந்த பின் அவன் உலகத்தையே அலட்சியப் படுத்தத் தொடங்கியிருந்தான். உலக விவகாரங்களைப் பொறுத்தவரை அவன் உள்ளத்தைப் பெரும் பாறாங்கல்லாக்கிக் கொண்டிருந்தான். அத்தகைய பாறை நெஞ்சையும் பிளந்து வேதனை வருத்தத் தொடங்கி விட்டது. மிருந்த பிரயாசைக்குப் பிறகு கண்களில் கொப்புளித்துக் கொண்டிருந்த நீரை அவன் கண்களுக்குள்ளேயே அடக்கிக் கொண்டான். அழுந்திய வேதனை அவன் உள்ளத்தை உடைத்து விட்டது. அதனால் அவன் குரல் பிறர் சட்டென்று புரிந்து கொள்ள முடியாத வகையில் ஒலித்தது. "ராதா! உனக்கு ரொம்ப ரொம்பக் கஷ்டப்படும்படி நேரிட்டிருக்கும். இல்லையா?" என்று கேட்டான்.

கணவன் வாயிலிருந்து வெளி வந்த சொற்களைக் கேட்டதும் உள்ளத்துத் துயரத்தை உள்ளத்திலேயே அடக்க முயன்று கொண்டிருந்த ராதாவின் முயற்சி வீணாகி விட்டது. மனம் வசமிழந்து விடவே, அவள் பிழியப் பிழிய அழத் தொடங்கினாள்.

அவள் கண்களிலிருந்து நீர் ஆறாகப் பெருகத் தொடங்கி விட்டது. வெளியே உள்ள தெரு அதிக ஜன நடமாட்டம் உள்ளதாக இல்லாமலிருந்தால், அவள் அழுத அழுகை தெருவில் வருவோர் போவோரின் காதில்கூட விழுந்திருக்கும். சிறிது நேரம் பொறுத்து அவள் அழுகையை அடக்கிக் கொண்டு பேச முயற்சித்தாள். இருந்தாலும் குரலில் அதன் சாயை தொனித்தது. "அப்படியொன்றும் எனக்குக் கஷ்டம் ஏற்படவில்லை. ஆனால் சிறையில் ஐந்து வருஷங்கள் நீங்கள் எப்படித்தான்......!" என்று இழுத்தாள்.

அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. சொல்ல நினைத்ததைச் சொல்ல முடியாமலே நிறுத்திக் கொண்டாள். வத்ஸராஜ் மனம் பேதலித்தவனைப் போல் கண்களை உருட்டி உருட்டி ஒவ்வொருவரையும் பார்க்கலானான். ஐந்து வருஷங்கள் கழித்துச் சந்திக்கும் கணவன்-மனைவியைத் தனியே விட்டுவிட வேண்டும், அவர்களுக்குக் குந்தகமாக நாம் நிற்கக் கூடாது என்று கோகிலாவுக்குத் தோன்றியது. அதனால் அவள், "அமர்! பியூஷ்! உள்ளே வாருங்கள்! உங்களுக்கு நான் ஒன்று தருகிறேன்!" என்று அழைத்தாள்.

இரண்டு குழந்தைகளும் கும்மாளம் போட்டுக் கொண்டு அவளுடன் வந்தன. அவள் அந்த அறையை விட்டு வெளியேறி அந்தண்டை போயிருக்க மாட்டாள். அதற்குள் கதவு தட்டும் சப்தம் கேட்டது. உடனே கோகிலா திரும்பிப் பார்த்தாள். சும்மாச் சாத்தியிருந்த கதவைத் திறந்து கொண்டு ஏழெட்டுப் போலீஸ்காரர்கள் 'தமதம' வென்று அவள் வீட்டுக்குள்ளே நுழைந்து வந்தார்கள். அதைக் கண்ட கோகிலா அவர்கள் அருகில் சென்று, முதலில் வந்து கொண்டிருந்த போலீஸ்காரரைப் பார்த்து, "இங்கே உங்களுக்கு என்ன வேலை?" என்று கேட்டாள்.

பின்னால் வந்து கொண்டிருந்த சப் இன்ஸ்பெக்டர் முன்னால் வந்து, "இதோ நான் சொல்கிறேன். முதலில் நீங்கள் எல்லோரும்


மிக்க எழிலுடன் இருப்பதற்கு ஏற்ற சமயம்!
புதுமையுடன் நறுமணம் கமழும்
அப்கான் ஸ்னோ
நாரீமணிகளின் அழகை பாதுகாத்து. மேலும் மேலும் சிறப்பிக்கச் செய்கிறது. நாள் முழுதும் சருமத்தை மிருதுவாகப் பட்டுப் போன்று சோபிக்கச் செய்கிறது.
அப்கான் ஸ்னோ
பிடன்வாலா


இதோ! ஒருமுறை பிரஷ் கொண்டு தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
சொத்தையும் துர்நாற்றமும் ஏற்படுத்தும்
பாக்டீரியா கிருமிகளை 85% ஒழிக்கிறது!
COLGATE
COLGATE
RIBBON DENTAL CREAM

இப்படி உட்காருங்கள். இங்கிருந்து யாரும் அந்தண்டை-இந்தண்டை அசையக் கூடாது. இப்பொழுது இந்த வீட்டை நாங்கள் சோதனை போடப் போகிறோம்!'' என்றார்.

''எதற்காக?'' என்று கோகிலா தைரியமாகக் கேட்டாள்.

''உன் புருஷன் திருடிக் கொண்டு ஓடியிருக்கிறான். அதற்காகத்தான்......!'' என்றார் சப் இன்ஸ்பெக்டர்.

ஆரம்பத்தில் கோகிலாவுக்கு ஒன்றும் புரியவில்லை. புரிந்த பின், சப் இன்ஸ்பெக்டர் சொன்ன சொற்களில் நம்பிக்கை விழவில்லை. அவளுக்குத் தன் கணவன் அப்படிச் செய்யக் கூடியவன் என்ற நினைப்பே எழவில்லை. அதனால், ''ஒருகாலும் அப்படி இருக்கவே இருக்காது!'' என்றாள்.

''நீ சொன்னால் ஆயிற்றா? குற்றவாளியை நாங்கள் எப்படியும் பிடிக்கப் போகிறோம். ஒளிக்காமல் உண்மையைச் சொல்லு. குற்றவாளியை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய்? அல்லது எங்கேயாவது விரட்டி விட்டாயா?'' என்று கேட்டார் சப் இன்ஸ்பெக்டர்.

''எனக்கு எதுவுமே தெரியாது. என்னிடம் கேட்காதீர்கள்!'' என்று கோகிலா கடிந்து கொண்டாள். சப் இன்ஸ்பெக்டர் தம் மனைவியைத் தவிர வேறு பெண்கள் தம்மைக் கோபித்து அறிந்தவர் அல்ல. அவருக்கு இது புது அநுபவமாக இருந்தது. எனவே, ஆத்திரத்துடன், ''ஓகோ! இத்தனை தூரத்துக்கு வந்து விட்டதா? நாலு சவுக்கடி விழுந்தால் தானாக விஷயத்தைக் கக்குகிறாய்! என்னிடம் உன் ஜபம் சாயாது. நினைவு வைத்துக் கொள்!'' என்றார்.

கோகிலா அத்தகைய சொற்களை அதுவரை கேட்டவளும் அல்ல; தாங்கக் கூடியவளும் அல்ல. எனவே, அவமானத் தீ தன்னைச் சுட்டெரிப்பதாக அவளுக்குத் தோன்றியது. மனம் வெதும்பிப் புழுவாகத் துடித்தாள். அதைக் கண்ணுற்ற ராதாவுக்குக் காரணம் விளங்கவில்லை. கோகிலாவின் துடிப்பு அவன் மனத்தை என்னவோ செய்தது. இங்கும் அங்கும் ஒரு முறை பார்த்தான். பிறகு தன் கணவன் வத்ஸராஜைப் பார்த்து, 'இவர்கள் எனக்கு இடம்கொடுத்து உதவி செய்தவர்கள். அதனால் இவர்களுக்கு நாம் நன்றிக் கடன் பட்டிருக்கிறோம்!' என்பதை ஜாடையாகச் சொன்னாள்.

அவள் சமிக்ஞையைச் சரியாகப் புரிந்து கொண்ட வத்ஸராஜ் சட்டென்று எழுந்து நின்றான். பிறகு மெதுவான—ஆனால் அதே சமயம் அச்சம் விளைக்கக் கூடிய குரலில், ''போலீஸ் ஐயா! கொஞ்சம் நாவை அடக்கிப் பேசுங்கள்!'' என்றான்.

விசித்திரமான உடையில் விசித்திரமாகத் தோற்றமளித்த அந்தப் பட்டிக்காட்டானின் குரலைக் கேட்டதும் எல்லோருடைய கவனமும் அவன்மீது சென்றது.

சர்வ சக்தி வாய்ந்த கடவுளை அவமதித்தாலும் அவமதிக்கலாம். ஆனால் போலீஸ் சப் இன்ஸ்பெக்டரை யாரும் அவமதிக்கக் கூடாது என்ற ஒழுங்கைக் கடைப்பிடிக்கும் ஒரு போலீஸ்காரருக்கு வத்ஸராஜின் பேச்சைக் கேட்டதும் மீசை துடித்தது. ''டேய், காட்டுப் பயலே! நீ யாரடா அவன்? போடா, பின்னால்!'' என்று அதிகார மிடுக்குடன் அதட்டினார். அது மட்டும் அல்ல; அடிக்கப் போவதுபோல் தடியைத் தூக்கிக் கொண்டு அவன் மேல் பாயவும் பாய்ந்தார்.

போலீஸ்காரர்களின் தடியைக் காட்டிலும் பயங்கரமான ஆயுதப் பிரயோகங்களுக்கு ஆளானவன் வத்ஸராஜ். அவன் அதை ஒரு பொருட்டாக மதிப்பானா? கன கம்பீரமாகச் சிறிதும் அஞ்சாமல் அருகில் சென்று கையை லாகவமாக வீசி போலீஸ்காரரின் கழுத்தைப் பிடித்தான். ''ஏன், அப்பேன்! அடிப்பாயோ? ஒரு குத்து விட்டேன் என்றால் சுருண்டு சுருண்டு விழுவாய்! ஹூம், இவர் தான் என்னை அடிப்பாராம்! அடிக்கிற ஆளைப் பாரு, ஆளை!'' என்றான் கனத்த குரலில்.

அங்கு வந்திருந்த போலீஸ்காரர்கள் அத்தனை பேரையும் காட்டிலும் அதிக உயரமாகவும் பலம் பொருந்தியவனுமாகக் காட்சியளித்த வத்ஸராஜைக் கண் கொட்டாமல் சப் இன்ஸ்பெக்டர் சிறிது நேரம் பார்த்தார். அதிகாரிகளிடம் அவனைப் போன்ற வீரத்தைக் காண முடியுமா? இம்மாதிரி சமயங்களில் சாமர்த்தியம் தானே அவர்களுக்குக் கை கொடுத்து உதவுகிறது? சப் இன்ஸ்பெக்டரிடம் அத்தகைய வீரம் இல்லைதான்; ஆனால் அதையும் சேர்த்து வைத்துச் சாமர்த்தியம் குடி கொண்டிருந்தது. எனவே, வத்ஸராஜைப் பார்த்து, ''ஏன், தம்பி! வழக்கை வீணாக வளர்த்த விரும்புகிறாயா?'' என்று வெகு படிமானமாகக் கேட்டார்.

''வீண் சண்டைக்கு வருகிற ஆள் நான் இல்லை. நீ உன் நாக்கை அடக்கிப் பேசினால் நான் எதற்கு உன் வம்புக்கு வருகிறேன்? வீணாக வார்த்தையைக் கொட்டாமல் பேசு. உன் சட்டப்படி சோதனை போட்டுக் கொண்டு போ. இங்கே யாரும் தடுக்க மாட்டார்கள்!'' என்றான் வத்ஸராஜ்.

வத்ஸராஜின் வார்த்தைகளைக் கேட்டு, சப் இன்ஸ்பெக்டர் சிரித்தார். ''தம்பி! இந்தக் காலத்தில் அசல் பட்டிக்காட்டான் கூட வல்லவா சட்டத்தையும் திட்டத்தையும் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறான்? வர வரக் காலம் முன்னேறிக் கொண்டிருக்கிறது அல்லவா? சரி, சரி! உனக்கு நான் சட்டம் சொல்லித் தருகிறேன். அது இருக்கட்டும். முதலில் இதைச் சொல். நீ யார்?'' என்றார்.

''நான் யாராயிருந்தால் என்ன ஐயா?''

''சொல்லு, தம்பி! நீ வத்ஸராஜ்தானே?''

''ஆமாம்! வத்ஸராஜ்தான்! உன் கையால் தானே நான் பிடிக்கப்பட்டேன். இதுகூட உனக்கு நினைவில்லையா?''

''நினைவில்லாமல் இருக்குமா, தம்பி? இருந்தாலும் நான் என்ன செய்வேன்,

சொல்லு! சட்டப்படி வேலையைக் கவனிக்க வேண்டியதுதானே என்னுடைய கடமை!— ஏன், தம்பி! நீ எப்பொழுது விடுபட்டு வெளியே வந்தாய்?" என்று கேட்டார்.

"இன்றைக்குத்தான்!"

"நீ இங்கே எதற்காக வந்தாய்? இன்றைக்கு இந்த வீட்டுக்காரன் என்ன செய்திருக்கிறான், தெரியுமா? பதினையாயிரம் ரூபாயைத் திருடிக் கொண்டு ஓடியிருக்கிறான். இந்தச் சமயத்தில் நீயும் சிறையிலிருந்து விடுபட்டு இங்கே வந்து சேர்ந்திருக்கிறாய். அதனால் சந்தேகம் இன்னும் வலுக்குமே!" என்றார் சப் இன்ஸ்பெக்டர்.

"நான் இப்பொழுதே புறப்பட்டு விடுவேன். இவளை அழைத்துக் கொண்டு போவதற்காக வந்திருக்கிறேன்!" என்று சொல்லி வத்ஸராஜ் கை ஜாடையினால் ராதாவைச் சுட்டிக் காட்டினான்.

"ஓகோ! நீ கல்யாணம் கட்டிக் கொண்டவனா? எனக்குத் தெரியாதே!" என்று சொல்லிய சப் இன்ஸ்பெக்டர் போலீஸ்காரர்களுக்கு வீட்டைச் சோதனையிடுமாறு உத்தர விட்டார். சோதனையில் எத்தனையோ காகிதங்களைக் கைப்பற்றிக் கொண்டார். கோகிலா, ராதா, வத்ஸராஜ் மூவரிடமும் வாக்கு மூலம் வாங்கிக் கொண்டார். வீட்டில் கள்வனோ, களவுப்பொருளோ கிடைக்கவில்லை. இவ்விரு விவரங்களையும் தெரிந்து கொள்வதற்காக அவர்களை அதட்டினார்; மிரட்டினார். வாய் வார்த்தையாகக் கேட்டுப் பார்த்தார்; கைது செய்து விடுவேன் என்று பயமுறுத்தியும் பார்த்தார். உண்மையைச் சொல்லி விட்டால் உங்களை விட்டு விடுகிறேன் என்று ஆசை வார்த்தையும் காட்டிப் பார்த்து விட்டார். எதற்கும் பலன் ஏற்படாமற் போகவே, கடைசியில் போலீஸ்காரர்களை அழைத்துக் கொண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார்.

இரவு பகல் எந்நேரமும் அந்த வீட்டில் கண் வைத்திருக்கும்படி சாதா உடை உடுக்கும் ரகசியப் போலீஸ் அதிகாரிகளை நியமித்தார். திருடிக் கொண்டு ஓடிய ஜகதீஷ் முதன் முதலில் இங்கேதான் வருவான் என்பது அவருடைய அசைக்க முடியாத நம்பிக்கை. அவன் எப்பொழுது வருவான், எப்பொழுது போவான் என்று நேரம் பொழுது குறிக்க முடியுமா? எனவேதான் ரகசியப் போலீஸார்கள் நியமிக்கப்பட்டனர்.

சப் இன்ஸ்பெக்டர் வந்துவிட்டுப் போன பொழுது நன்றாக வெளிச்சம் மறையத் தொடங்கி விட்டது. விளக்கு ஏற்றும் சாக்கில் கோகிலா உள்ளே சென்றாள். போகும் பொழுது குழந்தைகளையும் கூடவே அழைத்துச் சென்றாள். அவர்களுக்கு ஏதோ தின்பண்டங்களும் அளித்தான்.

இதுவரை கோகிலா எத்தனையோ துயரங்கள் பட்டிருக்கிறாள்; எல்லாவற்றையும் பொறுமையோடு அநுபவித்தும் இருக்கிறாள். ஆனால் இத்தனை நாளும் அத்துயரங்கள்

எல்லாம் அவளுக்கு ஒரு கஷ்டமாகத் தோன்றியதில்லை, காரணம், ஜகதீஷ் அவள் கண்களெதிரிலேயே இருந்ததுதான்.

ஆனால் இன்றோ?......ஜகதீஷ் திருடிக் கொண்டு ஓடி விட்டான் என்னும் செய்தியை அவள் செவியுற்றாள். ஆனால் அவள் மனம் அதை உண்மை என்று ஏற்க மறுத்தது. ஜகதீஷ் திருடுவான் என்ற எண்ணமே அவள் உள்ளத்தில் இதுகாறும் எழுந்ததில்லை. முதலில் ஏதாவது அத்தகைய எண்ணம் ஏற்பட்டிருந்தால் அல்லவா பின்னால் நம்பிக்கை ஏற்படுவதற்கு?

திருட்டுப் போன தொகை பெரிதுதான். குடும்பக் கஷ்டம் அவனை வாட்டிக் கொண்டிருந்தது. எப்படிக் குடும்பம் நடத்துவது என்று வழிவகை தெரியாமல் அவன் விழித்துக் கொண்டிருந்தான். அவன் பிறர் கீழ் கைகட்டிச் சேவகம் செய்ய விரும்பவில்லை என்பதும் உண்மை. அதற்காக அவன் திருட்டுத் தொழிலை மேற்கொண்டிருப்பானோ?

கோகிலாவுக்குத் துளிக்கூட இந்த விஷயத்தில் நம்பிக்கை உண்டாகவில்லை. இது நடக்கக் கூடிய காரியமே இல்லை என்றுதான் அவள் முடிவு கட்டினாள். ஜகதீஷ் இந்த உலகத்தினிடம் கட்டுக் கடங்காத கோபம் கொண்டிருந்தான். இந்த உலகத்தைப் பழி வாங்கவும் திட்டமிட்டிருந்தான். அதற்காக அவன் பதினையாயிரம் ரூபாயைப் பேடி போல் திருடிக் கொண்டா போவான்? மாட்டான்; மாட்டவே மாட்டான். பத்துப் பேருக்கு எதிரில் நின்று கொள்ளை வேண்டுமானால் அடித்திருப்பானே யொழிய ஒரு நாளும் இம்மாதிரித் திருட்டுத் தொழிலில் இறங்கி யிருக்க மாட்டான். கோகிலா இப்படித்தான் அவனைப்பற்றி எண்ணமிட்டாள்.

ஆனால் அவனும் மனுஷ்யன் தானே? மனுஷ்யர்களுக்கு ஏற்படும் பலவீனம் அவனுக்கும் ஏற்பட்டிருக்கலாம் அல்லவா? அத்தகைய பலவீனம் ஆட்கொண்ட சமயத்தில் அவன் திருடியிருந்தால்...? இப்படி நினைத்ததும் கோகிலாவுக்கு உடலை ஓரேயடியாகத் தூக்கிவாரிப் போட்டது.

ஜகதீஷைப் போலீஸார் பிடிப்பார்கள். கைகளிலும் கால்களிலும் இரும்புக் காப்பை அணிவிப்பார்கள். நியாய ஸ்தலத்தில் கொண்டு போய்க் கூண்டில் ஏற்றுவார்கள். விசாரணை நடக்கும். தண்டனை கிடைக்கும். அப்புறம் அவன் எத்தனை வருஷங்கள் சிறையில் வாடி மடிய வேண்டி வருமோ, யார் கண்டார்கள்?

இது போன்ற கற்பனைகளுக்கு அவள் இதயம் இடம் கொடுத்து விட்டது. அவள் எத்தனையோ நாட்களாகவே ஏழைமையைப் பொறுத்துக் கொண்டிருந்தாள். வரும் அவச்சொற்களையும் அவமானங்களையும்கூட அவள் பொறுத்துக் கொள்ளத் தயாராயிருந்தாள். ஆனால் ஜகதீஷின் பிரிவை எப்படிப் பொறுத்துக் கொள்வது? இந்தப் பிரச்னை அவள் மனத்தை மலையாக மறைத்தது. (தொடரும்)



ஆங்கிலக் கதை - மொழிபெயர்ப்பு : ஜெயமணி

படை அணிவகுப்பு முடிந்ததும், சிப்பாய்கள் எல்லோரும் அங்கிருந்து கலைந்தனர். அவர்களின் 'பூட்ஸ்' சத்தம் காதைத் துளைத்தது. ஆனால் ஹார்மன் என்ற பெயருள்ள சிப்பாய் மாத்திரம் அணிவகுப்பு வரிசையில் தான் எந்த இடத்தில் இருந்தானோ, அதே இடத்தில் தன்னை மறந்து நின்று கொண்டிருந்தான். கலைந்து சென்ற மற்றச் சிப்பாய்களுடன் அவன் செல்லவில்லை.

பயிற்சி முகாம் தளபதி நிகழ்த்திய ஆவேசப் பிரசங்கம் அவன் காதுகளில் இன்னும் ஒலித்துக் கொண்டிருந்தது.

"உங்களுடைய தேசத்தின் கௌரவத்தைப் பாதுகாக்கும் புனிதமான கடமையை நிறைவேற்றுவதற்காக இந்த ஸ்தாபனம் உங்களுக்குப் பயிற்சி அளித்திருக்கிறது. பகைவன் எதிர்ப்பட்டால் நீங்கள் அவனைத் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டிருக்கக் கூடாது. துப்பாக்கியால் சுட்டால் ஒரு வேளை அவன் தப்பித்துக் கொள்ளலாம் அல்லவா? அவன் மேலே பாய்ந்து விழுந்து அவனைப் பிண்டமாக்கி விடவேண்டும். துப்பாக்கி ஈட்டியால் பகைவனைக் குத்திக் கொண்டிருக்கக் கூடாது. அவனது ஹிருதயத்தைப் பிய்த்து எறிந்து விட வேண்டும். உங்களுக்கு எல்லையற்ற துணிச்சல் வேண்டும்; நிலையான பார்வை வேண்டும்; உறுதியான கைகள் வேண்டும்."

தளபதி கடைசியாகக் கூறிய வார்த்தைகளை,– அதாவது "நிலையான பார்வை வேண்டும்; உறுதியான கைகள் வேண்டும்" என்ற வார்த்தைகளை, ஹார்மன் முணுமுணுத்தான். பிறகு பல்லைக் கடித்துக் கொண்டு, அணிவகுப்பு மைதானத்தை விட்டு விடுதிக்கு விரைந்து சென்றான்.

* * *

ஹார்மன் கடைசித் தடவையாக முகாமைச் சுற்றிக் கண்ணோட்ட மிட்டான். முகாமைச் சுற்றி நாற்புறங்களிலும் வயல்கள் காட்சியளித்தன. அந்த இடத்துக்கும் தன் சொந்த ஊருக்கும் உள்ள வித்தியாசத்தை ஹார்மனால் அச்சமயம் ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

இனிமேல் அவன் மற்றவர்களுடன் போர் முனைக்குச் செல்ல வேண்டும் என்று தளபதி கட்டளையிட்டதை நினைக்க அவனுக்கு வருத்தமாக இருந்தது. இனிமேல் அவன் தன் சொந்த ஊரை மறுபடியும் எக்காலத்தில் பார்க்க முடிகிறதோ!

ஹார்மன் தன் உணர்ச்சிகளை நண்பர்களிடம் பகிரங்கமாக வெளியிட்டான்.

"இனி, இதற்கெல்லாம் நீ வருந்தக்கூடாது, அப்பா. இனி மேல் உன் சிந்தனையெல்லாம் பகைவனை எப்படி ஒழிப்பது என்பதிலேயே லயிக்க வேண்டும். எங்கேயாவது பகைவனைக் கொல்ல முடியாமற் போனால்தான் நீ வருந்த வேண்டும்! வேறு எதற்கும் வருந்தக்கூடாது. பகைவனைப் பலியிட வேண்டும் என்பதைத் தவிர வேறு எந்த உணர்ச்சிக்கும் போர் முனையில் சிறிதும் இடமில்லை."

இவ்விதம் ஹார்மனுக்குப் புத்திமதியாக பில்லி என்ற சிப்பாய் கூறியதை மற்றவர்கள் ஆமோதித்தனர்.

நண்பர்களின் முன்னிலையில் தான் அவ்விதம் உணர்ச்சி வசப்பட்டது, ஹார்மனுக்குச் சிறிது வெட்கமாக இருந்தது.

"சிற்சில சமயங்களில் நான் அவ்விதம் உணர்ச்சி வசப்படுவது உண்டு. இருந்தாலும் உடனே அதைச் சமாளித்துக் கொண்டு விடுவேன்" என்று அவன் சமாதானம் கூறினான்.

அவ்வாறு சொல்லிய வண்ணம் ஹர்மன் கெடிகாரத்தைப் பார்த்தான். அவர்கள் புறப்பட்டுச் செல்லுவதற்கு இன்னும் இரண்டு மணி நேரம்தான் இருந்தது.

"நாம் புறப்படும் நேரம் நெருங்கி விட்டது. தயாராக இருக்க வேண்டாமா?" என்று கூறிக் கொண்டே ஹர்மன் விடுதிக்குச் சென்றான். மற்ற சிப்பாய்களும் அவனைப் பின் தொடர்ந்து சென்றனர்.

* * *

போர் முனை செல்லுவதற்குத் தயாராகக் காத்துக் கொண்டிருந்தான் ஹர்மன். எங்கும் இருள் சூழ்ந்திருந்தும் கூட பலரும் அங்கு மிங்கும் ஓடிக் கொண்டு வெகு சுறு சுறுப்பாக இருந்தனர். மோட்டார் டிரக்குகள் சாமான்களுடன் புறப்படுவதற்குத் தயாராக நின்று கொண்டிருந்தன. அந்த அந்தகாரத்தில் ஒவ்வொரு டிரக்கும் ஓர் இருள் குன்றுபோல் தோன்றியது. குளிர் தாங்க முடியவில்லை. எனவே கம்பளிச் சட்டைகள் போதா வென்று ஹர்மன் கையுறைகளையும் போட்டுக் கொண்டான். கடைசியாக அவன் டிரக்குகளுக்கு அருகில் வந்து சிறிது நேரம் எதுவும் தோன்றாமல், உணர்வற்று, செயலற்று அப்படியே ஸ்தம்பித்து நின்று கொண்டிருந்தான்.

சக்கரங்கள் மெதுவாக உருளத் தொடங்கின. டிரக்குகள் புறப்பட்டு விட்டன என்பது ஹர்மனுக்குத் தெரிந்தது. சட்டென்று அருகிலிருந்த ஒரு டிரக்கில் அவன் தொத்தி ஏறிக் கொண்டான்.

அந்த டிரக்கில் ஏராளமான சிப்பாய்கள் ஏறிக் கொண்டிருந்தது, அவன் அதில் ஏறிய பிறகுதான் தெரிந்தது. டிரக்கில் தாராளமாக இடம் இருக்கும், கால்களை நீட்டிக் கொண்டு சுகமாகப் படுத்துச் செல்லலாம் என்று அவன் எண்ணிக் கொண்டிருந்தான். ஆனால் அதில் கூட்டமாக இருந்ததால், நெருக்கியடித்துக் கொண்டு உட்காருவதற்கும் அவனுக்குக் கஷ்டமாக இருந்தது. கை கால்களை முடக்கிக் கொண்டு வேதனையுடன் உட்கார வேண்டியிருந்தது.

குளிர் காலமாக இருந்தும், நெருக்கத்தினால் அவனுக்கு வியர்வை கொட்டியது. மோட்டார் இஞ்ஜின் ஒரு தடவை உறுமியதும் டிரக்கு புறப்பட்டது. அப்போது அவன் முகத்தில் அடித்த குளிர்ந்த காற்று, வியர்வையால் நனைந்திருந்த அவன் தேகத்துக்கு மிகவும் இதமாக இருந்தது.

இராணுவப் பயிற்சி முகாமுக்கும் போர் முனைக்கும் மிகுந்த வேற்றுமை இருந்ததை ஹர்மனும் அவனது நண்பர்களும் கண்டனர். பயிற்சி முகாமில் அவர்கள் உடைகளில் சிறிதும் அழுக்குப் படாமல் சுத்தமாக இருக்க முடிந்தது. நேரம் தவறாமல் அவர்களுக்கு உணவு, உடைகள் கிடைத்து வந்தன. ஆனால் போர்முனையிலோ எல்லாம் தலை கீழாகி விட்டன! அங்கு அவர்களுடைய வாழ்க்கைக்கும் மிருகங்களின் வாழ்க்கைக்கும் அதிக வேற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை. எப்படியாவது உயிரைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்ச்சியே மேலோங்கி நின்றது!

போர் அகழ்களில் இருந்து கொண்டே அவர்கள் அரை வயிற்றுக்குக் கூடப்போதாத உணவை உட்கொள்ள வேண்டி யிருந்தது. முகாமில் அவர்களுக்குக் கிடைத்த தாராளமான சாப்பாட்டுக்கும் வயிற்றெரிச்சலை உண்டுபண்ணும் போர்முனைச் சாப்பாட்டுக்கும் எவ்வளவு வேற்றுமை! அவர்களுக்கு அதைப் பற்றிப் பேசவே பிடிக்கவில்லை.

* * *

திடீரென்று ஒருவிதமான சத்தம் கேட்டது. அவர்கள் அருகில் ஒரு பீரங்கி குண்டு வெடித்ததே மேற்படி சத்தத்துக்குக் காரணம். அதன் விளைவாக, அவர்கள் பதுங்கியிருந்த குழியின் சுவரில் ஒரு பகுதி பெயர்ந்து விழுந்தது. அப்போது ஹர்மன் இருளில் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். சாப்பாட்டில் மண் வாசனையும் கலந்திருந்தது. ஒரு வேளை, சுவரிலிருந்த மண் அவன் உணவில் விழுந்து விட்டதோ, என்னவோ! அவனுக்கு அந்த உணவைச் சாப்பிடவே பிடிக்கவில்லை. இருந்தாலும் என்ன செய்வது? பசிக்கு ஏதாவது சாப்பிட்டுத்தானே தீர வேண்டும். அதுதான் போர்முனை வாழ்க்கை என்பதை உணர்ந்தான் ஹர்மன்.

பீரங்கி வெடி நின்றது. ஹர்மன் கோஷ்டியைச் சேர்ந்த படைகள் மேற்கொண்டு பாய்ந்து பகைவர்களை எதிர்த்து முன்னேற வேண்டும் என்று அவர்களுக்குத் தளபதியிடமிருந்து கட்டளை பிறந்தது. அதற்கிணங்க, அவர்கள் முன்னேறிச் செல்லுகையில், பகைவர்களின் பக்கத்திலிருந்து திடீரென்று ஒரு வெளிச்சம் தெரிந்தது. அதன் பலனாக இருள் அகன்று போர்முனை எங்கும் பகல் போல் பிரகாசித்தது. அதைத் தொடர்ந்து பகைவர்களின் பீரங்கிகள் இடைவிடாமல் நெருப்பைக் கக்கத் தொடங்கின.

"வலது புறத்தில் பீரங்கி குண்டுகள் 'உஸ்' என்று சீறிச் சென்றன; இடது புறத்திலும் சீறிச் சென்றன; மேலும் கீழும் சீறிச் சென்றன" என்று போர்முனையைப் பற்றி ஒரு பிரபல கவி வர்ணித்திருப்பது ஹர்மனின் ஞாபகத்துக்கு வந்தது.

அந்தக் கவியின் வர்ணனையை இதுவரையில் ஹர்மன் வெறும் கற்பனை என்று எண்ணி வந்தான். ஆனால், இப்போது போர் முனையை நேரில் பார்த்த போதுதான், அந்தக் கவியின் கூற்று முற்றிலும் உண்மை என்பது அவனுக்குத் தெரிய வந்தது.

ஹர்மனுக்குப் பக்கத்தில் பில்லி இருந்தான். பகைவர்கள் பீரங்கிக் குண்டுகளைச் சரமாரியாகப் பிரயோகம் செய்வதைக் கண்டு அவனுக்கு ஆத்திரமாக வந்தது. பில்லி பற்களை நறநற வென்று கடித்தான்.

"அந்த நாய்கள் மாத்திரம் என் கையில் அகப்பட்டால், நான் என்ன செய்வேன் தெரியுமா? அவர்களை சுடமாட்டேன்; அவர்களின் ஹிருதயத்தை அப்படியே..."

பில்லி அதற்கு மேல் எதுவும் சொல்ல முடியவில்லை. ஏனெனில், அவன் மார்பில் ஒரு குண்டு பாய்ந்து விட்டது. அந்த வாக்கியத்தை அவன் முடிப்பதற்குள் அவனது வாழ்க்கை முடிந்து விட்டது. எனவே, வாயளவில் கூட அவன் பகைவன் மீது பழி வாங்க முடியாமற் போய் விட்டது!

ஹார்மன் பதறிப்போய் பில்லியின் உடலைத் தொட்டுப் பார்த்தான். அவனது உடல் உணர்ச்சியற்றுக் கிடந்தது. மரணம் எவ்வளவு கொடுமையானது, இரக்க மற்றது என்பதை ஹார்மன் அப்போதுதான் நேருக்கு நேராகத் தெரிந்து கொண்டான்.

* * *

"துப்பாக்கித் தோட்டாக்களை வீணாகச் செலவழிக்காதே. பகைவன் மீது பாய்ந்து அவனது ஹிருதயத்தைக் கிழித்து எறிந்து விடு" என்று பயிற்சி முகாமில் தளபதி கூறிய வார்த்தைகள் ஹார்மன் செவிகளில் மறுபடியும் ஒலித்தன. எனவே, அவன் எதையும் இலட்சியம் செய்யாமல் பகைவர்கள் மீது பாய்வதற்காக முன் சென்றான்.

எங்கும் பயங்கரமான இருள் சூழ்ந்திருந்தது. கருநிறம் படர்ந்த அந்த அந்தகாரத்தை நட்சத்திரங்கள் ஊடுருவ முயற்சிப்பது போல் தோன்றின.

பீரங்கிக் குண்டுகளும் தோட்டாக்களும் சரமாரியாக வந்து கொண்டிருந்ததால், ஹார்மன் மார்பால் ஊர்ந்து ஊர்ந்து முன்னேறிக் கொண்டிருந்தான். பீரங்கிகளின் சப்தம் காது செவிடுபடும்படி செய்தது. இதற்கிடையே போர்முனையில் படுகாயமடைந்தவர்களின் வேதனைக் குரல் கேட்போரின் உள்ளத்தை உருக்கி உலுக்கியது.

ஹார்மன் ஊர்ந்து சென்றதால் முட்செடிகள் பட்டு அவன் முழங்கால்கள் காயமடைந்தன. எனினும் அவன் அதை லட்சியம் செய்யவில்லை. அவன் பகைவர்கள் இருக்குமிடத்தை நோக்கி மேன்மேலும் சென்று கொண்டே இருந்தான்.

ஹார்மன் இருந்த இடத்துக்கும் பகைவர்களின் பீரங்கி இருந்த இடத்துக்கும் முப்பது கெஜ தூரம் தான் இருந்தது. பீரங்கிக்கு வெகு சமீபத்தில் அவன் சென்ற போது தான், இருட்டில் அது இலேசாகத் தெரிந்தது.

உடனே ஹார்மன் தன்னிடம் இருந்த எறிகுண்டைத் தயாராக எடுத்து வைத்துக் கொண்டான்.



திடீரென்று ஒரு வெளிச்சம் தெரிந்தது. அதன் மூலம் ஹார்மன் பீரங்கியை நெருங்கி விட்டதைப் பகைவர்கள் அறிந்து கொண்டனர். உடனே அவர்கள் ஹார்மனைக் குறிபார்த்துச் சரிமாரியாகச் சுடத் தொடங்கினர். அவன் அருகில் தோட்டாக்கள் சீறிக் கொண்டு சென்றன.

அதேசமயம் பீரங்கி படாரென்று வெடித்துத் தூளாகியது. ஹார்மன் போட்ட எறிகுண்டு தன் கடமையைச் செய்து விட்டது!

ஒன்று ஹார்மன் விழவேண்டும் அல்லது பகைவன் விழவேண்டும்;-இதுதான் ஹார்மனின் ஒரே எண்ணம்.

"ஒரு கடமை முடிந்தது" என்று ஹார்மன் தன்னைத் தானே வாழ்த்திக் கொண்டான். அவனுக்குப் பெருமூச்சு வாங்கியது.

சிறிது நேரம் உணர்ச்சியற்று அங்கேயே குப்புறப் படுத்துக் கொண்டிருந்தான். பிறகு மறுபடியும் ஊர்ந்து கொண்டே முன்னேறிச் சென்றான்.

அவ்விதம் அவன் சிறிது தூரம் சென்றதும் அங்கிருந்த குழிக்குள் தலைகுப்புற விழுந்து விட்டான். குழி இருந்தது, இருளில் அவனுக்குத் தெரியவில்லை. மேலே குப்புற விழுந்ததில் முகத்தில் அடிபட்டது. முழங் கால்களிலும் கடுமையான அடிபட்டு, இரத்தம் பெருகியது. அவன் வலி பொறுக்க முடியாமல் வீறிட்டுக் கத்தினான். ஆனால் வாயிலிருந்து சப்தம் வரவில்லை. அவன் கண்களுக்கு எல்லாம் சுற்றுவது போல் தோன்றின.

ஹார்மன் மூர்ச்சை தெளிந்து எழுந்தபோது சூரியோதயம் ஆகியிருந்தது. அவன் கண்களைத் திறந்தான். முழங்காலில் வலி பொறுக்க முடியாமல் இருந்தது. அவன் எழுந்து நிற்க முயன்றான். ஆனால் நிற்க முடியவில்லை. பாதங்களை அப்புறம் இப்புறம் அகற்றவும் முடியவில்லை. அவனுக்கு அச்சமயம் முழு பலத்துடன் வாய் விட்டுக் கதற வேண்டும் போலிருந்தது.

ஹார்மன் தன் துப்பாக்கியைத் தேடி எடுக்க முற்பட்டான். அவன் குழியிலிருந்து மேலே பார்த்தபோது குழிவாய்க்கு அருகில்

துப்பாக்கி கிடப்பது தெரிந்தது. எழுந்திருக்கவும் சக்தியற்றும் அவன் மெதுவாக அதை எட்டிப்பிடிக்க முயற்சித்தான். அவன் கைக்கும் துப்பாக்கிக்கும் சில அங்குல தூரமே இருந்தது. அப்படியும் அவனால் அதைத் தாவி எடுக்க முடியவில்லை.

அச்சமயம் பசி தாங்க முடியாததால் அவன் தன் பையிலிருந்த ரொட்டியை எடுத்துக் கடித்துத் தின்ன முற்பட்டான். அதே சமயத்தில் குழிக்கு மேற்புறமாக யாரோ சந்தடி செய்யாமல் திருட்டுத்தனமாக வருவது அவனுக்குத் தெரிந்தது. சில விநாடிகள் சென்றபின் யாரோ மெதுவாக எட்டிப் பார்ப்பதும் அவன் கண்களுக்குத் தெரிந்தது.

எட்டிப் பார்ப்பவனின் தலையிலிருந்த தொப்பியிலிருந்து அவன் பகைவர் படையைச் சேர்ந்தவன் என்பதை ஹர்மன் அறிந்து கொண்டான்.

உடனே ஹர்மனுக்கு ஆத்திரமும் இரத்த வெறியும் உண்டாயின. அவன் தன் துப்பாக்கியை எடுப்பதற்காகத் துள்ளி எழ முயற்சித்தான். எனினும் அவனால் அதை எடுக்க முடியவில்லை. வலி பொறுக்க முடியாமல் பரிதாபகரமாக அலறிக் கொண்டு கீழே விழுந்ததில் ஹர்மன் மூர்ச்சையுற்றான்.

* * *

ஹர்மன் மூர்ச்சை தெளிந்து எழுந்த போது தன் முகத்தை யாரோ அன்புடனும் ஆதரவுடனும் பார்ப்பது தெரிந்தது. ஏற்கனவே குழிக்கு மேலே இருந்து பார்த்த முகம்தான் அது என்பதில் அவனுக்குச் சிறிதும் சந்தேகம் ஏற்படவில்லை.

பகைவன் ஒரு 'பிளாஸ்கை' எடுத்து அதிலிருந்த தண்ணீரை ஹர்மனுக்குக் கொடுத்தான். தன்னைக் கொல்லுவதற்குப் பதிலாகப் பகைவன் தனக்குப் பரிவுடன் குடிப்பதற்குத் தண்ணீர் கொடுத்தது ஹர்மனுக்கு நம்ப முடியாத ஆச்சரியமாக இருந்தது.

"தம்பி, ஏன் விழிக்கிறாய்? இந்தத் தண்ணீரைச் சாப்பிடு. கால்களில் ஏற்பட்ட காயம் பொறுக்க முடியாமல் வலிக்கிறதா?" என்று கேட்டான் பகைவன்.

ஹர்மன் தன் கால்களைப் பார்த்தான். இரத்தம் பெருகாமல், காயத்தின் மீது ஒரு துணி கட்டப்பட்டிருப்பது அவனுக்குத் தெரிந்தது. மேற்கொண்டு ஆச்சரியத்தினால் ஹர்மனின் கண்கள் அகல விரிந்தன. தன்னிடம் பகைவன் காட்டும் அன்பு அவனை என்னவோ செய்தது.

பகைவன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் அவனை வெறுக்க வேண்டும் என்று ஹர்மன் எண்ணினான். ஆனால், அவ்விதம் வெறுக்க அவனால் முடியவில்லை. பகைவன் காட்டிய பரிவு ஹர்மனின் மனத்தை உருக்கி விட்டது. அவன் கண்களிலிருந்து நீர் பெருகியது.

"ஏன் அழுகிறாய்? வலி பொறுக்க முடியவில்லையா? சரி, நாம் டாக்டரிடம் செல்லுவோம், வா" என்றான் பகைவன்.

"அது எப்படிச் சாத்தியமாகும்?" என்று கேட்டான் ஹர்மன், வியப்புடன்.

"உங்கள் படை ஆஸ்பத்திரி எங்கிருக்கிறது?" என்றான் பகைவன்.

அவன் கேலி செய்கிறான் என்று ஹர்மனுக்குத் தோன்றியது. ஹர்மன் "எங்கள் படைகள் இருக்குமிடத்துக்கு நீ வந்தால் உன் கதி......" என்று இழுத்தான்.

"என்னைப் பிடித்து விடுவார்கள். அல்லது சுட்டுக் கொல்லுவார்கள். அவ்வளவுதானே! எனினும் உயிருக்குப் பயந்து என் கடமையை நான் செய்யாமலிருக்க முடியுமா?"

"கடமை முடிந்தது" என்ற வார்த்தையை முதல் நாள் இரவு தான் உபயோகித்தது ஹர்மனின் ஞாபகத்துக்கு வந்தது. தான் நினைத்த 'கடமை'க்கும் பகைவனின் 'கடமை'க்கும் எவ்வளவு வேற்றுமை? அதை எண்ணியபோது ஹர்மன் தன் மடமைக்காக வெட்கித் தலை குனிந்தான்.

"பகைவன் உயிரைக் கொல்லுவதை நான் கடமையாகக் கருதினேன். இவனோ தன் உயிரை வெறுத்துப் பகைவன் உயிரைக் காப்பாற்றுவதைக் கடமையாகக் கருதுகிறானே?" என்று வியந்தான் ஹர்மன்.



"தம்பி! உங்கள் ஆஸ்பத்திரி எங்கே இருக்கிறது?" என்று மறுபடியும் கேட்டான் பகைவன்.

"நீ என்ன செய்யப்போகிறாய்?"

"உங்கள் ஆஸ்பத்திரி எங்கு இருக்கிறது? அதை முதலில் சொல்லு. நான் செய்யப் போவதைப் பிறகு சொல்லுகிறேன்."

"வடக்கே சிறிது தூரத்தில் உள்ள கிறிஸ்துவ ஆலயத்துக்கு அருகில் இருக்கிறது" என்றான் ஹர்மன், தயக்கத்துடன்.


உடனே, பகைவர் படையைச் சேர்ந்த அந்த மனிதன் நாலாபுறமும் ஒரு தடவை பார்த்து விட்டு,

குழியிலிருந்த ஹார்மனை மெதுவாகத் தூக்கி மேலே வைத்தான். பிறகு தான் குப்புறப் படுத்துக் கொண்டு, "என் முதுகில் மெதுவாக ஏறிச் சாய்ந்து கொள்" என்று கூறினான்.

ஹார்மன் அவ்விதம் செய்யவே, அந்த மனிதன் அவனைத் தூக்கிக் கொண்டு வெகு தூரத்தில் உள்ள கிறிஸ்துவாலயத்துக்கு ஊர்ந்து கொண்டே சென்றான். போர் முனையில் எல்லோருக்கும் தெரியும் வண்ணம் நடந்து செல்லுவது உயிருக்கே ஆபத்தாக முடியும் அல்லவா?

ஹார்மனைத் தூக்கிக் கொண்டு ஊர்ந்து சென்றதில், அந்த மனிதனுக்கும் முழங்கால்களில் சிராய்த்துப் பல இடங்களில் இரத்தம் கசியத் தொடங்கியது.

கடைசியில் இருவரும் கிறிஸ்துவாலயத்துக்குச் சமீபம் சென்றனர். அந்த இடத்துக்கு வந்ததும் ஹார்மனுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. போர் முனையில் பகைவர்களிடையே இருந்து உயிருடன் திரும்பி வருவது சாத்தியமான காரியமா?



கொழும்பில் இந்துக் கல்லூரிக் கட்டட நிதிக்கு ஒரு நாடக விழா நடத்தி உதவி புரிவதற்காக டி. கே. எஸ். சகோதரர்கள் இலங்கைக்கு விஜயம் செய்திருக்கிறார்கள். நாடக விழாவை கவர்னர் ஜனரல் ஸர் ஆலிவர் குணதிலகா ஆரம்பித்து வைத்தார். நாடக விழாவுக்குக் கலைஞர்களை இலங்கைக்கு அழைத்து வந்து சிறப்பாக ஏற்பாடுகள் செய்தவர் ஸினிமா லிமிடெட் அதிபர் ஸ்ரீ குணரத்தினம் அவர்கள். சுப்ரீம் கோர்ட் நீதிபதியும் கல்விச் சபையின் தலைவருமான ஜஸ்டிஸ் ஸ்ரீ வி. நாகலிங்கமும் ஸ்ரீ டி. கே. பகவதியும் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

எனவே, அந்த மனிதனின் முதுகிலிருந்து ஹார்மன் சந்தோஷத்தினால் கீழே உருண்டான். அதே சமயம் அந்த மனிதனின் முகத்தில், தான் ஒரு புனிதமான கடமையைச் செய்த மகிழ்ச்சியும் அமைதியும் தாண்டவமாடின. அவன் முகம் தனக்கு உயிர்ப் பிச்சை கொடுக்க வந்த ஒரு தேவ தூதனின் முகத்தைப் போல் ஹார்மனுக்குத் தோன்றியது.

ஹார்மன் அந்த மனிதனுக்குத் தன் நன்றியைத் தெரிவிப்பதற்காக, புன்முறுவல் செய்ய முயன்றான். ஆனால், முடியவில்லை. காயங்களினால் ஏற்பட்ட சகிக்க முடியாத வலி அவன் முகத்தில் வேதனையாகப் படர்ந்தது. அப்படியே ஹார்மன் மீண்டும் மயங்கி விழுந்தான்.

*　　*　　*

அவன் மூர்ச்சை தெளிந்து எழுந்த போது அருகில் அவனது சகாக்கள் நின்று கொண்டிருந்தனர்.

"அந்த மனிதன்?" என்று ஆர்வத்துடனும் பரபரப்புடனும் ஹார்மன் கேட்டான்.

"நீ அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. நீ எப்படி அவனிடம் சிக்கிக் கொண்டாய்? நல்ல வேளையாக உன்னைக் கொல்லாமல் விட்டானே! நாங்கள் உற்ற சமயத்தில் வந்து உன்னை அவன் கையிலிருந்து காப்பாற்றினோம். அவன் எங்கள் துப்பாக்கிக்கு இரையாகி விட்டான். பயப்படாதே."

இவ்விதம் தன் சகாக்களில் ஒருவன் கூறியதைக் கேட்ட ஹார்மனுக்குத் தலை சுற்றியது.

"அட, பாவிகளா! அந்த மனிதனையா பகைவன் என்று சொல்லுகிறீர்கள்? இல்லை, இல்லை. அவன் ஒரு தெய்வப் பிறவி! அன்பு உருவான ஞானி! என் உயிரைக் காப்பாற்றிய உத்தமன்!..." என்றெல்லாம் வாய் விட்டு அலறினான் ஹார்மன்.

ஹார்மன் வலி பொறுக்க முடியாமல் ஏதேதோ உளறுகிறான் என்று எண்ணினர் அவனது சகாக்கள்.

அதே சமயம் ஹார்மனின் சோகம் தோய்ந்த கண்கள் கிறிஸ்துவாலயத்தின் ஒளி வீசும் உன்னத சிகரத்தை நோக்கின!

அகில உலகச் சிறு கதைப் போட்டியில் கலந்து கொள்வதற்காக "நியூயார்க் ஹெரால்டு டிரிப்யூன்" என்ற பிரபல அமெரிக்கப் பத்திரிகைக்கு அனுப்பப்பட்டுள்ள நாலு கதைகளில் இது நாலாவதாகும். அறுநூறு ரூபாய் பரிசு பெற்ற இந்தக் கதையை எழுதிய ஸ்ரீ நிர்மல் குமார் முன்ஷி எம். ஏ., சந்திர நாகூர் சர்க்கார் கலாசாலையில் பேராசிரியராக இருந்து வருகிறார்.

தமிழ்நாட்டு மும்மணிகள்

நீலாவதி ராமசுப்ரமணியம்

இன் தமிழையும், இலக்கியப் பூஞ்சோலையையும், செஞ்சொற்கவி அமுதத்தையும், நம் சித்தத்தில் என்றும் நிலைக்க வைத்து விட்டு நீங்கினர் ரசிகமணி டி. கே. சி. அவர்கள்.

பேச்செல்லாம், எழுத்தெல்லாம், செயல் எல்லாம், சிந்தையின் நினைவெல்லாம் யோகாசனமாய், அதில் இரண்டறக் கலந்து வாழ்ந்து, இனிய முகத்தோடு எல்லோர்க்கும் அதை உபதேசித்து, "நூறாண்டு வாழ்வேன் நோயின்றி" என்ற ஆசன மன்னர் குமாரசாமி நொடியில் மறைந்தார்.

எழுத்துலகைச் சீர்ப்படுத்தி, எழுத்தாளர் தமக்கெல்லாம் இனியராய், என்றுமுள தென் தமிழால் எல்லோர் உள்ளத்திலும் நின்று நடஞ் செய்து, மறைந்த பெரியார்களுக்கு எல்லாம் மணிமண்டபம் கட்டும் திருப்பணிக்குத் தூணாய்த் துலங்கிய பேனா மன்னர் கல்கியும் பிரிந்து விட்டார்.

மண்ணுலகில் சேவை செய்த மாமணிகள் மூவரும் விண்ணுலகில் ஒன்று சேர்ந்து உழைத்திடத் திட்டமிட்டார்கள் போலும்!

சில வருஷங்களுக்கு முன் ரசிகமணி டி. கே. சி. சென்னைக்கு வந்திருந்தார்கள். அவர்களைப் பார்க்க நானும் என் கணவரும் கல்கி வீட்டுக்குச் சென்றோம். ரசிகமணி அவர்களிடம் அரைமணி நேரம் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது கல்கி அவர்கள் அங்கு வந்தார்கள். வந்ததும் குசலம் விசாரித்து விட்டு, "உங்களுக்கு ஒன்றும் அவசர காரியம் இல்லையே!" என்று கேட்டார்.

"நீங்களும் டி. கே. சி. அவர்களும் இவ்வளவு சாவகாசமாய் இருக்கும் போது, இதைவிட்டு அப்படி என்ன அவசர வேலை எங்களுக்கு!" என்றேன். உடனே, ரசிகமணியைப் பார்த்து, "அப்படியானால் சரி, பேச்சு நிற்கட்டும். பாட்டு வரட்டும்" என்றார்கள் கல்கி அவர்கள்.

ரசிகமணியோ, கல்கியைப் பார்த்து, "உங்கள் எழுத்தை எல்லோரும் போற்றுகிறார்கள். நீங்கள் கவியைப் போற்றுகிறீர்கள். வசனம் இதயத்தில் நிற்பது அரிதுதான். ஆனால், வசனகர்த்தா மட்டும் எப்படியும் இடம் பிடித்து விடுவார். கவி விஷயம் அப்படியல்ல. கவிஞர் மறைந்து விடுவார். கவி இதயத்தை விட்டு நீங்காது. ரீங்காரம் செய்து கொண்டே இருக்கும். நீங்கள் இந்த ரீங்காரத்தை நெஞ்சிலே நிறுத்தி வசன மழையை வெளியில் கொட்டி விடுகிறீர்கள். இந்தக் கவி உள்ளம் என்றும் அழியாது. உங்கள் வசன மழையும் என்றும் ஓயாது" என்றார்.

ரசிகமணியிடம் நாம் "பாட்டு" என்று வாய் திறந்தால் போதும். வெள்ளமெனப் பொழிந்து விடுவார். உடல் நிலையையும், டாக்டர் வருகையையும் மறந்து, கல்கி அவர்கள் 'பாட்டு வரட்டும்' என்றதும் ரசிகமணி அவர்கள் ஒரே குதூகலத்தோடு பாட ஆரம்பித்து விட்டார்கள். அப்புறம் கேட்க வேண்டுமா! கம்பர் வந்தார்; கவிகள் வந்தன; கன்னித் தமிழ் களிநடம் புரிந்தது.

இந்த வாய்ப்பைச் செய்து தந்த கல்கியின் நினைவு வருகிறது. கல்கி நாமம் என்றும் மறையாது. அவர் விட்டுப் போன பணியை மகள் தந்தைக்கு ஆற்றும் உதவியாக, ஸ்ரீமதி ஆனந்தி செய்ய முனைந்து விட்டார்.

பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையாக ஒத்துழைத்து விடலாம், எத்தனையோ வழிகளில். ஆனால், யோகாசன விஷயத்தில் அது அவ்வளவு சாத்தியமா! சகோதரி சீதாலக்ஷ்மி அவர்கள் தம் அருமைக் கணவரோடு, ஒத்துழைக்க மட்டுமா செய்தார்! கணவருக்கு நிகராக அக் கலையில் முழுமூச்சோடு இறங்கிப் பரிபூர்ணத் தன்மையல்லவா பெற்று விட்டார்! அதோடு, இன்று அவர் விட்டுப் போன பணியைத் தொடர்ந்து செய்து வரத் தீர்மானித்தது, போற்றிப் புகழத்தக்க காரியம்.

கம்பன் கவியே போல், கன்னித் தமிழே போல் கல்கியும் அவர் நாமமும் எந்நாளும் மக்கள் இதயத்தில் மங்காமல் ஒலிக்கட்டும்.

தவப் புதல்வர் கல்கி

குகப்ரியை

ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழன்னை தவம் கிடந்தாள். எதற்கு! ஒரு சிறந்த மேதையை, தலைசிறந்த தேச பக்தரை, ஒரு நல்ல இலக்கிய ரஸிகரை, கவிஞரை, அரசியல் நிபுணரை, எழுத்தாளரைப் பெற வேண்டும் என்று. காலத்துக்கேற்ற முறையிலே பணி செய்யக் கூடிய ஒரு நன் மகனை, பண்டிதர்களிடையே சிறைப்பட்டுக் கிடக்கும் தன்னைச் சிறை மீட்டு விடுதலை செய்யக் கூடிய ஒரு மகனைப் பெறவேண்டுமென்று தவம் செய்தாள். செய்து கொண்டே இருந்தாள்.

தமிழன்னையின் தவம் பலித்தது. ஐம்பத்தைந்து வருடங்களுக்கு முன் தோன்றினர் தவப்புதல்வர் கல்கி. வண்ண வண்ண மலர்களால் அவளை அழகு செய்தார். அணிகளால் அலங்கரித்தார். கதை, கட்டுரை, நாவல், நாடகம், சரித்திரம், கவிதை, சிற்பம், சித்திரம், சங்கீதம் ஆகிய எல்லா மலர்களாலும் போற்றி வழிபட்டார்.

கல்கி அவர்கள் தமது எழுத்து வன்மையினால் துன்பத்திலேயே ஆழ்ந்து கிடப்பவர்களைக் கூடத் தமது துன்பங்களை யெல்லாம் மறந்து இன்புற்று வாழ வழி வகுத்துக் கொடுத்தார். தமிழ் பேசும் மக்களை யெல்லாம் மிகச் சிறந்த ரஸிகர்களாகவும், விமரிசகர்களாகவும் ஆக்கி, ஊக்கமும் உற்சாகமும் தந்த பெருமை கல்கியையே சேரும். பண்டித ரஞ்சகம், பாமர ரஞ்சகம் என்ற சொற்களையே அகராதியிலிருந்து விலக்கி, நாம் பேசுகின்ற தமிழிலேயே வேண்டுவதை யெல்லாம் சொல்லி விளங்க வைத்தார். தமிழ் மொழிக்குப் புதிய களையும், தமிழ் மக்களுக்குப் புதிய உணர்வும், தமிழ் நாட்டுக்கே புதியதொரு ஒளியையும், புகழையும் தேடித் தந்தார். சிதைந்த சிற்பங்களையும், வறண்ட வரலாறுகளையும் வைத்துக் கொண்டு தமிழகத்தின் மகோன்னதமான பொற்காலத்தை நமக்குக் காட்டிய ரசவாதி அவர்.

* * *

இவ்வுலகில் தமிழ் உள்ளவரை, தமிழ் நாட்டில் மட்டுமல்ல, தமிழ் மொழி பேசுமிடங்களிலெல்லாம் அவர் திருநாமம் ஒளிரும். அவரது நினைவின் சின்னமான "கல்கி" பத்திரிகை நீடூழி வாழ்ந்து அவரது புகழ் பாடும். தமிழன் சரித்திரத்தில் அவருடைய பெயர் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு மிளிரும்.

பேனா சக்கரவர்த்தி

வசுமதி ராமஸ்வாமி

இருபத்துமூன்று வருடங்களுக்கு முன் என் சகோதரரால் சிறந்த ஆசிரியர் என்று அறிமுகப் படுத்தப் பட்டார் கல்கி. நாங்கள் அவர் எழுத்து வன்மையை எழுத்துக்கு எழுத்து அனுபவித்திருக்கிறோம். அவர் கதைகளில் காணப்படும் காட்சிகளும், இயற்கையான குணத்தோடு சிருஷ்டிக்கப்பட்ட கதாபாத்திரங்கள் சொல்லும் ரசமான முறை முதலிய அமைப்புகளும் அபாரமானவை. இயற்கை இல்லாத விஷயங்களை எழுதும்போது. வாசகர்களுக்குச் சந்தேகம் உண்டாக்கி, கடைசியில் அதை இயற்கையாக மாற்றும் அவரது அற்புத எழுத்துத் திறன் உலகைப் பிரமிக்கச் செய்யும். கதாபாத்திரங்கள் எப்பொழுது, எப்படி அறிமுகப்படுத்தப் பட்டார்கள் என்றே வாசகர்களுக்குத் தெரியாது. கதையின் சுவையில் ஊன்றிக் கதையோடு சென்று விடுவார்கள். 'வீணை பவானி' போன்ற சிறு கதைகள் அமர சிருஷ்டிகள். திரு. வி. க. அவர்கள் முதன் முதலாக இவரைச் சந்தித்தபொழுது, "நீ முன்னுக்கு வர வேண்டியவன்" என்று சொன்னதைக் கல்கி அவர்கள் "அது அவருக்கு எப்படித் தெரியுமென்று ஆச்சரியப் பட்டே"னென்று உயர்தர நகைச்சுவையுடன் எழுதி யிருக்கிறார்.

'வீணை பவானி'யில் தவுல்கந்தப்பனின் உணர்ச்சி, பேச்சுமுறை இவைகளைத் தம் கற்பனைத் திறனால் வரைந்து நம் கண் முன் குங்குமப் பொட்டுடன் ஒரு தவுல் வித்வானையே கொண்டு வந்து நிறுத்துகிறார். பிரஞ்சு சரித்திரத்துக்கு டூமாஸ் செய்ததை விடப் பல்லவ சரித்திரத்துக்கும், சோழ சரித்திரத்துக்கும் கலைக் கோபுரம் கட்டியிருக்கிறார் ஆசிரியர் கல்கி. சரித்திர நாவல்களில் ராஜரீகக் காதலர்கள் பேச்சு, பெரிய மூதாட்டியின் பவித்திரமான சிந்தனை, அரச குமாரியின் தீரம். உயர்ந்த குணம், வீரர்களின் இதயத் துடிப்பு இவைகளையெல்லாம் எழுதும் அழகு அளவற்றது.

அரசியல் கட்டுரை, விழாக் கட்டுரை, தொழிற்சாலைகள் முன்னேற்றம், கலைகளைப் பற்றிய விமர்சனம் இவைகளெல்லாம் தமக்கென உள்ள தனி நடையில் வெகு அற்புதமாக எழுதி யிருக்கிறார். சாதாரணத் தமிழில் இவ்வளவு எளிமையாகவும் அழகாகவும் எழுதக் கூடுமென்று எடுத்துத் தமிழ் நாட்டுக்கு அறிவித்தார்.

கல்கி அவர்களின் பேனா முனை பெரிய பெரிய வெற்றிகளை அவருக்கு அளித்தது. சங்கப் பலகை போல் மதிப்புப் பெற்றது. எவ்வளவோ கலைஞர்களுக்குப் பெருமை அளித்தது. சோர்ந்தவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. ஆங்கிலத்தில்தான் வாசிக்கக் கூடிய புத்தகங்கள் இருக்கின்றன என்று கருதிய இளைஞர்களின் எண்ணத்தை அறவே ஒழித்தது. எதையும் ரஸமாக எழுதும் பெரும் கலை அவரிடம் குடிகொண்டிருந்தது.

கால சமுத்திரம் அலை அடித்துக் கொண்டே இருக்கிறது. சில சமயம் பெரிய அலையாக எழும்பிக் கரையில் உள்ள பூ, பிஞ்சு, காய், பழம் எல்லாவற்றையும் அடித்துக் கொண்டு போகிறது. உலகம் ஏற்பட்டது முதல் நடக்கும் நியதி. இதை மீற யாரால் முடியும்!

ஒப்பற்ற லட்சியவாதி

எஸ். விஜயலக்ஷ்மி எம். ஏ., எம். லிட்.

"ஓராயிரம் வருட காலம் ஓய்ந்து கிடந்த பின்னர் வாராது போல் வந்த மாமணி" ஆசிரியர் கல்கி அவர்கள். தமிழ் உலகத்தின் உயர்ந்த பண்பின் சிகரமாக விளங்கிய மேதை அவர்.

மனிதத் தன்மைக்கும், மனித குல மாண்புக்கும் அளவுகோல் கல்கி. அவரை, நான் அபூர்வ சிருஷ்டியாகவே கருதினேன். நான் அடிக்கடி சிந்திப்பதுண்டு. எவ்வளவு பேருடைய முன்னேற்றத்துக்குப் பாடுபடுகிறார் கல்கி. எத்தனை பெரியார்களுக்கு ஞாபகச் சின்னம் எழுப்பும் திருப்பணியைச் சிரமேற்கொண்டு உழைத்திருக்கிறார். இரவென்றும், பகலென்றும் பாராமல் பிறர் நலனுக்காகவும், பொது நன்மைக்காகவும் உழைக்கும் உத்தமர் கல்கி. அவரைப் போன்ற கடமை வீரர் மற்றொருவரை இந்தத் தலைமுறையில் சுலபமாகக் காணவே முடியாது! சின்னங்களுக்கெல்லாம் சின்னமாக விளங்கும் உத்தமர், பிறர் உதவியின்றி என்றும் அழியாத ஞாபகச் சின்னத்தைத் தாமே தமக்கு நிர்மாணித்துக் கொண்டுவிட்டார்.


கல்கி அவர்களை நான் எப்பொழுதும் ஒப்பற்ற லட்சியவாதியாகவே கருதினேன். அவருடன் பேசும்பொழுதெல்லாம் என்னால் இதை மிக நன்றாய் அறிய முடிந்தது. அவர் செயலிலும் இதைக் கண்டோம். சொல்லுக்கும், செயலுக்கும் இடையே முரண்பாடு என்பது கல்கி அவர்களைப் பொறுத்தமட்டில் கிடையாது. இலக்கியம், கலை, அரசியல் என்று அவர் தீவிரமாகப் பங்கு பற்றிய எந்தத் துறையிலும், அவருடைய சாதனைகள் அவரை லட்சியவாதி என்று நிரூபிக்க நிரந்தரச் சான்றுகளாக விளங்குகின்றன.

கல்கி அவர்கள் சிந்தனையின் சிகரமாகவும், உணர்ச்சியின் உருவமாகவும் விளங்கினார். கல்கி அவர்களை நான் பார்த்துப் பேசிய ஒவ்வொரு தடவையும் எனக்குப் புதியதோர் உற்சாகம் ஏற்படும். அவருடைய கருத்துகள் நிறைந்த ஹாஸ்யப் பேச்சுகள் என் போன்றவர்களைப் பரவசப் படுத்தும். அவருடைய சொற்களும், விமர்சனங்களும் என்னுடைய மனத்தில் பசுமரத்தாணி போல் பதிந்து விட்டன. சமீப காலத்தில் சோஷலிஸ இயக்கத்துக்கு அவர் அளித்த ஆதரவை என்றுமே மறக்க முடியாது. நூற்றுக் கணக்கான சோஷலிஸ இயக்கத் தொண்டர்களுக்குக் கல்கியின் பெயரைச் சொன்ன மாத்திரத்தில் புதிய ஊக்கமும், உற்சாகமும் ஏற்பட்டன.

கல்கி அவர்களின் அரசியல் ஆர்வமும், தேச பக்தியும் அவருடைய மாபெரும் இலக்கிய சிருஷ்டிகளுக்குக் காரணமாக விளங்கின. அரசியலையும், பொருளாதாரத்தையும், சமூக நிலைமையையும் எழுத்துடன் இணைத்து, கலையில் புகுத்தி, தமிழ் உலகத்தைத் தட்டி எழுப்பிப் புது உணர்வு பெறச் செய்தார் கல்கி.

பல நூற்றாண்டுகளுக்கு ஒரு முறைதான் இவ்வளவு அபூர்வமான ஒரு மாபெரும் எழுத்தாளர் அவதரிப்பார். அந்த பாக்கியம் தமிழகத்துக்குக் கிடைத்தது. இது தமிழ் மக்களும், தமிழகமும் செய்த பாக்கியம். இதை எண்ணியே தமிழகம் என்றும் பெருமைப்படலாம்.

இதய பாசம்



"தபால்!" என்ற சத்தத்துடன் ஜன்னல் கம்பியின் வழியாக ஒரு உறை வந்து விழுந்தது. அவலுடன் அதை எடுத்துப் பிரித்தாள் சுபாஷிணி. அது ஒரு கலியாணப் பத்திரிகை. மூன்று விருந்தவைகளை யெல்லாம் விட்டு விட்டு மண மக்களின் பெயர்களில்தான் அவளுடைய பார்வை பதிந்தது. 'சிரஞ்சீவி தியாகராஜனுக்கு சௌபாக்கியவதி வித்யாவை பாணிக்கிரகணம் செய்து கொள்வதாய்...' என்பதற்கு மேல் சுபாஷிணியால் பத்திரிகையைப் படிக்க முடியவில்லை. அது தானாக நழுவிக் கீழே விழுந்தது.

மனப் பாறையில் எண்ண அலைகள் வந்து வந்து மோதலாயின. வியப்பும் திகைப்பும் அவள் உள்ளத்தை முற்றுகை யிட்டன. 'அத்தானுக்குக் கலியாணம். அத்தானுக்குக் கலியாணம்' என்று அவளையும் அறியாமல் அவள் வாய் முணு முணுத்தது. 'அத்தான் இப்படியும் செய்யக் கூடியவரா!' என்று அதிசயித்தாள். அவருடைய சுயநலம் கண்டு கொதிக்கவும் செய்தாள்.

அப்போது சுபாஷிணி மணமாகாத கன்னிப் பெண். வயது பதினேழு. ஐசுவரிய தேவதையின் பேரருளுடன் அழகுத் தெய்வத்தின் கடைக் கண் பார்வையையும் பெற்றிருந்தபடியால் சுபாஷிணியைப் பற்றி இன்பக் கனவு காணும் வாலிபர்களின் எண்ணிக்கையும் அதிகமாகவே யிருந்தது. அவர்களில் முதல் ஸ்தானம் வகித்தவர்கள் இருவர். இருவரும் சுபாஷிணிக்கு நெருங்கிய உறவினர்களே. தியாகராஜன் சொந்த அத்தையின் பிள்ளை. மூர்த்தி சொந்தத் தாய் மாமனின் மகன். இவர்களில் சுபாஷிணி விரும்பியது மூர்த்தியை. அவள் தகப்பனார் கணபதி சர்மா, தன் மாப்பிள்ளையாகத் தேர்ந்தெடுத்ததோ தியாகராஜனை. இது போதாதா, குடும்பம் குழம்ப? செங்கம்மாளோ ஒரு வாயில்லாப் பூச்சி. பெண்ணுக்காகப் பரிந்து பேசவும் தைரியம் இடையாது. கணவரின் விருப்படியே நடந்து விடவும் அவளுக்கு மனம் இடம்கொடுக்கவில்லை.

கணபதி சர்மா தமது சகோதரியின் மகனை தியாகராஜனை விரும்பியதற்குக் காரணம் அவன் பட்டதாரி. மூர்த்தியை விரும்பாததற்குக் காரணம் அவனுக்கும் படிப்புக்கும் வெகுதூரம். அதோடு நகரத்துவாடை அவன் மீது அடிக்கவில்லை.

கலைமகளின் கடாட்சம் அவனுக்கு இல்லையே தவிர, திருமகளின் அருள் அவனுக்குப் பூரணமா யிருந்தது. நான்கு வேலி நிலத்துக்கு அவனே சொந்தக்காரன்.

முழங்காலுக்குமேல் வேஷ்டியை மடித்துக் கட்டிக்கொண்டு முண்டாசும் தலையுமாகச் சதா சர்வ காலம் வயல் என்றும் வரப்பு என்றும் சுற்றிச் சுற்றி வரும் மூர்த்தியை விட, மடிப்புக் கலையாதபடி மேல் நாட்டு உடையுடன் நாகரிகமே உருவமாக இருக்கும் தியாகராஜனைத் தான் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது.

சுபாஷிணி படித்தவள் தான். நாகரிகத்துக்குப் பெயர் பெற்ற சென்னை மாநகரில் வாசம் செய்பவள்தான். ஆனால் அவள் மனம் என்னவோ கிராமவாசியான மூர்த்தியிடத்தில்தான் லயித்திருந்தது. இரண்டு விடுமுறைகளுக்கு அவள் தன் மாமாவின் ஊரான பூவனூருக்குச் சென்றிருந்தாள். அங்குள்ளவை ஒவ்வொன்றும் அவள் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக அவள் இதயத்தைக் கவர்ந்தது, மூர்த்தியின் மோகன உருவம். உழைத்து உரமேறியிருந்த வாளிப்பான உடல்; செக்கச் சிவந்த மேனி; களை பொருந்திய முகம்; தன்னம்பிக்கை மிகுந்த பார்வை; பார்த்துப் பார்த்து மனம் பூரித்துப் போவாள்.

அதோடு அந்தக் கிராமத்தின் அமைதியான சூழ்நிலையும் அவளை ஆட்கொண்டது.

ஆனால் கணபதி சர்மா ஒரே பிடிவாதமாக இருந்தார். சுபாஷிணியைத் தியாகராஜனுக்குக் கொடுப்பது என்று முடிவு செய்தவர் அதற்கான காரியங்களிலும் தீவிரமாக ஈடுபட்டு விட்டார். தம்மால் தனியாக எதையும் செய்து கொள்ள முடிய வில்லை என்றும் ஒரு மாதம் லீவு போட்டு விட்டு வரும்படியும் தியாகராஜனுக்கு எழுதினார். அவனும் மாமாவின் வாக்கை வேத வாக்காகக் கொண்டு உடனே கிளம்பி வந்து விட்டான். வீடு அமர்க்களப் பட்டது. கணபதி சர்மாவின் கால்கள் தரையில் பாவவே யில்லை. கலியாணத்தைத் தடபுடலாக நடத்த வேண்டு மென்பது அவரது ஆசை. ஒரே பெண். அத்தகைய ஆசை யிருப்பது சகஜம்தானே!

ஆனால் சுபாஷிணி......! அழுது அழுது அவள் முகமே வீங்கி விட்டது. தன் அறையை விட்டு

வெளியிலேயே வருவது கிடையாது. யாருடனும் முகம் கொடுத்துப் பேசுவதும் கிடையாது. அவளைப் பற்றிக் கணபதி சர்மாவும் கொஞ்சங் கூடக் கவலைப்படவில்லை. கவலைப்பட்டதெல்லாம் அவளுடைய தாயார் செங்கம்மாள்தான்.

கலியாணக் காரியங்களில் உதவி செய்யும் பொருட்டு மூர்த்தியும் தன் தாயாருடன் சென்னைக்கு வந்திருந்தான். அவன் வழியிலே போய் சுபாஷிணியைப் பேட்டி கண்டான். அவள் துயரத்தைக் கண்டு திடுக்கிட்டான். காரணம் தெரிந்ததும் வருந்தினன்.

"இப்படி ஒரு சம்பவம் நேரிடும் என்று தெரிந்திருந்தால், அத்திம்பேர் இப்படிப் படிப்பையே பிரதானமாகக் கருதுவார் என்று அறிந்திருந்தால், நானும் கட்டாயம் கல்வியில் தீவிர கவனம் செலுத்தி யிருப்பேன். சுபாஷிணி! நீ மனப் பூர்வமாக நேசித்துத்தான் மணந்து கொள்ளப் போவதாக நினைத்திருந்தேன். காரியம் மிஞ்சிப் போய்விட்டது. இனி என்ன செய்ய முடியும்!" என்றான் மூர்த்தி சுபாஷிணியிடம் நாத்தழுதழுக்க.

அவளும் "என் தலையெழுத்துப்படித்தானே எல்லாம் நடக்கும்" என்றாள் விரக்தியாக. அத்துடன் அவர்களுடைய சம்பாஷணை முற்றுப் பெற்றது.

சுபாஷிணியின் கலியாணத்துக்கு இன்னும் ஒரு வாரம்தான் இருந்தது.

அன்று மாலை எங்கேயோ சென்று விட்டுத் திரும்பி வந்த தியாகராஜனைப் பார்த்த கணபதி சர்மா திடுக்கிட்டுப் போனார். "ஏண்டா, தியாகு! உடம்புக்கு என்ன! ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்!" என்று கேட்டார், கவலை நிறைந்த குரலில்.

"ஊரிலிருந்து வந்ததிலிருந்து உடம்பு சரியாகவே இல்லை, மாமா!" என்று சோர்வாகப் பதிலளித்தான் தியாகராஜன்.

"டாக்டரிடம் காட்டக் கூடாதோ!"

"இப்பொழுது டாக்டரிடமிருந்து தான் வருகிறேன், மாமா!"

"என்ன சொன்னார், டாக்டர்!"

"அவர் சொன்னதை நான் எப்படி மாமா தங்களிடம் சொல்லுவேன்!" ஏனே தியாகராஜனின் குரல் கரகரத்தது.

"என்னடா தியாகு, சொல்லுகிறாய் நீ! எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!" என்று பதறினார் சர்மா.

"மாமா! சுபாஷிணியை மூர்த்திக்கே கொடுத்து விடுங்கள்! அவள் வெகு காலம் மஞ்சள் குங்குமத்துடன் வாழட்டும்...எனக்கு க்ஷயம் ஆரம்பம் என்று சொல்லுகிறார், டாக்டர்!" என்றான்.

"என்ன! நிஜமாகவா!" ஆச்சரியத்துடன் கேட்டார் சர்மா. அவரால் இதை நம்பவே முடியவில்லை.

"நிஜந்தான், மாமா! எனக்கு சுபாஷிணியை மணக்கக் கொடுத்து வைக்கவில்லை...!" என்று சொல்லிக் கொண்டே தன் அறைக்குள் சென்று படுத்து விட்டான் தியாகராஜன்.

கணபதி சர்மா அப்படியே இடிந்து போய் விட்டார். ஆனல் சுபாஷிணிக்கோ தான் மூர்த்தியை மணந்து கொண்டது பற்றி அளவிட முடியாத ஆனந்தம். ஆயினும், வாழ்வில் இன்னும் எவ்வளவோ இன்பங்களை அனுபவிக்க வேண்டிய கட்டிளங் காளையான அத்தான் தியாகராஜனுக்கு அக்கொடிய நோய் வந்துவிட்டதே என்று மிகவும் வருந்தினள்.

சுபாஷிணியும் மூர்த்தியுடன் பூவனூருக்கு வந்து சேர்ந்தாள். அவளுடைய ஆசைக் கனவுகளெல்லாம் நனவாகிக் கொண்டே யிருந்தன. கணவனின் களங்கமற்ற காதலையும், மாமியின் அளவற்ற அன்பையும் பெற்று மகிழ்ச்சி யென்னும் இன்பக் கடலில் மூழ்கித் திளைத்து வந்தாள். எனினும் அவள் உள்ளத்தின் அடித்தளத்தில் தனது ஒரே அருமை அத்தானைப் பற்றியும் சதா கவலை யிருக்கத்தான் செய்தது.

இந்த நிலையில் ஒன்றரை வருஷங்கள் விரைந்து சென்று மறைந்தன. இன்று, அத்தானுக்குக் கலியாணம் என்று பத்திரிகை வந்திருந்தது. சந்தோஷப்பட வேண்டிய விஷயந்தான். ஆனல் சுபாஷிணி வருத்தப்படுவதற்கும் தகுந்த காரணம் இருக்கத்தானே செய்கிறது! க்ஷயம் என்னும் கொடிய வியாதிக்கு அவர் இலக்காகி ஒன்றரை வருஷங்களே ஆகின்றன! அதற்குள் அந்த வியாதி பூரணமாக நீங்கிப் போயிருக்குமா! போயிருந்தால் நல்லதுதான். அப்படி யில்லாமல் இருந்திருந்தால் ஓர் இளம் பெண்ணின் வாழ்வு அல்லவா வீணில் பாழாகிவிடும்! இப்படிப்பட்ட காரியத்தைச் செய்ய அத்தானின் மனம் எப்படித் துணிந்தது! அவ்வளவு சுயநலக்காரரா அவர்! அன்று தமக்கு வந்திருக்கும் வியாதி அபாயகரமானது, தாம் சுபாஷிணியை மணந்து கொண்டால் அவள் துன்பமடைய நேரிடும் என்று கூறி என்னை மணக்க மறுத்தாரே! எப்படி இன்று அவர் வேறு ஒரு பெண்ணை மணந்து கொள்ளச் சம்மதித்தார்! உடம்பு தேறி விட்டிருக்குமோ!

"என்ன சுபா! உட்கார்ந்தபடியே தூங்கி விட்டாயா, என்ன!" என்று கேட்டுக்கொண்டே மனைவியின் அருகில் வந்தான் மூர்த்தி.

சிவகாசியில் யோகாசன ஆஸ்ரமம்

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது ஆன்றோர் வாக்கு. நோய் வந்த பின் கவனிப்பதைவிட வருமுன் தடுப்பதுதான் விவேகம் என்று அனுபவத்தில் முதிர்ந்த அறிஞர்கள் கூறுகின்றனர். அவர்கள் வாக்குக்குத் தமிழ் மக்கள் செவி சாய்த்துச் செயலிலும் செய்து காட்டத் தொடங்கி விட்டனர். சிவகாசியில் ஜனவரி முதல் தேதி யன்று "யோகாசன ஆரோக்கிய சாலை" ஒன்றைத் திறந்திருக்கின்றனர். இந்த யோகாசன சாலையின் ஆசிரியர் யோகாசன நிபுணர் திரு தவமணி அவர்கள். ஸ்ரீ தவமணி அவர்கள் யோகாசன முறைகளை எல்லாருக்கும் இலவசமாகக் கற்றுக் கொடுக்க இசைந்துள்ளார்கள். இந்த நல்ல திருப்பணிக்கு 'சிம்கோ' ஸ்ரீ ஆறுமுகசாமி நாடார் அவர்கள் எல்லாவிதமான உதவிகளையும் செய்ய இசைந்துள்ளார்கள். சிவகாசியிலும் அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள மக்கள் இந்த யோகாசன ஆரோக்கியப் பயிற்சி சாலையை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

" இல்லையில்லை. இதோ இந்தப் பத்திரிகையைப் படித்துப் பாருங்கள் ......" என்று சொல்லியபடி கீழே விழுந்து கிடந்த பத்திரிகையை எடுத்துக் கணவனிடம் கொடுத்தாள் சுபாஷிணி.

அதை ஆவலுடன் படித்துப் பார்த்த மூர்த்தியின் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. வியப்புடன் மனைவியை நோக்கினான். " என்ன சுபா! உன் அத்தானுக்கு உடம்பு குணமாகி விட்டது போலிருக்கிறதே!" என்றான்.

" எனக்கென்னவோ சந்தேகமாகத்தான் இருக்கிறது. அதற்குள்ளாகவா வியாதி குணமாகியிருக்கும்!" என்றாள் சுபாஷிணி.

" தியாகு உடம்பில் வியாதியை வைத்து மறைத்துக் கொண்டு ஒரு பெண்ணைக் கைப்பிடிக்கக் கூடியவனில்லை..." என்றான் மூர்த்தி.

"எனக்கும் ஒரு சமயம் அப்படித்தான் தோன்றுகிறது. இருந்தாலும் சுயநலமில்லாதவர்கள் யார்! அவரைக் கவனித்து சிசுருஷை செய்ய யாருமில்லையே என்றும் செய்து கொள்ளலாம் அல்லவா! அல்லது அவருடைய பணங்காசுக்கு ஆசைப்பட்டுக் கொண்டு ஒருவேளை எந்த ஏழைகளாவது பெண் கொடுக்கத் துணிந்து விட்டார்களோ என்னவோ!" என்றாள் சுபாஷிணி.

"அப்படியும் இருக்கலாம்; யார் கண்டார்கள்!" என்றான் மூர்த்தி பட்டும் படாமலும்.

" ஒன்றை மட்டும் நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். நாம் எப்படியும் இந்தக் கலியாணத்துக்குப் போகப் போகிறோம். அங்கே எல்லாவற்றையும் தீர விசாரிப்போம். அப்படி அத்தானின் செய்கை நேர்மை தவறியது என்பது ஊர்ஜிதமானால் எப்பாடு பட்டேனும் இந்தக் கலியாணத்தை நடக்க வொட்டாமல் தடுத்துவிட வேண்டும். ஒரு அபலைப் பெண்ணின் தலையெழுத்து இதில் சிக்கிக் கொண்டிருக்கிறதல்லவா!" என்று கூறிய மனைவியை வியப்பு மேலிடப் பார்த்து விழித்தான் மூர்த்தி.

" ஏன் நான் சொல்வது தவறாகப் படுகிறதா, உங்களுக்கு!" என்று கேட்டாள் சுபாஷிணி.

" அப்படியொன்றுமில்லை. உன் அத்தானை ஏனோ என் மனம் அவ்வளவு கீழ்த்தரமாக நினைக்கத் தயங்குகிறது " என்றான் மூர்த்தி.

" அப்படியே இருக்கட்டுமே. அத்தான் அந்தக் கொடிய வியாதியினின்றும் பூரணமாக விடுபட்டு கிரகஸ்தனாக வாழ வேண்டும். என் அத்தையின் வம்சம் வாழையடி வாழையாகச் செழித்தோங்க வேண்டுமென்பதுதானே எனது ஆசையும் " என்றாள் சுபாஷிணி முடிவாக.

எவ்வளவோ முன்னேற்பாடுகள் செய்தும் சுபாஷிணியும் மூர்த்தியும் தியாகராஜனின் விவாகத்துக்கு முதல் நாள் மத்தியானம்தான் போய்ச் சேர முடிந்தது.

" வரவேண்டும், வரவேண்டும். மூவராக வருவீர்கள் என்று எதிர்பார்த்தேன்; இருவர்தானா!" என்று பரிகாசமாகக் கேட்ட வண்ணமே வரவேற்றான் தியாகராஜன். அவனைக் காலோடு தலை வரை உற்றுப் பார்த்தாள் சுபாஷிணி. முன்பிருந்ததைவிட இப்பொழுது இன்னும் செழுமையாகவே தோற்றமளித்தான் தியாகராஜன். அவனைப் பார்ப்பவர்கள் யாரும் அவன் ஒருசமயம் க்ஷயரோகத்தினால் அவதிப்பட்டவன் என்று சொல்லவே மாட்டார்கள். அப்படியிருக்கும்கூட சுபாஷிணிக்குத் தன் அத்தான் தியாகராஜன் மீது நம்பிக்கை உண்டாகவில்லை.

தனது அருமை அத்தானின் கையைப் பிடிக்கப் போகும் வித்யாவையும் தேடிப் போய்க் கண்டாள். மணமகள் நல்ல அழகியாகவும் இருந்தாள்; அடக்கமாகவும் இருந்தாள்; அறிவு மிகுந்தவளாகவும் காணப்பட்டாள். ஆனால் பாவம், வித்யா ஒரு ஏழைப் பெண். பரம ஏழையின் மகள். நாளைக்குத் தியாகராஜன் கட்டப்போகும் மாங்கல்யத்தைத் தவிர, அவள் உடம்பில் ஒரு குண்டுமணிப் பொன் சொந்தமாக இருக்க வில்லை. அவர்களுடைய வீட்டில் வறுமையின் சின்னம் ஒவ்வொன்றிலும் தனது முத்திரையைப் பதித்து விட்டிருந்தது. இவைகளை யெல்லாம் உற்று உற்றுக் கவனித்துக் கொண்டு வந்த சுபாஷிணிக்குத் தனது அத்தானின் மீது இருந்த சந்தேகமும் கொஞ்சம் கொஞ்சமாக வலுப்பெற்றே வந்தது.

அன்று மாலை தனியாகத் தியாகராஜனைச் சந்தித்த சுபாஷிணி, "அத்தான்! உங்களை ஒன்று கேட்கலாமா!" என்றாள்.

"ஏது பீடிகை பலமாக இருக்கிறதே!" என்று கேட்டான் தியாகராஜன், வெகு சகஜமாக.

"உங்களுக்கு உடம்பு நன்றாகக் குணமாகி விட்டதா, அத்தான்!" இதைக் கேட்கும்போது அவள் குரல் கொஞ்சம் கரகரத்தது.

"எனக்கு உடம்பா! எனக்கு என்ன உடம்பு, சுபா!" என்றான் தியாகராஜன்.

"அதென்ன அத்தான் அப்படிக் கேட்கிறீர்கள்! என் கலியாணத்தின் போது உங்களுக்கு......!" வார்த்தையை முடிக்கவில்லை சுபாஷிணி.

"அதுவா! புரிந்தது, புரிந்தது!" என்று கூறி விட்டுச் சிரித்தான் தியாகராஜன்.

"என்ன அத்தான்!" என்றாள் சுபாஷிணி, சற்றுக் கடுமையான குரலில்.

"எனக்கு அந்த உடம்பு உன் கலியாணத்துக்காகத்தான் வந்தது; விருந்தாளியைப் போல். உன் கலியாணம் முடிந்தவுடனே அது தானாகவே போய் விட்டது" என்றான் தியாகராஜன்.

"அப்படி யென்றால், உங்களுக்கு க்ஷயம் ஆரம்பம் என்று டாக்டர் கூறியதாகச் சொன்னீர்களே! இதெல்லாம் பொய்தானா!" என்று வியப்புடன் கேட்டாள் சுபாஷிணி.

"ஆமாம், சுபா! அது முழுக்க முழுக்கப் பொய்தான். அந்தச் சமயத்தில் எனக்கு வேறு ஒரு வழியும் புலப்படாமையால்தான் நான் அந்தப் பொய்யைச் சொன்னேன்......"

"அத்தான்!"

"சுபா! உன்னை எனக்குக் கொடுக்கப் போவதாக மாமா எனக்குத் தெரிவித்தபோது நான் அடைந்த சந்தோஷத்துக்கு ஓர் அளவே கிடையாது. அந்த மகிழ்ச்சியில்தான் லீவு போட்டு விட்டு ஓடோடியும் வந்தேன். அந்த மகிழ்ச்சியில் உன் விருப்பத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்று கூட எனக்குத் தோன்றவில்லை. அவ்வளவு கண்மூடித்தனமாக உன்மேல் காதல் கொண்டிருந்து விட்டேன். அன்று மூர்த்தி கையிலிருந்து வந்து சிறிது நேரத்துக்குப் பிறகு, உன்னுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தான். அதிர்ஷ்டவசமாக அந்தச் சம்பாஷணையின் பிற்பகுதியை, அதாவது மூர்த்தி கூறிய இரண்டொரு வார்த்தைகளை நான் கேட்க நேர்ந்தது. உடனே உன் மனத்தை நான் அறிந்து கொண்டு விட்டேன். அந்தச் சமயத்தில் என் கடமை எது என்பதையும் தெரிந்து கொண்டேன். நீ மூர்த்தியை

அடிகளாரின் மலாயாப் பிரயாணம்



பாரத நாடு சுதந்திரம் பெற்றது. நமது நாட்டின் குரலுக்கு உலகம் செவி சாய்க்கிறது. இந்த மதிப்புடன் பெற்ற சுதந்திரத்தைப் பேணி வளர்க்க வேண்டுமானால் எல்லாத் தொழில்களுடன் நமது சமயமும் பண்பாடும் கலையும் செழித்து ஓங்க வேண்டும். இதை உணர்ந்து தொண்டாற்ற முன் வந்துள்ளார் ஒரு மகா சந்நிதானம். மடத்தின் ஒடுக்கத்திலே அமைதியாக வாழ்வதைத் துறந்து மாண்பு மிகு மக்களின் சோகத்தை நீக்கி, மக்களுக்கு சமய நெறியை உணர்த்த முனைந்துள்ளார், ஸ்ரீலஸ்ரீ குன்றக்குடி அடிகளார். தமிழ்த் தாயகத்துக்கு மட்டும் அல்லாமல், தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் சென்று பணியாற்றி வருகிறார் அடிகளார். சென்ற ஆண்டு இலங்கைக்குச் சென்று எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் முறையில் மக்களுக்குச் சமயம் எவ்வளவு அவசியம் என்பதை விளக்கினார். இந்த ஆண்டு மலாய் நாடு அடிகளை "வருக! வருக!" என்று வரவேற்றது. மலாயா வாழ் மக்களின் விருப்பத்துக்கு இணங்க டிஸம்பர் 28-ந் தேதி சென்னையிலிருந்து கப்பல் ஏறினார் குன்றக்குடி அடிகளார். சென்னை நகரில் அடிகள் தங்கியிருந்த போது அவர் அறிவுரைகளைக் கேட்கும் வாய்ப்பு சென்னை மக்களுக்குக் கிடைத்தது. அடிகளின் சொற்பொழிவைக் கேட்கும் போது அவர் அறிவுக் கனி குலுங்கும் சோலையாக, சமய மணம் கமழும் மலர் வனமாக, மிகச் சிறந்த சீர்திருத்தக் குன்றாகக் காட்சி தந்தார்கள். குன்றக்குடி தந்த குணக் கடலை மலாய் நாட்டு மக்கள் உற்சாகத்துடன் வரவேற்றுப் பயன் அடைவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அடிகள் கப்பல் ஏறுவதற்கு முன் தமிழ்ப் பெருமக்களின் பிரதிநிதிகள் குன்றக்குடி அடிகளுக்கு மலர் மாலை சூட்டி உற்சாகத்துடன் வழியனுப்பும் காட்சியை மேலே படத்தில் காணலாம்.

மணக்க வேண்டுமானால் அதற்கு மாமாவின் மனம் முதலில் மாற வேண்டும். அதற்கு நான் செய்த தந்திரமே அந்த க்ஷயரோக பிரகடனம்!

"என் நடிப்பு நற்பலனையே கொடுத்தது. கலியாணம் முடிந்து ஊருக்கு வந்துவிட்டேன். பிறகு என்றுமே பிரம்மசாரியாகவே இருந்து விடுவது என்றுதான் இருந்தேன். ஆனால் வறுமையினால் வாடிய பூங்கொடி வித்யாவை நான் சந்திக்க நேர்ந்து விட்டதுதான் எனது எண்ணத்தைக் குலைத்துக் கொள்ளும்படி செய்து விட்டது. நம்மால் ஒரு பேதைப் பெண்ணின் வாழ்வைச் சோபிக்கச் செய்ய முடியும் என்று இருக்கும் போது, அவ்வளவு சுயநலமாக நான் வாழ விரும்பவில்லை. அதன் விளைவுதான் இந்தத் திருமணம்..." என்று கூறி முடித்தான் தியாகராஜன்.

உணர்ச்சி மிகுந்த அவனது வார்த்தைகள் சுபாவின் கண்களைக் கங்கையாக்கிற்று. "அத்தான்! என்னை மன்னித்து விடுங்கள். நான் உங்களைப் பற்றித் தவறாக எண்ணி விட்டேன். என் வாழ்வை என் மனம்போல் மலரச் செய்ய ஒரு பொய்யைச் சொல்லி யிருக்கிறீர்கள். இன்று தாங்கள் வித்யாவை மணந்துகொள்ள முற்பட்டு விட்டதால் அந்தப் பொய்யும் மெய்யாகவே ஆகிவிட்டது. அதில் எனக்குப் பரம திருப்தி. அன்று என்னை வாழவைத்தீர்கள். இன்று வித்யாவுக்கும் ஆனந்த வாழ்வை மனமுவந்து அளித்து விட்டீர்கள். நீங்கள் மனித உருவில் வந்த தெய்வம்" என்ற சுபாஷிணியின் இதழ்கள் நன்றிப் பெருக்கால் துடிதுடித்தன. கண்களில் ஆனந்தக் கண்ணீர் ஆறு வெள்ளமெனப் பெருக்கெடுத்தோடியது.

Firestone



பயர்ஸ்டோன்

சூப்பர் கம் - டிப்பிடு

டயர்கள்

சூப்பர் கம்-டிப்பிங் என்பது பயர்ஸ்டோன் ஸ்தாபனத்தின் ஒரு பிரத்தியேக முறை. இம்முறை டயர்களை அதிக உறுதியுள்ளதாகவும், நீடித்த நாள் நன்கு திறம்பட உழைக்கக் கூடியதாகவும் செய்கிறது. அதிக செலவு ஏதுமின்றிச் சுகமாகவும், தொந்தரவு இன்றியும் அனேக மைல்கள் ஓடி உழைக்கிறது. எனவே இன்றே உங்களூர் பயர்ஸ்டோன் டீலரை பாருங்கள்.

ஒரு புதிய டயருக்கு ஒரு புதிய டியூபும் அவசியமே

பஹேறாலா

ஆர்விகேடெட் **ஹேர் ஆயில்**

இது ஒரு வாசனைக் கூந்தல் தைலம் மாத்திரமல்ல — ஆனால் இது ஒரு சக்தி வாய்ந்த ஹோமியோ ஒளஷதமாகும்

- ★ மூடி உதிர்வதைத் தடுக்கிறது
- ★ அகால நரை தடுக்கப்படுகிறது
- ★ பொடுகு நீங்கி, வழுக்கை விழுந்த இடங்களிலும் புது முடி உண்டாகிறது.
- ★ ஏராளமான அழகிய கூந்தல் உற்பத்தியாகிறது.

ஒரே மாத உபயோகத்தில் நீங்கள் "பஹேறாலா" பக்தர்களாகி விடுவீர்கள்

விலை பாட்டில் ரூ. 2-8-0

அனுப்பும் செலவுகள் தனி

(ஏஜெண்டுகள் தேவை)

•

பாரத் ஹோமியோ லாபரேட்டரி

தபால் பெட்டி 1906 : சென்னை-1

MARGO SOAP

The Genuine

NEEM OIL SOAP
with
CHLOROPHYLL



மார்கோ ஸோப்

வாசனை நீக்கப் பெற்ற வேப்பெண்ணெயிலிருந்து ஒரு விசேஷ முறைப்படி தயாரிக்கப்படுவது. அதன் அபரிமித மான கிருமி நாசன நுரை அழுக்கை அகற்றி, சருமத்தினுள் புகுந்து நன்கு சுத்தம் செய்யும். சருமத்திற்கு புஷ்டியும் மென்மையும் தரும். அபூர்வ மணம். நுட்பமான சருமத்திற்கும் ஹானியற்றது.

A CALCHEMICO PRODUCT

தென் இந்தியா ஆபீஸ்:

5/149, பிராட்வே, மதராஸ்-1



அடைந்த மூக்கைத் துரிதமாகச் சுத்தி செய்கிறது!





எச்சரிக்கை!

கவனியுங்கள்

தங்க சுகாதார முத்திரையை

[illegible]

தான் **விக்ஸ் இன்ஹேலர்!**

ஆரோக்கிய வாழ்வு

சீதாலக்ஷ்மி குமாரசாமி

2. வைடமின் 'பி' கிடைக்கும் வழி என்ன?

பொதுவாக மிஷினில் தீட்டிய அரிசியைத்தான் மக்கள் விரும்புகின்றனர்.

இது நமது நாட்டில் மட்டுமல்ல; உலகத்தில் அரிசி உபயோகிக்கும் எல்லா மக்களுக்கும் இந்த யோகம் உண்டு. இந்த நெல் அரைக்கும் இயந்திரங்கள் வந்து சுமார் ஐம்பது ஆண்டுகள்தான் இருக்கும். இந்த அரை நூற்றாண்டுக்குள்தான் அரிசி சாப்பிடும் இடங்களில் பெரிபெரி என்ற வியாதி பெருகி விட்டது. கையும் காலும் மரத்துப் போதல், தசைகள் வலிமை இழத்தல், கைகால்கள் மடங்கி விடல், வலித்தல், இவைதான் பெரிபெரி வியாதியின் அறிகுறிகள்.

முழுத் தவிட்டுடன் அரிசியை உபயோகிப்பதனால், இந்தக் குறையைப் போக்கி விடலாம். கோதுமையைவிட இதில் கொழுப்புச் சத்தும், இனிப்புச் சத்தும் அதிகம். சருமப் புண்கள், நரம்புக் கோளாறுகள் முதலியவைகளை அடக்கக் கூடிய வைடமின் சத்துக்கள் அரிசியில் ஏராளமாய் இருக்கின்றன. அதனால்தான் அரிசி உணவு மிகச் சிறந்த உணவாய் மதிக்கப் படுகிறது. கோதுமையை விட எந்த விதத்திலும் இது மட்டமானதல்ல. கோதுமையும் இயந்திரத்தில் மாவு செய்யும்போது அதன் முக்கியமான சில சத்துக்கள் குறைந்து விடுகின்றன. அதை அப்படியே உபயோகித்தாலாவது பரவாயில்லை. மாவு சல்லடையில் சலித்துத் தவிட்டை எடுத்து விடுகிறார்கள். போக மிஞ்சி யிருப்பது வெறும் மாவு தவிர வேறு இல்லை. நாம் எப்படி மில் அரிசியைச் சாப்பிடுகிறோமோ அந்த அளவுக்குக் கோதுமை மாவும் வந்து விடுகிறது. சிலர் கோதுமையை மெஷினுக்குக் கொடுப்பதற்கு முன் ஜலம் தெளித்துக் குத்தி, கோதுமையின் மேல் தவிட்டை நீக்கிக் கொடுப்பார்கள். பிறகு மாவு அரைத்து வந்த பின்பும் மறுபடியும் சலித்துக் கொஞ்ச நஞ்ச மிருக்கும் தவிட்டையும் எடுத்து விடுவார்கள்.

எனவே, கொஞ்ச நஞ்சம் கோதுமை உபயோகிப்போரும் மெஷின் அரிசிக்குச் சமமாகக் கோதுமையையும் ஆக்கி விடுகின்றனர். மற்றும் சில வீடுகளில் பூரி, சப்பாத்தி மெதுவாய் இருக்க வேண்டுமென்று சோடா உப்பைப் போட்டுப் பிசைவார்கள். சோடா உப்பு போடுவதால் வைடமின் 'பி' சாகடிக்கப்படுகிறது. வீடுகளிலேயே இப்படியென்றால் ஓட்டல்களில் சொல்லத் தேவையேயில்லை. அவர்களுக்குத்தான் சோடா உப்பை உபயோகிக்காமல் சமைக்கத் தெரியாதே! இம்மாதிரியெல்லாம் நமது உணவு சத்திழந்து விடுகிறது. எனவே, எதிலும் சோடா உப்பைச் சேர்க்காமல் சமைக்கப் பழக வேண்டும். தவிட்டை நீக்கவே கூடாது. தவிட்டுடன் சாப்பிடுவது ஒரு தேச பக்தக் கடமையாகக் கொள்ள வேண்டும். இல்லையானால் நாம் பல நோய்களுக்கு இரையாகி அவதிப்பட வேண்டியதுதான்.

நமது நாட்டில் பிரதானமான உணவாய் அரிசியை உட்கொள்ளுகிறோம். இதில் நாம் இன்னமும் போதிய கவனம் செலுத்தவில்லை. எழுத்தெல்லாம் ஏட்டளவிலும் பேச்செல்லாம் மேடை அளவிலும்தான் இருக்கின்றன. இன்னும் சமையல் அறை வரையிலும் நுழையவில்லை.

ஆனால் உணவில் ஒரு சிறு பகுதியாக அரிசியை உண்ணும் அமெரிக்கா போன்ற தேசங்களில் அரிசியைச் சத்திழக்காமல் சாப்பிடுகிறார்கள். அவர்கள் ஒரு வருடம் பூராவுக்கும் உபயோகிக்கும் அரிசி நபர் ஒன்றுக்கு ஐந்து அல்லது ஆறு ராத்தல் அளவுதான். அந்த அரிசியைக்கூட அவர்கள் பூரண சத்துள்ளதாய்ச் செய்து சாப்பிடுகிறார்கள். நமது நாட்டில் ஒரு நபர் ஒரு வருடத்தில் சுமார் முன்னூறு ராத்தலிலிருந்து அறுநூறு ராத்தல் வரைக்கும் உபயோகிக்கிறார்கள். அவர்கள் உபயோகிக்கும் அரிசி நமக்கு ஒரு வாரத்துக்குக் கூடக் காணாது.

நமது நாட்டிலும் அரிசியை இரண்டு விதமாக உபயோகிக்கிறார்கள். நெல்லை இலேசாக வேக வைத்துப் புழுங்கல் அரிசியாக்கியும், நெல்லை அப்படியே மிஷினில் கொடுத்து அரிசியாக்கியும் உபயோகிக்கிறார்கள். புழுங்கி உபயோகிக்கும் புழுங்கல் அரிசி, பச்சரிசியைவிட எவ்வளவோ மேல். நெல்லைப் புழுக்கும்போது தவிட்டில் உள்ள சத்துக்கள் அரிசிக்குள் இறங்கி விடுகின்றன. பின் மிஷினில் தீட்டினாலும் அந்த அரிசியின் சத்து பூராவும் நீங்கி விடாமல் சத்துடையதாயிருக்கிறது. ஆகையால் இந்தப் புழுங்கல் அரிசி சாப்பிடும் பிரதேசங்களில் இந்தப் பெரிபெரி வியாதி அவ்வளவாய் வருவதில்லை. சென்னை ராஜ்யத்தின் தென் பகுதி பூராவும் இந்தப் புழுங்கல் அரிசி வழக்கமுண்டு. சிறிது வட பகுதியில் வந்தால் பச்சரிசிதான் அதிகப் பழக்கத்தில் இருக்கிறது. அவர்கள் சக்தி யிழந்த மிஷின் அரிசி சாப்பிடுவதனால் பெரிபெரி வியாதி அவர்களுக்கு அதிகம் வருகின்றது.

அமெரிக்காவிலும், புழுங்கல் அரிசி, பச்சரிசி இரண்டும் உபயோகப் படுத்துவதுண்டு. ஆனால் அவர்கள் புழுங்கல் அரிசியை நம்மைவிடச் சத்துடையதாய் இருக்க அவர்கள் நெல் புழுங்கல் முறையை அபிவிருத்தி செய்திருக்கிறார்கள். அப்படித் தயாரித்த அரிசி மஞ்சள் கலந்த நிறமாய் இருக்குமாம். ஆனால் சமைத்தால் நல்ல வெண்மையாய் ஆகிவிடுமாம். ஆகையால் அந்த முறைப்படி நமது நாட்டிலும் செய்தால் இன்னமும் மக்கள் நல்ல பயனை அடைவார்கள்.

பச்சரிசியை அவர்களும்தான் மெஷினில் கொடுக்கிறார்கள். அவர்களும் கண் பார்வையையும், வாய்க்கு ருசியும் விரும்புகிறார்கள். ஆனால் அந்த மிஷினில் தீட்டிய வெள்ளை அரிசியில் தவிட்டில் இருக்கும் தையமின் சத்து, நயாசின் சத்து, இரும்புச் சத்து முதலியவைகளைச் சேர்த்து விடுகிறார்கள். அப்படிச் சேர்த்த அரிசியும் கழுவும் போது இந்தச் சத்துக்கள் நீங்கி விடப் போகிறதென்று இந்த அரிசியின் மேல் பசை போன்ற வெள்ளைப் பொருளைச் சாப்பிடும் பொருளாகப் படிய வைத்து விடுகிறார்கள். அரிசியைக் கழுவும் போது அரிசியில் ஏறிய சத்துக்கள் இம்முறையால் போவதில்லை. ஆனால் அவர்கள் அரிசியை

பொங்கலோ, பொங்கல்!

லால்குடி கிருஷ்ணமூர்த்தி

மஞ்சள் துலங்கிடும் வெண்முகத்தில் வான்
மன்னவன் பொற்கதிர் துள்ளுகையில்

நெஞ்சிலே ஆயிரம் கற்பனைகள்
கொஞ்சியே உள்ளம் கிளுகிளுக்கும்

அஞ்சுதல் ஏனினி என்பதுபோல் அங்கு
அற்புதச் செந்நெற் கழனிகளும்.

புன்செய் வளர்த்திட்ட செங்கரும்பும்,
புன்னகை பூத்துக் குலுங்கிநிற்கும்!

பொங்கலுக்குப்பானை வைக்கையிலே இன்பம்
பொங்கித்ததும்புது உண்மையிலே - இது

எங்களுக்குமட்டும் பொங்கலில்லை எங்கள்
ஏரும், கலப்பைக்கும் பொங்கலம்மா!

தொங்கிடும் மாவிலைத்தோரணமும் உண்மைத்
தொண்டுகள் செய்திடும் ஆவினமும்

பொங்கலைக்கூவி அழைக்குதம்மா! தைப்
பொங்கலோ பொங்கலென் றார்க்குதம்மா!

நாம் செய்வது போல் வடிப்பது கிடையாது. அளவுடன் தண்ணீர் வைத்து குக்கரில் சமைப்பது போல் சமைத்து விடுகிறார்கள். இவர்கள் இவ்வகைச் சத்தேற்றிய அரிசியைப் பூராவும் அப்படியே உபயோகிப்பதில்லை. இருநூறு அரிசிக்கு ஒரு சத்தேற்றிய அரிசியைக் கலந்தால் போதுமாம். அம்மாதிரிக் கலந்த அரிசிதான் பொதுஜன உபயோகத்துக்காக விற்பனை செய்கிறார்கள். மக்களும் விவேகமுடன் அவைகளை உபயோகிப்பதால் இப்பொழுது பெரிபெரி வியாதியே அவர்களிடம் இல்லாமல் சுகமாய் ஆரோக்கியமாய் இருக்கிறார்கள். இம்மாதிரி மிகக் குறைந்த அளவை உபயோகிக்கும் இடங்களில் சத்தரிசியை உபயோகிப்பதில் அவ்வளவு விசேஷமில்லை.

எனவே, பரீக்ஷார்த்தமாக அவர்களின் குடியரசு நாடாகிய பிலிப்பைன் தீவில் பாட்டன் மாகாணத்தில் இந்த அரிசியை மக்களுக்குக் கிடைக்கும்படி செய்து உபயோகித்துப் பார்த்திருக்கிறார்கள். அவர்கள் நாட்டில் நம்மை விடப் பெரிபெரி நோய் அதிகமாம். அங்கு பூர்வாங்கமாக ஓரிரு வருடங்கள் புள்ளி விவரங்கள் எடுத்து வியாபாரிகளைச் சரி செய்து மக்களுக்குப் பிரசாரம் செய்து இந்தச் சத்தேற்றிய அரிசியை அமெரிக்காவிலிருந்து கொண்டு வந்து உள் நாட்டிலுள்ள மிஷின் அரிசியுடன் கலந்து மக்களுக்கு வழங்கி இருக்கின்றனர். மிக நல்ல பலன் கிடைத்திருக்கிறது. பெரிபெரியை ஒரு வழியாய் ஒழித்து விட்டார்கள் என்றே சொல்ல வேண்டும். மற்றும் பிலிப்பைன் ராஜ்யத்தில் பல தீவுகளுக்கு இம்முறை கொண்டு வர முயற்சி நடந்து வருகிறது. இம் முறை மிக வரவேற்கக் கூடிய முறைதான்.

உடனே நமது நாட்டிலும் அம்மாதிரி செய்ய வேண்டும் என்று சொல்லி விடலாம். அப்படி செய்வதிலும் அநேக சங்கடங்கள் இருக்கின்றன. முதலில் சத்தேற்றிய அரிசி அமெரிக்காவிலிருந்து தான் வர வேண்டும். நமது நாட்டில் இம்மாதிரி சத்துக்களைப் பெரும் அளவில் உற்பத்தி செய்யக் கூடிய வசதிகள் இன்னமும் செய்யவில்லை. அப்படி அமெரிக்காவிலிருந்து இந்தச் சத்தேற்றிய அரிசியை வரவழைப்போம் என்றால் ஏற்கெனவே நமது நாட்டிலிருந்து பல கோடிக் கணக்கான ரூபாய்கள் வெளிநாடுகளுக்குப் போய்க் கொண்டிருக்கின்றன. இன்னமும் நமது நாட்டிலிருந்து பல கோடி ரூபாய் கப்பலேறி விடும். ஆகையால் இது ஆலோசிக்க வேண்டிய விஷயம்.

இங்கேயே நமது நாட்டில் உடனே செய்யலாமே எனலாம். ஆனால் நினைத்த அளவில் நடக்கக் கூடிய காரியமல்ல. முதலில் இதற்கான முயற்சி செய்ய அரசாங்கம் சிரத்தை எடுத்துக் கொள்ளவேண்டும். பின் சத்துக்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டும். நிபுணர்கள் வர வேண்டும். பின் சத்துக்கள் தயாராகும். மக்களுக்கும் போதிய பிரசாரம் செய்ய வேண்டும். பழைய வழக்கத்திலேயே மூழ்கிக் கிடக்கும் மக்கள் மனத்தில் இது சரியென்று படவேண்டும். அப்படியும் அவர்கள் வாங்கிச் சமைத்துக் கஞ்சியை வடித்து விட்டார்களானால் எல்லா முயற்சியும் வீணாகி விடும். எனவே மக்களிடம் இன்னமும் போதிய ஆரோக்கிய விழிப்பு, உணவு ஞானம் சரிவர ஏற்பட வில்லை.

எல்லோருக்கும் ஏற்படும் வரை மற்றவர்களும் காத்திருக்க வேண்டுமா! 'உடனே அமெரிக்காவிலிருந்து சத்தரிசியை வரவழைத்து மிஷின் அரிசியுடன் கலந்து கொடுக்கலாமே. உள் நாட்டில் தயாரிக்கும்போது தயாரிக்கட்டு'மெனச் சிலர் சொல்லலாம். இப்படிச் செய்வதால் இன்னமும் நமது பொருளாதார நிலை சீர்கெடும் என்பது தவிர வேறொன்றுமில்லை. எனவே இத் தொல்லையெல்லாம் எதற்கு! சிறிது கருப்பாக இருந்தாலும் இது நல்லது என்று நினைத்துக் கொண்டு ஒவ்வொரு நபரும் முழுத் தவிட்டுடன் பாலிஷ் செய்யாமல் சாப்பிடுவதை ஒரு பெரிய தேசபக்த கடமையாக மதித்துச் சாப்பிட்டால் காசுக்குக் காசு மிச்சம்; ஆரோக்கியமும் உண்டாகும்.

கதர் உடுத்துகிறோம். அது என்ன நன்றாகவா இருக்கிறது! எவ்வளவு அதிகக் கனமாகவும், கரடுமுரடாகவும் இருக்கிறது. ஆனால் அதை ஒரு தேச பக்த கடமையாக உடுத்துகிறோம். இப்பொழுது அதுவே மதிப்புக்குரிய உடையாகவும் ஆகிவிட்டது. அதைப் போலத்தான் இதுவும்.

ஆனால் அரசாங்கம் செய்யக் கூடியது மாத்திரம் ஒன்று உண்டு. மிகத் தைரியமாய்ச் செய்ய வேண்டியது. மிஷின் அரிசி தீங்கிழைப்பதில் கள்ளை விட எந்த விதத்திலும் குறைந்தது அல்ல. அதில் மதி இழக்கிறான்; இதில் ஆரோக்கியமே இழந்து உயிரிழக்கிறான். அதில் குற்றங்கள் செய்ய ஏது வாகின்றது. இதில் நோய்கள் மலிய ஏதுவாகிறது. எனவே கள்ளைப் போல மிஷின் அரிசியை நமது நாட்டிலிருந்து நீக்கி விட வேண்டும். (தொடரும்)








SUNSHINE
Glaxo





48. லங்கேசன் மதியிழந்தான் !

பஞ்சவடி யுத்தத்தில் அரக்கர் கூட்டத்தில் பிழைத்து ஓடியவர்களில் ஒருவனான அகம்பனன் இலங்கைக்குச் சென்று ராவணன் சந்நிதியில் நின்று, "ஜனஸ்தானத்தில் இருந்த நம்முடைய ஜனங்கள் அநேகமாக எல்லாரும் மாய்ந்து போனார்கள். ஜனஸ்தானம் அழிந்தது. நான் எப்படியோ தப்பி வந்தேன்" என்றான்.

இதைக் கேட்டதும் ராவணனுக்குப் பெருங் கோபம் பற்றி எரிந்தது. "யாரடா என் அழகிய ஜனஸ்தானத்தை அழித்தது? யமனா? அக்கினியா? விஷ்ணுவா? யமனையும் கொல்லுவேன், அக்னியையும் சூரியனையும் சேர்ந்தாற் போல் எரித்து விடுவேன், வாயுவையும் அசையாது மடக்கி நிறுத்துவேன். நான் இருக்க யார் ஜனஸ்தானத்தை அழித்து என் ஆட்களைக் கொன்றது? சொல், உடனே" என்று அடங்காத கோபம் மேலிட்டு ராவணன் எழுந்தான்.

ராக்ஷசேந்திரனுடைய கோபத்தைப் பார்த்து பயந்த அகம்பனன், "அபயம் தந்தால் சொல்கிறேன், கேட்பாய்" என்றான்.

பிறகு அகம்பனன் நடந்த நிகழ்ச்சிகளைச் சொன்னான். "தசரத மகாராஜாவின் குமாரன் ராமன் என்கிற வீரன், சிம்மத்தையொத்த யுவன், பெரும் புகழ் பெற்ற ராஜகுமாரன், மானிடர்களுக்குள் அவனுக்குச் சமானமான பல பராக்கிரமம் பெற்றவர் யாருமில்லை, அவன் பஞ்சவடியில் கரனையும் தூஷணனையும் யுத்தம் செய்து வதம் செய்து விட்டான்" என்றான்.

ராக்ஷசாதிபதி விஷப் பாம்பைப்போல் சீறி, "என்ன நீ சொல்லுவது? இந்திரனும் தேவ கணங்களும் நீ சொன்ன இந்த ராமனுக்குச் சகாயமாக வந்து யுத்தம் செய்தார்களா?" என்றான்.

"மகாராஜாவே! அப்படியொன்றுமில்லை. ராமன் ஒருவனே நம்முடைய முழு சேனையையும் சேனைத் தலைவர்களையும் கரனையும் தூஷணனையும் கொன்றான். அவன் செலுத்திய பாணங்கள் ஐந்து தலைப் பாம்புகள் போல் அரக்கர்கள் ஓட ஓட்டத் துரத்திக் கொண்டு போய் எங்கிருந்தாலும் தொடர்ந்து போய் அவர்களைக் கொன்றன." இவ்வாறு சொல்லி ராமனுடைய பாணங்களின் வேகத்தையும் அவனுடைய அபார சக்தியையும் விவரித்துச் சொன்னான்.

தசரதன் மகன் ராமன், தம்பி லக்ஷ்மணனுடன் பஞ்சவடியில் இருந்து கொண்டு வேறு உதவியின்றி இந்தக் காரியத்தைச் செய்தான். அவர்களுக்குச் சகாயமாக எந்த தேவர்களும் வரவில்லையென்று அகம்பனன் சொன்னவுடனே, "சரி, இப்போதே நான் புறப்படுகிறேன். இந்த இரண்டு மனிதப் பூச்சிகளை நசுக்கி விட்டுத் திரும்புகிறேன்!" என்று ராவணன் எழுந்தான்.

"வேண்டாம், நில்!" என்று அகம்பனன் ராவணனை நிறுத்தி ராமனுடைய பல பராக்கிரமத்தை நன்றாக விளக்கினான். விளக்கி விட்டு, "நான் சொல்லுவதைக் கேள். இந்த ராமனை யுத்தம் செய்து வெற்றி யடைய முடியாது. யாராலும் முடியாது. உன்னாலும் முடியாது. அபயம் தந்தபடியால் இப்படி உண்மையைத் தைரியமாக அரசன் முன்னிலையில் சொல்லத் துணிந்தேன். அவனைக் கொல்லுவதற்கு வழி ஒன்றே. அவனுடைய மனைவி அவனுடன் இருக்கிறாள். உலகத்தில் அவளுக்குச் சமானமான அழகி வேறு இல்லை. அவளை எப்படியாவது நீ தூக்கி வந்து விட்டாயானால் அவளை விட்டுப் பிரிந்து ராமன் உயிர் வைத்திருக்க மாட்டான். இறந்து போவான். அவள் மேல் அவனுக்கு அபாரமான காதல். அவளைக் காணாமல் பிரிந்தானானால் உயிரை நீப்பான் என்பது நிச்சயம். இதைச் செய்ய வழி தேடுவாய். யுத்தம் வேண்டாம்" என்றான்.

சீதையின் அழகைப் பற்றிக் கேட்டதும் அரக்கனுக்கு ஆசை வளர்ந்து விட்டது. அகம்பனன் சொன்னதை மிகவும் ருசித்தான். "நாளைக் காலையில் ரதம் ஏறிப் புறப்பட்டுப் போகிறேன். நீ சொல்லும் யோசனை மிகச் சரியானது" என்றான்.

ராஜாஜி

* * *

அவ்வாறே ராவணன் கோவேறு கழுதைகள் பூட்டிய தன் ரதத்தில் ஏறி ஆகாய மார்க்கமாகச் சென்றான். மேகங்களுக் கிடையில் அந்தத் தங்க மயத் தேரானது சந்திரனைப் போல் பிரகாசித்தது. நேராக மாரீசன் ஆசிரமத்துக்குச் சென்றான்.

மாரீசன் ராக்ஷஸ அரசனுக்கு எல்லா உபசாரமும் முறைப்படி செய்து விட்டு, "என்ன விசேஷம், இவ்வளவு அவசரமாக வந்தது?" என்று விசாரித்தான்.

"பிரிய மாரீசனே, என்னை நீதான் காப்பாற்ற வேண்டும். ஜனஸ்தானம் அழிந்து விட்டது. நம்முடைய சேனை நிர்மூலமாய் விட்டது. இதுவெல்லாம் தசரதன் மகன் ராமன் என்பவனுடைய காரியம். அற்புதமாகத்தான் இருக்கிறது! பழிவாங்க அவனுடைய மனைவியை நான் தூக்கிப் போக நிச்சயித்திருக்கிறேன். அதற்கு உன் யோசனையும் உதவியும் வேண்டும்" என்றான் ராவணன்.

"என்ன வேலையில் இறங்கினாய், ராவணா? எவனோ உன் பகைவன் உனக்குச் சர்வ நாசம் உண்டாக்கச் சிநேகிதனைப் போல் பாசாங்கு செய்து இந்த யோசனையை உனக்குச் சொல்லி யிருக்கிறான். ஏமாந்து அழிந்து போகாதே! சீதையை அபகரிக்கும் யோசனை உனக்கு யார் சொன்னது? அரக்க சமூகத்தின் நாசத்தை விரும்பி யார் உனக்கு இந்தத் துராலோசனையைச் சொன்னது? சும்மா இருக்கும் பாம்பின் வாயில் கையிட்டு விஷப் பல்லைப் பிடுங்கப் போய்ச் சாகும் யோசனை. திரும்பிப்போய் உன் மனைவிகளுடன் சுகமாக இரு. பைத்தியக்காரன் மாதிரி ராமன் மனைவியை விரும்பாதே! அழிந்து போவாய். ராமனுடைய கோபத்தைத் தூண்டிக் குல நாசம் சம்பாதித்துக் கொள்ளாதே" என்றான், அறிவாளியும் அனுபவப் பட்டவனுமான மாரீசன்.

மாரீசன் சொன்னதைக் கேட்டு தசக்ரீவன் இலங்கைக்குத் திரும்பிப் போனான்.

மாரீசன் சொன்ன புத்திமதி ராவணன் மூளையில் சரியாகவே புகுந்தது. அந்தச் சமயம் ராவணனுக்குத் தான் பெற்ற வரத்தில் தவறிப்போன விஷயம் தோன்றி யிருக்கும். மானிட ஜாதியைப் பற்றித் தான் வரம் பெற வில்லை என்பதையும் ராமனுடைய பாணங்களினால் ஜனஸ்தானத்துச் சேனையும் கரன், திரிசிரன், தூஷணன் முதலிய மிகப் பெரிய வீரர்கள் அனைவரும் தோல்வியடைந்து மாண்டதையும் நினைத்து, ராவணன் மாரீசன் சொன்னதைச் சரியென்று ஒப்புக் கொண்டதாக நாம் எண்ணலாம்.

* * *

விதி இந்த முடிவோடு நிற்க வில்லை. ராவணன் தன்னுடைய சிம்மாசனத்தில் உட்கார்ந் திருந்தான். நெய் விட்டு வளர்த்த அக்கினியைப் போல் அவன் தேஜஸ் ஜொலித்துக் கொண்டிருந்தது. யாராலும் ஜெயிக்க முடியாத வீரன். தேவாசுரர்களோடும் மற்றவர்களோடும் செய்த யுத்தங்களில் சக்ராயுதத்தாலும் யானைகளின் தந்தங்களினாலும் உண்டான காயங்களின் வடுக்கள் அவன் கம்பீரத் தோற்றத்தை இன்னும் அதிக கம்பீரமாகப் பிரகாசிக்கச் செய்தன. ராவணனுடைய பல பராக்கிரமத்துக்கு எல்லையில்லை. அதருமத்துக்கும்

எல்லை யில்லை. தேவர்களைத் துன்பப் படுத்துவதிலும் யாகங்களைக் கெடுப்பதிலும் பரஸ்திரீகளை பலவந்தம் செய்வதிலும் கோபாவேசமாக இன்னும் பலவித அக்கிரமங்கள் செய்வதிலும் அவனுக்குச் சமானமான துஷ்டன் யாருமே இல்லை. அவனைக் கண்டு தேவாசுர கணங்கள் அளவற்ற பயம் கொண்டிருந்தார்கள். எல்லாப் பிராணிகளையும் வாட்டிக் கதறச் செய்யும் சுபாவம் கொண்டவன். சகலவிதமான செல்வமும் போக்கியமும் அடைந்து அசகாய சூரனாக விளங்கி இலங்கையை மரண பயமின்றி ஆண்டு வந்தான். பத்துத் தலைகளும் விசாலமான கண்களும் இவற்றுக்கு ஈடாக மற்ற அவயவங்களும் கொண்ட பயங்கர சொரூபத்துடன் எல்லா ராஜ லக்ஷணங்களும் அவனிடம் விளங்கின. திவ்விய ஆடையாபரணங்கள் அணிந்து மந்திரிகள் சூழ சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கும்போது திடீரென்று சபையில் அதிர்ச்சியுண்டாக்கிக் கொண்டு அவனுடைய உடன் பிறந்தவளான சூர்ப்பனகை மூக்கறுத்த அவலக்ஷண சொரூபத்துடன் சபைக்குள் பிரவேசித்தாள்.

* * *

“மூடனே! செல்வச் செருக்கிலும் கிராமிய போகத்திலும் மூழ்கிப் போயிருக்கிறாய். வரப் போகும் கஷ்டத்தை முன்பே தெரிந்து கொள்ள வேண்டிய ஸ்தானத்திலிருந்து கொண்டு கெடுதி வந்த பிறகும் தெரிந்து கொள்ளாமலிருக்கிறாய். அற்ப சுகங்களில் மனத்தைப் பறி கொடுத்த அரசனை, குடிகள் மதிக்க மாட்டார்கள். மரண பயமில்லாமலிருந்தால் மட்டும் போதுமா? செய்ய வேண்டிய காரியங்களைக் காலத்தில் கவனிக்காத அரசனுடைய ராஜ்யம் பாழாகப் போகும். சாரர்களைச் சரியாக உபயோகித்து ராஜ்யத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ளாத அரசன் அழிந்து போவான். உன்னுடைய ராஜ்யத்தில் என்ன நடந்தது, ஜனஸ்தானத்தில் உன்னுடைய பந்துக்களுக்கு என்ன ஆயிற்று, உன்னுடைய சேனைக்கு என்ன நேரிட்டது என்பதை நீ அறியாமல் சிம்மாசனத்தில் அழகாய் உட்கார்ந்து கொண்டிருக்கிறாய். உன்னுடைய பகைவர்கள் உன்னை அழிப்பதற்குச் சமயம் எப்போது வரும் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். இது உனக்குத் தெரியும். ஆனபோதிலும் நீ உன் சாரர்களைக் கேட்டு என்ன நடந்தது என்று தெரிந்து கொள்ளாமல் கிடக்கிறாய். உன் மந்திரிகள் அறிவற்ற பாமரர்களாக இருக்கிறார்கள். ஜனஸ்தானத்தில் உன்னைச் சேர்ந்தவர்கள் — நம்முடைய எதிரிகள் நடுங்கும்படியாக உன் ஆக்ஞையின்படி இவ்வளவு காலம் அரசு புரிந்து வந்தவர்கள் — இப்போது மாண்டு கிடக்கிறார்கள். இதை உணர்ந்தாயா? ஜனஸ்தானத்துச் சேனை நிர்மூலமாயிற்று; ராமன் என்ற ஒரு மனிதப் பூச்சி தரை மேல் நின்று தேரும் யானையு மில்லாமல் அவ்வளவு பேரையும் கொன்று விட்டான்.

“உனக்கு இது அவமானமாகப் படவில்லையே! உன் தங்கைக்கு என்ன ஆயிற்று என்று பார்த்தாயா? விசாரித்தாயா? இதுவரையில் உனக்கும் உன் ஆட்களுக்கும் பயந்து நடுங்கி வாழ்ந்த ரிஷிகளுக்கு இந்த ராமன் அபயம் கொடுத்து விட்டான். உன்னுடைய ஜனஸ்தானம் பாழாயிற்று. தண்டகாரண்யத்தில் உன்னைப் பற்றி யிருந்த பயம் முற்றிலும் தீர்ந்து போயிற்று. தன்னைத்தானே பாராட்டிக் கொண்டிருப்பதோடு திருப்திப்பட்டுக் கிடக்கும் உனக்கு ஆபத்து நெருங்கி விட்டது. உன்னை உன் குடிமக்கள் இனி மதிக்க மாட்டார்கள். ராஜ்யத்திலிருந்து துரத்தப்படுவாய் என்பது நிச்சயம். கட்டிக் கிழிந்து போன துணியைப் போலத்தான் இனி உன்னை மக்கள் மதிப்பார்கள்.

“சாரர்கள் வழியாக ராஜ்யத்தில் நடப்பதை அறிந்து கொண்டு வேண்டியதைச் செய்பவனே அரசன். உன் ராஜ்யத்தில் உன் ஜனங்களுக்கு உண்டான கஷ்டத்தையாவது அவமானத்தையாவது நீ அறியவில்லை. நீ எப்படி அரசனாக மதிக்கப்படுவாய்? உனக்குக் கோபமில்லை. கோபமில்லாத அரசன் என்னத்துக்கு உதவுவான்?

“கரனையும் திரிசிரனையும் தூஷணனையும் கரனுடைய முழு சேனா பலத்தையும் கொன்று நிர்மூலமாக்கி விட்ட ராமனுக்கு சீதை என்ற ஒரு மனைவி யிருக்கிறாள். காட்டில் அவனோடு தனியாக இருக்கிறாள். அவள் அழகை என்னென்று சொல்லுவேன்! தேவ கந்தர்வ யக்ஷ கின்னர மனுஷ்ய ஜாதிகளில் இந்த அழகை இதுவரையில் நான் கண்டதில்லை. உனக்கேற்ற பார்யை. அவளைக் கண்டதும் அவள் உன்னுடைய பொருள் என்று நான் நிச்சயித்தேன். ராக்ஷச குலத்தைச்சேர்ந்த நான் ஒரு எண்ணம் கொண்டதும் அதை உடனே நிறைவேற்றுவது தானே என் சுபாவம். உனக்காக நான் அவளைத் தூக்கி எடுத்துவர முயற்சி செய்தேன். பக்கத்தி லிருந்த அந்த ராமனுடைய தம்பி லக்ஷ்மணன் தடுத்து என் மேல் பாய்ந்து இப்படி என் அங்கங்களை

அறுத்து அவமானப்படுத்தி விட்டான். உனக்காக நான் இந்நிலைமையை யடைந்தேன். இப்பழியைத் தீர்த்து உன் குலத்தின் மானத்தைக் காப்பாற்ற உனக்கு ஆசை இருந்தால் உடனே புறப்படு.

"என் பழி எப்படியாயினும், உனக்குத் தகுந்த அழகியைச் சம்பாதித்துக்கொள். சீதையைப் போன்ற அழகியை நீயன்றி வேறொருவன் அனுபவிக்கலாமா? அவளை நீ அடைந்து ராமனை அவமானப் படுத்தினாயானால் அநியாயமாய் மாண்ட உன் வீரர்கள் திருப்தி யடைவார்கள். அவர்கள் எனக்குச் செய்த அவமானத்துக்குப் பழி தீரும். உன் சக்தி உனக்குத் தெரியாமல் கிடக்கிறது. சீதையை எளிதில் அடைந்து அனுபவிப்பாய். உன் குலத்திற்கு ஏற்பட்ட அவமானத்தைக் கவனிக்காமல் நீ இருக்கலாமா? ராமனை எதிர்த்த கரனும் தூஷணனும் ஜனஸ்தானத்தில் மடிந்தார்கள். அதையும் நினைவில் வைத்து யோசித்துச் செய்ய வேண்டியதைச் செய். உன் சகோதரி அடைந்த அவமானம் உன்னுடைய அவமானமாகும். நம்முடைய குலத்தில் உனக்குள்ள கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்" என்றாள் சூர்ப்பனகை.

* * *

உடன்பிறந்தவள் இவ்வாறு திடீர் என்று பிரவேசித்துத் தன்முன் நின்று இடித்துச்சொன்ன பேச்சுக்களையும் சீதையைப்பற்றி ஆசை பொங்கும் பேச்சையும் கேட்டு, மந்திரிகளிடம் சபை முடிந்தது என்று சொல்லிவிட்டு, தனியாக யோசிக்கப்போனான். மாரீசன் சொன்ன துணிவிலிருந்தபடியால்யோசிக்கலானான். நன்மை தீமைகளை நன்றாக மனத்தில் சோதித்து ஒரு முடிவுக்கு வந்துவிட்டான். விமான சாலைக்குச்சென்றுதேரோட்டிக்குச் சொன்னான். "உடனே ரதம் தயாராகலாம்.யாருக்கும்தெரிய வேண்டியதில்லை" என்றான்.


பிசாசு முகங்கள் கொண்ட பருத்த கோவேறு கழுதைகள் பூட்டிய அவனுடைய சுவர்ண ரதம் தயாராக நின்றது. அதில் ஏறி ஆகாய மார்க்கமாகக் கடலும் நாடும் நகரங்களும் வளங்களும் எல்லாவற்றையும் வெகு வேகமாகத் தாண்டிச் சென்றான். இஷ்டப்பட்ட இடம் செல்லும் மாய ரதம் போகும்போது கீழே அவன் பார்த்த வசந்த காலக் காட்சிகளெல்லாம் அவனுடைய காமத்தை அதிகரித்தன.

மாரீசனுடைய ஆசிரமத்தை அடைந்தான். ஜடையும் மரவுரியும் தரித்து ஆசார நியமத்துடன் விரத வாழ்க்கை நடத்தி வந்த மாரீசனைக் கண்டான்.

ராக்ஷசேந்திரனும் தனக்கு பந்துவுமான ராவணனைக் கண்டதும் முறைப்படி உபசாரம் செய்து விட்டு, "மறுபடி சொல்லாமல் இவ்வளவு தூரம் வந்த விசேஷமென்ன?" என்று கேட்டான்.

பேச்சில் வல்லமை பெற்ற ராவணன் சொல்ல ஆரம்பித்தான் :

"நான் பெருந் துன்பத்தில் சிக்கித் துயரப்பட்டுக் கொண்டிருக்கிறேன். என் துயரத்தை நீதான் நீக்க முடியும். உன்னைச் சரண் புகுந்தேன். என் ஆக்ஞையின்படி என் உடன் பிறந்தவர்கள் ஜனஸ்தானத்திலிருந்து கொண்டு என் காரியத்தை நடத்தி வந்தது உனக்குத் தெரிந்த விஷயம். அவர்களும் அவர்களுக்குச் சகாயமாக இருந்த வீரர்களும் இவ்வளவு காலம் ஜெயப்பிரதமாக அங்கே அரசு புரிந்து வந்தார்கள். இப்போது ராமன் என்பவன் அத்தனை வீரர்



களையும் முழு சேனையையும் அனுயாசமாகக் கொன்று தொலைத்து விட்டான். தேராவது வேறு வாகனமாவது இல்லாமல் தரைமேல் நின்று அந்த மனிதன் நம்மவர்கள் அனைவரையும் பாணங்களைச் செலுத்திக் கொன்று விட்டான். தண்டகாரண்யத்தில் இப்போது ராக்ஷசர்களைப் பற்றி பயமேயில்லாமல் ரிஷிகளுடைய கொண்டாட்டமாக இருக்கிறது. இந்த ராமனென்பவன் தகப்பனால் காட்டுக்குத் துரத்தப்பட்ட வகையில்லாத நீசன். மனைவியையும் கூட்டிக் கொண்டு காட்டில் நாடோடி வாழ்க்கை நடத்துகிறான். இந்தத் துஷ்டன் தவவேஷம் போட்டுக் கொண்டு இந்திரியானுபவத்தில் ஈடுபட்டிருப்பவன், தரும மார்க்கத்தை விட்டவன், அற்பன், கொடுஞ் சுபாவம் கொண்டவன், எந்தக் காரணமுமின்றி மிருக பலத்தின் அகங்காரத்தால் என் உடன் பிறந்தவளுடைய மூக்கையும் காதையும் அறுத்து நம் குலத்துக்குப் பெருத்த அவமானம் இழைத்திருக்கிறான். கோரமான முறையில் துன்பமும் அவமானமுமடைந்த என் உடன் பிறந்தவள் இதைப் பற்றி முறையிடுகிறாள். நான் இதையெல்லாம் பார்த்துக் கொண்டு சும்மா இருந்தேனானால் நான் அரசன் ஆவேனா? இந்தப் பழியைத் தீர்க்க இந்த ராமனுடைய மனைவியை தண்டகாரண்யத்திலிருந்து தூக்கிப் போவதாக நிச்சயித்து விட்டேன். இந்த ராமனைத் தண்டித்து அவமானப் படுத்துவது என் குலக் கடமை. இதற்கு உன் சகாயம் வேண்டும். நீயும் என் சகோதரர்களும் இருக்க எனக்கு என்ன பயம்? உன் உதவியைக் கோருகிறேன். சௌர்யம், பலம், யுக்தி, மாயைகள், இவற்றில் உன்னைப்போல் உலகத்தில் வேறு யார்? உன்னிடம் நான் இதற்காகத்தான் வந்திருக்கிறேன், நீ மறுக்கக் கூடாது. நான் சொல்லுவதைக் கேள். நீ ஒரு பொன் மானாக வேண்டும். சுவர்ணமும் வெள்ளிப் புள்ளிகளும் கண்ணைக் கவரும் விசித்திர வடிவமும் பொருந்திய மானாக உருவம் கொண்டு ராமனுடைய ஆசிரமத்தண்டை வனத்தில் சீதைக் கெதிரில் நீ சஞ்சாரம் செய்ய வேண்டும். ஸ்திரீ சுபாவத்தின்படி அவள் நிச்சயமாக ராமனையும் லக்ஷ்மணனையும் 'இந்த மானைப் பிடித்துத் தரவேண்டும்' என்று வற்புறுத்துவாள். அவளை விட்டு அவர்கள் விலகி அவள் தனியாக இருக்கும் சமயத்தில் நான் சுலபமாக அவளைப் பிடித்துத் தூக்கிப் போய் விடுவேன்.


"சீதை மகா சௌந்தரியம் கொண்ட அழகி. மனைவியை யிழந்த ராமன் மனம் உடைந்து பலவீன மடைவான். அந்த நிலையில் அவனைத் தாக்கி, பழி வாங்கித் திருப்தி யடைவேன்."


இதைக் கேட்ட மாரீசன் முகம் சுண்டி வாய் உலர்ந்து ராவணனைக் கண் கொட்டாமல் பார்த்த வண்ணமாக நின்றான். ராமனுடைய பராக்கிரமத்தை அறிந்த மாரீசன் ராவணனுடைய தீர்மானத்தைக் கேட்டு பயந்து போனான். அனுபவம் பெற்ற அறிவாளியும் தவமிருந்து ஓரளவு ஞானமும் ஈசுவர பக்தியும் அடைந்த மாரீசன் பார்த்தான். ராவணனுடைய உள்ளத்தை அறிந்து கொண்டான். 'விதி இவனைக் கயிறு போட்டு இழுத்துப் போகிறது. இதை இனி தடுக்க முடியாது' என்று கண்டு கொண்டான். ராவணன் குலத்தின் கவுரவம், அரசியல் நீதி, சூர்ப்பனகையின் அவமானம் இவற்றை யெல்லாம் காரணம் காட்டிப் பேசினானே யொழிய சீதையை அபகரிக்கும் துன்மார்க்க எண்ணத்திலேதான் அவன் புத்தியை இழந்து விட்டான். மாரீசன் அதை நன்றாகத் தெரிந்து கொண்டான்.

* * *


சூர்ப்பனகையின் கருத்தையும் நாம் கொஞ்சம் ஆராய வேண்டும். காம வெறியினால் அவளுக்கு அனர்த்தம் ஏற்பட்டது. மூக்கு அறுத்ததும் துன்பப் படுத்தியதும் லக்ஷ்மணன் ஆயினும், ஸ்திரீ சுபாவம், அவன்மேல் அவ்வளவு கோபம் இல்லை. தன் எண்ணம் நிறைவேறாமல் போனதற்குக் காரணம் நடுவிலிருந்த சீதைதான், அவளுடைய அழகும் குணமுமே தன்னைக் கெடுத்தது என்று அவள் பேரில் சூர்ப்பனகைக்கு அதிக ரோஷம் உண்டாகி விட்டது. அவளை அவமானப் படுத்திப் பழி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே சூர்ப்பனகையின் உள்ளத்தைப் பற்றிக் கொண்ட ஆசை. ராவணனை அந்தக் காரியத்தில் உபயோகிக்கவே அவள் சீதையின் உருவத்தை காமாதுரனான ராவணன் முன் நிறுத்தி அவன் எண்ணத்தை அந்த வழியில் செலுத்தினாள். மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசியதெல்லாம் சந்து அடைக்கவே. குலத்தின் கவுரவம், பந்துக்கள் உயிர் இழந்தது முதலிய காரணங்களை சேஷபூரணமாகச் சேர்த்துச் சொல்லி ராவணனுக்கு வழி காட்டினாள். முக்கிய நோக்கம் காமத்தைத்தூண்டி ராவணனை சீதையண்டை போகச் செய்வது. அவனும் இந்தசூழ்ச்சிக்குள் அகப்பட்டுப்போனான்.



இதைப்போன்ற டூத் பிரஷ் வேறில்லை!
உங்களுக்கேற்றடிசைன்! உங்கள் வாய்க்கு பொருத்தமானது!
பற்களை உறுதிப்படுத்தும் புது அம்சங்கள்
• முற்றிலும் ஸ்டரிலைஸ் செய்யப்பட்டது
• கால்கேட் டூத் பிரஷ்களின் ஹாண்டில்கள் தனி வர்ண முள்ளவை; உங்களுக்கு ஏற்றதை லகுவில் அறியலாம்
• பிளாஸ்டிக் ஹாண்டிலில் நிஜ நைலான் நார்கள்
• மிருதுவாக பாலிஷ் செய்கிறது; இளமல் சிதையாது
• பல் ஈறுகளை மிருதுவாகத்தடவி உறுதிப்படுத்துகிறது
குழந்தைகளுக்கு
ஸ்திரீ களுக்கு
ஆண் களுக்கு
2 சைஸ்கள்
பெரியவர்களுக்கு குழந்தைகளுக்கு
ஹார்ட், மீடியம், சாப்ட் டப்ட்ஸ்
COLGATE
Nylon TOOTH BRUSH
AN EXCELLENT QUALITY TOOTH BRUSH WITH GENUINE NYLON BRISTLES–FIRMLY FASTENED
கால்கேட்
நைலான் டூத் பிரஷ்
"துவண்டு" போவதில்லை



I am Vitaminised..
GRT/G/13
KALZANA-D
VITAMIN ACTIVATED CALCIUM
கல்ஸாணா-D கால்ஷியம் குறைவைத் தடுத்து, நோயை எதிர்த்துப் போராடும் சக்தியை அதிகரித்து
உறுதியான பற்களையும் எலும்புகளையும் அளித்து, இரத்தத்தையும் சருமத்தையும் சுத்தப்படுத்துகிறது.




ஹாஸ்ய வெடிகள்!





“நான் என்ன செய்யட்டும்? நீங்கள்தான் நாய்க்குச் சங்கிலி வாங்கித் தர மாட்டேன் என்கிறீர்களா?”


“ஏ, பையா! பேனாவில் மையில்லே!”



1 அவசர பதில்!
2
3



"என்னை மன்னிச்சிடுங்க! இனிமேல் உங்க பெண்ணுக்கு நாட்டியம் சொல்லித்தர என்னாலாகாது. என் உடம்பு ஏற்கெனவே இளைத்துப் போச்சு!"



காகத்தின் காதல்!
"நான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன். நீ வெறும் கறுப்பு!"



1 குளிர் காலத்தில்
2
அட! !!


சூப்பர்
இந்தியா
டயர்களையே
கேட்டு
வாங்குங்கள்
"டயர்களில் மிகச் சிறந்தவை"
IT. 5466 (A)

பாப்பா மலர் தொடர் கதை



தங்க மாம்பழம்

16. மஞ்சள் கல் மோதிரம்

குடியானவனின் கடுமையான பதிலைக் கேட்டதும் உமா சட்டென்று அழ ஆரம்பித்தாள். அவள் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வர ஆரம்பித்தது. பிரபாகரன் அவளைத் தட்டிக் கொடுத்துச் சமாதானப் படுத்தினான்.

அதைப் பார்த்த குடியானவனுக்குக் கொஞ்சம் மனம் தளர்ந்தது. "ஏன் அப்பா, உன் தங்கைக்கு மாம்பழம் பிடிக்குமா?'' என்று கேட்டான்.

"ஆமாம், ஆமாம்! ரொம்பப் பிடிக்கும்'' என்றான் பிரபாகரன்.

"உங்களைப் பார்த்தால் மிகவும் பரிதாபமாக இருக்கிறது. நீங்கள் திரும்பிச் சந்தைக்குச் சென்று மாம்பழம் வாங்குவது என்றால் முடியாது; சந்தை வெகு தூரம் இருக்கிறது. காசு கொடுங்கள், இந்தக் கூடையிலிருந்து உங்களுக்கு வேண்டிய மாம்பழத்தைப் பொறுக்கிக் கொள்ளலாம். எனக்கு அரண்மனைக்குப் போய்க் கணக்குச் சொல்லுவதற்கும் சரியாக இருக்கும்'' என்றான் குடியானவன்.

அதற்கு உமா "ஐயா, நாங்கள் கேட்டது ஒரே ஒரு மாம்பழம் தானே. அதுவும் எங்களுடைய மாம்பழம்தான். மற்ற மாம்பழங்கள் நீங்கள் வேண்டி வேண்டிக் கொடுத்தாலும் எங்களுக்கு வேண்டாம்'' என்றாள்.

"இந்தக் கூடையிலிருக்கும் மாம்பழங்கள் யாவும் பணம் கொடுத்து வாங்கியவை'' என்றான் குடியானவன்.

"ஐயா, அந்தக் கூடையில் இருக்கும் மாம்பழம் யாவும் விலை கொடுத்து வாங்கியவை என்பது நிச்சயம்தான். தவறி எங்கள் மாம்பழம் அக்கூடையில் சேர்ந்து விட்டது. அது உங்களுக்குத் தெரியாமல், கடைக்காரருக்கும் தெரியாமல் உங்கள் கூடையில் வந்து சேர்ந்து விட்டது. கடைக் காரரிடம் நாங்கள் போய்ச் சொல்லுவதற்குள் நீங்கள் அந்த மாம்பழத்துடன் கடையை விட்டுப் புறப்பட்டு விட்டீர்கள். இல்லா விட்டால் நாங்கள் உங்களை எதற்காகச் சிரமப்படுத்த வேண்டும்?'' என்றான் பிரபாகரன்.

"எங்களிடத்தில் ஒரு காலணாக் கூடக் கிடையாது. ஐயா, எப்படியாவது நீங்கள் எங்கள் ஒரே ஒரு மாம்பழத்தைக் கொடுத்து விடுங்கள், போய் விடுகிறோம்'' என்று கெஞ்சிக் கேட்டாள் உமா.

"உங்களிடம் காலணாக் கூடக் கிடையாதா?'' என்று மறுபடியும் கேட்டான் குடியானவன்.

"கிடையவே கிடையாது. வேண்டுமென்றால் எங்களைப் பரிசோதனை செய்து பார்த்துக் கொள்ளும்'' என்றாள் உமா.

பிரபாகரனையும், உமாவையும் குடியானவன் உற்று நோக்கினான். ஏமாற்றத்துடன் நின்று கொண்டிருந்த அவர்களின் முகத்தோற்றங்கள் குடியானவனுடைய மனத்தைச் சற்றுத் தளர்த்தின. இருந்தாலும் அவன் அவர்களிடத்தில் தனக்கு ஏதாவது லாபம் இல்லாமல் மாம்பழத்தைக் கொடுப்பதற்கும் அவன் மனம் இடங் கொடுக்கவில்லை. உமாவை உற்று நோக்கியபடி,



"உன் கையில் போட்டுக் கொண்டிருக்கிறாயே அம் மஞ்சள் கல் மோதிரத்தையாவது கொடு. அது பித்தளை மோதிரமாகத்தான் தோற்றம் அளிக்கிறது. அதிலிருக்கும் மஞ்சள் கல்லும் போத்தான் கல்லுமாதிரிதான் தெரிகிறது'' என்றான் குடியானவன். உண்மையாகவே அந்த மஞ்சள் கல் மோதிரம் சாதார

பொங்கலைப் போற்றுதும்!

என். எஸ். சிதம்பரம்

பொங்கலைப் போற்றுதும்! பொங்கலைப் போற்றுதும்!
மங்களத் தமிழரின் மாண்புறு திருநாள்
பொங்கலைப் போற்றுதும்! பொங்கலைப் போற்றுதும்!

முத்தமிழ் இனிமையை முழுவதும் நிகர்த்துச்
சித்தம் இனித்திடும் செந்நெல் லமுதொடு
மஞ்சளும் கரும்பும் மகிழ்தரு கனிகளும்
இஞ்சியும் வாழையும் இனிதுறப் படைத்துக்
காசினிக் கெல்லாம் கண்காண் தெய்வம்
தேசுறு கதிரோன் தெள்ளிய மலர்ப்பதம்
பணிந்திடும் பொன்னாள்! பாங்குறும் நன்னாள்!
பொங்கலைப் போற்றுதும்! பொங்கலைப் போற்றுதும்!

உழுதொழில் ஓங்கவும் உறுபசி நீங்கவும்
பழுதிலாக் கலைகள் பண்புடன் வளரவும்
ஏழைமை வறுமை எங்கணும் மறையவும்
வாழ்வது வளரவும் வளங்கள் நிறையவும்
அன்புறும் நெறியினில் அகிலம் இலங்கவும்
இன்பமெய்ச் சுடரின் இன்னருள் வேண்டிடும்
பொங்கலைப் போற்றுதும்! பொங்கலைப் போற்றுதும்!

ணைப் பித்தனை மோதிரம்தான். ஆனால் அதனிடத்திலுள்ள மந்திர சக்தியைப் பற்றி அவர்களுக்கு எப்படித் தெரியும்? குடியானவன், தான் அணிந்து இருக்கும் மஞ்சள் கல் மோதிரத்தைக் கேட்டவுடன் உமா பிரபாகரனின் முகத்தை நோக்கினான். 'கொடுத்து விடு' என்று தலையை அசைத்தான் பிரபாகரன். உடனே அவசர அவசரமாகத் தன் மோதிரத்தைக் கழற்றி, உமா, குடியானவன் கையில் கொடுத்தாள்.

"சரி, இப்பொழுது உங்களுடைய மாம்பழத்தை மாத்திரம் பொறுக்கி எடுத்துக் கொள்ளுங்கள்" என்று தலையிலிருந்த மாம்பழக் கூடையைக் கீழே இறக்கி வைத்தான் குடியானவன்.

அவசரம் அவசரமாகப் பிரபாகரனும், உமாவும் மாம்பழக் கூடையைப் பரிசோதித்தார்கள். தங்க மாம்பழம் பளபளப்புடன் கூடையில் 'ஜம்'மென்று உட்கார்ந்திருந்தது. அதைக் கையில் எடுத்துக் கொண்டான் பிரபாகரன்.

அதே சமயத்தில் மோதிரத்தை மிகவும் சிரமப்பட்டுக் குடியானவன் தன் இடது கைச் சுண்டு விரலில் அணிந்து கொண்டான். அவன் மஞ்சள் கல் மோதிரத்தை அணிந்த மறு வினாடியில் கைகளைக் கொட்டிக் கொண்டே பஜனை செய்வது போலக் குதித்துக் கொண்டே பாட ஆரம்பித்தான்.

பிரபாகரனும், உமாவும் வெகு வேகமாக அவ்விடத்தை விட்டு அகன்றார்கள்.

அரண்மனை வாயிலில் வீரப்ப தேவன் மாம்பழக் கூடையுடன் குடியானவனுடைய வரவை ஆவலுடன் எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தான். அவன் வெகு நேரமாகியும்வராமற்போகவே வீரப்ப தேவனுக்குக் கவலை அதிகமாய்ப் போய் விட்டது. அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

அவன் தன் குதிரையின் மீது ஏறிக் கொண்டு வெகு வேகமாகப் புறப் பட்டான். கொஞ்ச தூரம் சென்றவுடன் மாம்பழக் கூடை சாலையின் மத்தியில் வைக்கப்பட் டிருந்ததைப் பார்த்தான். அப்பொழுது ஒரு கழுதையும், பெரிய மாடு ஒன்றும் கூடையிலுள்ள மாம்பழத்தைத் தின்று கொண் டிருந்தன. சுற்று முற்றும் பார்த்தால் ஒருவரையும் காண வில்லை. வீரப்ப தேவன் கழுதையையும், மாட்டையும் விரட்டினான். கூடையிலுள்ள மாம்பழத்தை யெல்லாம் கோபமாகக் கீழே கொட்டிப் பார்த்தான். தங்க மாம்பழம் அகப்படவில்லை. ஏமாற்றம் அடைந்து அவன் பெருமூச்சு விட்டான். 'எங்கே அந்தக் குடியானவனைக் காணோம்? ஒருவனை யாராவது திருடர்கள் குறுக்கிட்டுக் குடியானவனை விரட்டி விட்டுத் தங்க மாம்பழத்தை எடுத்துக் கொண்டு ஓடி விட்டார்களோ?' என்று எண்ணினான்.

அந்தச் சமயத்தில் அரண்மனைச் சிப்பந்தி ஒருவன் அவ்வழியே வந்து கொண்டிருந்தான். அவன் வீரப்பதேவன் நின்று கொண்டிருப்பதைப் பார்த்து 'என்ன அண்ணே, இங்கு நின்று கொண்டிருக்கிறாய்?" என்றான்.

"ஒன்றுமில்லை. இந்த மாம்பழக் கூடையைத் தூக்கிக் கொண்டு வந்த குடியானவனைக் காணவில்லையே என்று இங்கு வந்தேன். மாம்பழக் கூடை மாத்திரம் இங்கு இருக்கிறது. ஆளைக் காணவில்லையே!" என்று சொன்னான் வீரப்பதேவன்.

"அடாடா, அவனை நான் இப்பொழுது பார்த்தேனே!"

"எங்கே, எங்கே?"

"அதோ! அந்த வயல் வழியாகக் குறுக்கே எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறான். அவனைப் பார்த்தால் இப்பொழுது இங்கு வருவதாகத் தோன்றவில்லை!"

வாட்டர்ப்ரூப் மற்றும் தானே சாவி கொடுத்துக்கொள்ளுவதாக செய்யப்படுவது ஏன்?



ரோலெக்ஸ் ஆய்ஸ்டர் பெர்பெச்சுவல்—பரிபூரண நேர்மையானது. பிரபல ஆய்ஸ்டர் கேஸில் அடங்கியது. நிரந்தரமான 'ரோடார்' யந்திர விசையினால் தவறாமல் தானே சாவி கொடுத்துக் கொள்ளும். தற்கால கடியாரக் கலையின் ஒரு மகோன்னத சிருஷ்டி.

ஒரு ரோலெக்ஸ் கடியாரம் தானே சாவி கொடுத்துக் கொள்ளும்படி தயாரிக்கப்படுவதன் காரணம் உங்களுக்கு சாவி கொடுக்கும் தொல்லையை தவிர்ப்பதற்கல்ல; கடியார மெயின் ஸ்பிரிங்கில் எச்சமயத்திலும் சமமான முறுக்கு உண்டுபண்ணி கடியாரத்தை இன்னும் அதிக நேர்மையாக ஓடும்படி செய்வதற்குத்தான். இவ்வதிகரித்த நேர்மை கிடைப்பதற்கு கடியாரத்தின் யந்திர பாகம் ஜலம், தூசி, அழுக்கு, தூள் முதலிய எல்லாவித நாசிகரமான பொருள்களினின்றும் பாதுகாக்கப் படவேண்டும். ரோலெக்ஸ் ஆய்ஸ்டர் பெர்பெச்சுவல் உத்திரவாதமாக நீர் புகமுடியாதது; தவறாமல் தானாகவே சாவி கொடுத்துக் கொள்ளும். யந்திரம் மிக உறுதியாக அமைந்திருப்பது. 24 மணி நேரமும் அதை கட்டிக் கொண்டிருக்கலாம் — எவ்வளவு கடினமான வேலை விளையாட்டானாலும் பரவாயில்லை. எச்சமயத்திலும் சரியான மணி காட்டுவதற்கு இக்கடியாரத்தை நீங்கள் பூர்ணமாக நம்பலாம்.

ரோலெக்ஸ்

தென்இந்தியாவில் ஏக வினியோகஸ்தர்கள்:

மெஸர்ஸ் பி. ஆர் & ஸன்ஸ் லிட்.,

மவுண்டு ரோட், மதராஸ்

R. 734

என்று வீரப்ப தேவனிடம் சொன்னான் அந்த அரண்மனைச் சிப்பந்தி.

"அப்படியானால் நீயே அவனிடம் இப்பொழுது போய் நான் அழைத்து வரச் சொன்னதாகச் சொல்லி உடனே அவனை இங்கே அழைத்து வா!" என்று உத்தரவிட்டான் வீரப்ப தேவன்.

வீரப்ப தேவன் உத்தரவைக் கேட்ட அரண்மனைச் சிப்பந்தி தயங்கியபடியே நின்று கொண்டிருந்தான்.

"ஏன் நிற்கிறாய்? சீக்கிரம் போ!" என்று மேலும் கடுமையாக உத்தரவிட்டான் வீரப்ப தேவன்.

"நான் போய் ஒன்றும் பிரயோசனமில்லிங்க. அவன் ஏதோ பஜனை பண்ணுவது போலப் பாடிக் கொண்டும், ஆடிக் கொண்டும் போய்க் கொண்டிருக்கிறான்" என்றான் அரண்மனைச் சிப்பந்தி.

இதைக் கேட்ட வீரப்ப தேவனுக்கு அடங்காத கோபம் வந்தது. மாம்பழக் கூடையை நடுப் பாதையில் போட்டுவிட்டு அவன் காட்டிய திசையை நோக்கிக் குதிரையில் புறப்பட்டான்.

வேகமாகக் கொஞ்ச தூரம் சென்றதும் குடியானவனைச் சந்தித்தான். அவன் அருகில் சென்று குதிரையை நிறுத்தினான்.



வீரப்ப தேவனைக் குடியானவன் பார்த்தான். வீரப்ப தேவனைப் பார்த்தால் மரியாதையாகக் குடியானவன் கைகூப்பி வணங்குவது வழக்கம். ஆனால் அன்று வீரப்ப தேவனை அவன் லக்ஷ்யம் செய்ததாகத் தெரியவில்லை. பஜனை செய்வது போல அவன் இரண்டு கைகளையும் கொட்டிப் பாடிக் கொண்டே நடந்து கொண்டிருந்தான்.

வந்தது கோபம் வீரப்ப தேவனுக்கு; அவன் மீசை படபடவென்று துடிதுடித்தது. "என்ன, நான் கூப்பிடுகிறேன்; என்னை மதிக்காமல் போய்க் கொண்டிருக்கிறாயே! மாம்பழக் கூடையை நடுப் பாதையில் வைத்து விட்டுப் போனாய். அரண்மனைக்குச் சேரவேண்டிய மாம்பழங்கள் யாவும் இப்பொழுது வீணாகப் போய் விட்டனவே!" என்று அவன் தலைமயிரைப் பிடித்திழுத்தான். பிறகு குடியானவனைக் கவனித்துப் பார்த்தான். குடியானவன் இடதுகை சுண்டுவிரலில் போட்டுக்கொண்டிருந்த மஞ்சள் கல் மோதிரம் வீரப்ப தேவனின் கண்களில் பட்டது. அதைப் பார்த்த வீரப்ப தேவனுக்குத் தேள் கொட்டியது போல் தூக்கி வாரிப் போட்டது.

"அடாடா! இந்த மோதிரம் இவன் கையில் எப்படி வந்தது? அதனால் தான் இவன் இப்படித் தன்னை மறந்தே பாடிக் கொண்டு போகிறான். சரி, இவனை விசாரிப்போம்" என்று அவன் கையிலிருந்த மஞ்சள் கல் மோதிரத்தை வெடுக்கென்று பிடுங்கினான். அதைப் பக்கத்திலிருந்த ஒரு பாழுங் கிணற்றுக்குள் எறிந்தான்.

குடியானவன் உடனே தன் சுய நினைவை அடைந்தான். தான் ஒரு வயலில் நின்று கொண்டிருப்பதையும் அவன் எதிரில் வீரப்பதேவன் தன்னையே கோபத்துடன் விழித்துப் பார்த்துக் கொண்டிருப்பதையும் கவனித்தான். தன் கண்களையே அவனால் நம்ப முடியவில்லை. "என்ன விழிக்கிறாய்? மாம்பழக் கூடை எங்கே?" என்று ஒன்றும் தெரியாதவன் போல நடித்தான் வீரப்ப தேவன்.

"மாம்பழக் கூடையைத் தான் நானும் பார்க்கிறேன். அவர்களை எங்கே காணவில்லை? நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள்? எனக்கு ஒன்றுமே புரியவில்லை. எல்லாம் கண்கட்டி வித்தையாக அல்லவா இருக்கிறது. நான் எதற்காக இங்கு வந்தேன்?"

"அதைத் தான் நானும் கேட்கிறேன்?" என்றான் வீரப்ப தேவன்.

குடியானவன் பிரபாகரனும், உமாவும் தொடர்ந்து வந்ததையும், மாம்பழம் கேட்டதையும், விலை கேட்டதையும் கூறினான்.

மேலும் அவன், "என்னை மாம்பழம் கொடுக்கும்படி வற்புறுத்தவே, கடைசியில் நான் அவர்கள் விலை கொடுக்க மாட்டார்கள் என்று நினைத்து, அந்தப் பெண் கை விரல்களில் ஒன்றில் இருந்த ஒரு மஞ்சள் கல் மோதிரத்தைக் கேட்டேன். 'மோதிரம் கொடுத்தால் மாம்பழம் தருவேன்' என்று சொன்னேன். அந்தப் பெண் பக்கத்திலிருந்த வாலிபனைக் கேட்டாள். அவன் கொடுக்கும்படி சொல்லவே அந்த மஞ்சள் கல் மோதிரத்தைக் கழற்றி என்னிடம் கொடுத்தாள்.

"நான் அதை என் இடது கைச் சுண்டு விரலில் அணிந்து கொண்டேன். அப்புறம் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை" என்று தான் அணிந்து கொண்டிருந்த மோதிரத்தை வீரப்பதேவனிடம் காண்பிக்கக் கையை நீட்டினான். உடனே "ஐயோ, மோதிரத்தைக் காணவில்லையே?" என்று சொல்லி விட்டு மிரள மிரள விழித்தான் குடியானவன்.

"மோதிரம் காணா விட்டால் அதைப் பற்றி எனக்கு அவசியமில்லை. நீ மோதிரத்தை வாங்கிக் கொண்டு அவர்களுக்கு

தைப் பெண்ணாள்

பூ. அமிர்தலிங்கன்

வள்ளுவனார் வான்மறையை வாழ்க்கை நூலை
வற்றாத அறிவூற்றை வாய்மைக் குன்றைத்
தெள்ளுதமிழ்ச் சிந்தனையைத் தெளிந்த ஏட்டைத்
தெவிட்டாத தெள்ளமுதைத் தெய்வ வாக்கை;
உள்ளுதோறும் உயர்கின்ற உண்மை நாட்டார்
உளம்பொங்கத் தைப்பெண்ணாள் வந்து நின்றாள்;
பள்ளுடனே பாற்பொங்கல் படைய விட்டுப்
பைந்தமிழைப் பரவிடுவோம்! பண்பு வாழ்க!!

உள்ளத்தால் உலகளந்த கம்ப நாடன்
ஓவியமாய்ச் செய்தமைத்த இராம காதைத்
தெள்ளமுதத் தீங்கவிதைத் தேனில் நாளும்
திளைக்கின்ற திருநாட்டார் செல்வம் பொங்கக்
கள்ளவிழும் மலர்விழியாள் காலத் தேவி
கதிர்நிலவுத் தைத்திங்கள் வந்து நின்றாள்;
உள்ளம்போல் பால்பொங்க உவகை கொண்டே
உயர்தமிழை வாழ்த்திடுவோம்! உண்மை வெல்க!!

கண்ணகியின் காற்சிலம்பு விளைத்த காதை
கவியுலகின் இளங்கோவின் காதிற் சேரப்
பெண்ணணங்கின் காப்பியமாய்ப் பிறந்து பாரில்
பெருங்கற்பின் தெய்வநிலைப் பெருமை பேசும்
பண்ணமைந்த தமிழ்நாட்டார் இன்பம் பொங்கப்
பருவப்பெண் தைநங்கை வந்து நின்றாள்;
வண்ணமுறப் பால்பொங்க வாழ்த்துக் கூறி
வளர்தமிழை வணங்கிடுவோம்! வையம் வாழ்க!!

மாம்பழத்தை எடுத்துக் கொள்ளச் சொல்லியது மிகவும் தவறு. இது முதல் தடவை ஆதலால் உன்னை மன்னித்து விடுகிறேன். இனிமேல் இது மாதிரியான விஷயங்கள் நடந்தால் நேரில் என்னிடம் தெரிவிக்க வேண்டும் தெரியுமா?'' என்றான் வீரப்பன்.


குடியானவன் போன பிறகு வீரப்ப தேவன் தன் குதிரையின் மீது ஏறிக் கொண்டான். எப்பொழுதும் குதிரையின் மீது வேகமாகச் செல்லும் வீரப்ப தேவன் அப்பொழுது குதிரையை மெதுவாக ஓட்டிக்கொண்டு போனான். காரணம் அவன் மனம் ஓட்டமில்லாமல் சங்கடமான நிலைமையில் இருந்தது தான். இது வரையிலும் அவன் முயற்சிகளில் ஒன்றாவது பலன் கொடுக்கவில்லை. அந்த அவமானம் தான் அவன் நெஞ்சை அடைத்தது. குதிரை மேல் அவன் உட்கார்ந்த உடன் அவனது தலை குனிந்தது. வெகு தூரம் சென்றுதான் அவனது குனிந்த தலை நிமிர்ந்தது. 'அவமானம்! அவமானம்! கேவலம்! இந்தச் சிறுவர்களிடமா நாம் அவமானப் பட வேண்டும்! என் அவசரச் செய்கைதான் இப்பொழுது நான் அடைந்த தோல்விக்குக் காரணம். நான் மட்டும் அவசரப்படாமல் குடியானவனையே பின்பற்றிக் கொண்டு வந்திருந்தால் அந்த மாம்பழக் கூடையிலுள்ள பொன் மந்திர மாம்பழத்தை எளிதில் ஒருவருக்கும் தெரியாமல் என் வசமாக்கிக் கொண்டு வந்திருக்கலாம். இனி மேல் என்ன சொல்லி என்ன பிரயோசனம்? கடவுள் அவர்கள் பக்கம் இருக்கும்போது நான் என்ன செய்ய முடியும்? இருந்தாலும் அடுத்த முறை அவர்களை எப்படியாவது ஏமாற்றி மந்திர மாம்பழத்துடன் அவர்களை அரசன் எதிரில் கொண்டு வந்து நிறுத்துகிறேன். இது நிச்சயம்!' என்று தன் உறையிலிருந்த கத்தியைச் சற்று மேலே தூக்கி 'டப்' என்று உறைக்குள் போட்டான் வீரப்ப தேவன். அப்பொழுது தான் அவனது குனிந்த தலை நிமிர்ந்தது. வீரப்ப தேவன் முதலில் அரண்மனைக்குப் போவதாகத் தான் எண்ணினான். ஆனால் தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டு தன் வீட்டை நோக்கியே குதிரையைச் செலுத்தினான்.

குடியானவனின் கூடையிலிருந்து மந்திர மாம்பழத்தை எடுத்துக் கொண்ட பிரபாகரனும், உமாவும் வெகு வேகமாகத் துறவி சொன்ன ஏரியை நோக்கிச் சென்றார்கள்.

"உமா, என்னிடம் கொடு அந்தத் தங்க மாம்பழத்தை. இனிமேல் எந்தக் காரணத்தை முன்னிட்டும் அதை வெளியில் எடுக்கக்கூடாது. இம்முறை நீ எடுத்ததும் போதும், நாம் அவதிப் பட்டதும் போதும். ஏதோ கடவுளின் கிருபையால் தான் நாம் அந்த மாம்பழத்தைத் திருப்பிப் பெற்றுக் கொண்டோம்'' என்று உமாவின் கையிலிருந்து தங்க மாம்பழத்தை வாங்கித் தன் ஜேபியில் போட்டுக் கொண்டான் பிரபாகரன். "அண்ணா, நான் இனிமேல் அந்தத் தங்க மாம்பழம் பக்கமே வரவில்லை. எனக்கு இந்தச் சம்பவத்திலிருந்து நன்றாகப் புத்தி வந்தது'' என்றாள் உமா.

பிரபாகரனும், உமாவும் துறவி கூறிய ஏரிக் கரையை அடைந்தார்கள். ஏரிக் கரையை அடைந்தவுடன் துறவி கூறியது போல ஏரியின் மத்தியில் ஓர் குடிசை இருந்தது. ஏரி பெரிய ஏரியாகக் காணப் பட்டதால் பிரபாகரனும் உமாவும் கரடு முரடான இடத்தைக் கடந்து குடிசைக்குச் செல்லுவதற்குள் இருட்டி விட்டது. அங்கு வெளிச்சமும் இல்லை.

(தொடரும்)



(சென்ற வாரத் தொடர்ச்சி)

இவ்வாறு நாங்கள் பேசத் தொடங்கினோம். குளக்கரையில் என்னைச் சந்தித்ததிலிருந்து, அவனுக்கு என்னுடைய ஞாபகமாகவே இருந்ததாகவும், சீக்கிரம் வந்து தன்னைக் கல்யாணம் செய்து கொள்வேனென்று ஆசை வைத்திருந்ததாகவும், ஒரு வருஷம் வரையில் மூச்சு பேச்சு இல்லாமலிருக்கவே மனம் வெறுத்துப் போனதாகவும், அந்த நிலைமையில் காமாட்சிநாதன் வந்து கல்யாணம் பண்ணிக் கொள்வதாகச் சொல்லவே, அவருடைய நல்ல குணத்தைக் கண்டு, வயதாகியிருந்தாலும் பரவாயில்லை என்று சம்மதித்ததாகவும் கூறினாள்.

ஒரு மாதம் அவள் பொறுத்திருந்தால் நான் வந்து கல்யாணம் செய்து கொண்டிருப்பேனே என்று தெரிவித்தேன். "ஒரு வார்த்தை என்னிடம் சொல்லியிருந்தால் ஒரு மாதமல்ல, ஒரு யுகம் வேண்டுமென்றாலும் காத்திருப்பேனே" என்று அவள் கூறினாள்.


"தலைவிதி இப்படிப் பண்ணிவிட்டது" என்று இரண்டு பேரும் சேர்ந்து முடிவுக்கு வந்தோம்.

அதன் பிறகு, எப்போது காந்திமதியிடம் தனிமையில் பேசலாம் என்றே சிந்தனை செய்யலானேன். காமாட்சிநாதன் வீட்டில் இல்லாத சமயங்களை ஆராய்ந்து பார்த்துப் போகத் தொடங்கினேன். இது பிசகு என்று நன்கு தெரிந்தது. ஆயினும் என்ன பயன்! ஒருவனுக்குச் செங்குத்தான மலைப்பாறையில் கால் நழுவி விடுகிறது. கீழே விழத் தொடங்குகிறான். அப்படியே போனால் அதல பாதாளத்தைச் சேர வேண்டியதுதான் என்று அவனுக்கு நன்றாய்த் தெரியும். ஆனாலும் அவன் தன்னைத் தடுத்து நிறுத்திக் கொள்ள முடிவதில்லை. மலைச் சரிவில் விழுந்து கொண்டே இருக்கிறான்—என்னுடைய நிலையும் அது போல்தான் இருந்தது.

கடைசியாக, இத்தகைய வாழ்க்கையைச் சகித்துக் கொண்டிருக்க முடியாதென்ற தீர்மானத்துக்கு வந்தோம். நாங்கள் இருவரும் ஒருவருக்கொருவராகவே படைக்கப்பட்டவர்களென்றும், கடவுள் முன்னிலையில் கல்யாணம் செய்து கொண்ட சதிபதிகளே யென்றும் முடிவு செய்தோம். ஆனால் இந்த முட்டாள் உலகம்—கொடிய ஜன சமூகம்—அதை ஒத்துக் கொள்ளாது. ஆகவே, இந்தச் சமூகத்தை விட்டு எங்கேயாவது கண்காணாத தேசத்துக்குப் போய் சந்தோஷமாய் வாழ்க்கை நடத்துவதுதான் சரி. பணத்தைப் பற்றியாவது, மற்ற உலக சௌகரியங்களைப் பற்றியாவது நாங்கள் சிறிதும் கவலைப் படவில்லை. எங்களுடைய காதல் ஒன்றே எங்களுடைய அரிய செல்வம். மற்றவையெல்லாம் யாருக்கு வேண்டும்!

காமாட்சிநாதன் சமீபத்தில் அவருடைய கிராமத்துக்கு ஒரு காரியமாகப் போக உத்தேசித்திருந்தார். அச்சமயம் காந்திமதி அவருக்கு ஒரு கடிதம் எழுதி வைத்து விட்டு என்னுடன் கிளம்பி வந்து விடுவதென்றும், நாங்கள் கல்கத்தா

'ஆனந்த விகடனி'ல் 1935-ம் ஆண்டு மே மாதம் வெளியானது.



சென்று அங்கே கப்பலேறிப் பர்மாவுக்குப் போய் விடுவதென்றும் தீர்மானம் செய்து கொண்டோம்.

3

[இடையில் குறுக்கிடாமல் பெரிய ஸ்வாமி யார் கதையைக் கேட்டுக்கொண்டு வந்தார். அவருடைய கண்கள் பாதி மூடியிருந்தன. ஆனால் அவர் தூங்கவுமில்லை; யோகத்தில் ஆழ்ந்துவிடவுமில்லை. சின்ன ஸ்வாமி நிறுத்தும் போதெல்லாம் அவர் கண்களைக் கொஞ்சம் அதிகம் திறந்து, "அப்புறம்!" என்பார்.

குமாரானந்தர் மேலே சொல்கிறார் :—]

காமாட்சிநாதன் ஊருக்குப் போக வேண்டிய நாள் நெருங்கிற்று. ஒரு நாள் அவர் அதைப் பற்றிப் பேசுகையில், தமது மனைவியையும் அழைத்துக் கொண்டு போக உத்தேசித்திருப்பதாகச் சொன்னார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவர் அவ்வாறு செய்தால், நாங்கள் பேசித் தீர்மானித்திருந்தபடி செய்ய முடியாது.

என்னுடைய மனக் கலக்கத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமல், "போனால் எப்போது திரும்பி வருவீர்களோ!" என்று கேட்டேன்.

"காரியம் ஆனதும் திரும்ப வேண்டியதுதான். மூன்று நாளைக்குமேல் ஆகாது" என்றார்.

காந்திமதி "இரண்டு மூன்று நாளைக்காக நான் ஏன் வரவேண்டும்! வீண் அலைச்சல் தானே! இங்கேயே இருந்து விடுகிறேனே!" என்றாள்.

"எனக்கு ஆக்ஷேபணையில்லை. உனக்குத் தனியாக இருக்கப் பயமில்லையென்றால் பேஷாக இரு."

இப்படி லவலேசமும் சந்தேகமில்லாத சாதுவை நாம் ஏமாற்றப் போகிறோமே என்று ஒரு நிமிஷம் எனக்குப் பச்சாத்தாபம் உண்டாயிற்று. ஆனால் அடுத்த நிமிஷத்தில் "நான் என்ன இவரை ஏமாற்றுவது! இவரல்லவா என்னை மோசம் செய்தவர்! இவரை யார் வந்து காந்திமதியைக் கல்யாணம் செய்து கொள்ளச் சொன்னது! தெய்வீகமான காதலினால் இதய ஒற்றுமை பெற்ற எங்களுக்கு நடுவே இவரல்லவா சாபக் கேடாக வந்து சேர்ந்தார்!" என்று எண்ணி நெஞ்சை உறுதி செய்து கொண்டேன்.

குறிப்பிட்ட இரவு காமாட்சிநாதன் ஊருக்குப் போனார். மறுநாள் காலையில் நான் காந்திமதியின் வீட்டுக்குச் சென்று அவளைச் சந்தித்தேன். எங்களுடைய பயணத்தைப் பற்றிப் பேசி முடிவு செய்தோம். அதன்படி, அன்று சாயங்காலம், காந்திமதி வீட்டிலிருந்து புறப்பட்டு நான் வசித்த அறைக்கு வந்துவிட வேண்டியது. அங்கிருந்து சேர்ந்தாற் போல் நாங்கள் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய் கல்கத்தாவுக்கு ரயில் ஏற வேண்டியது. காமாட்சிநாதன் செய்து போட்ட நகைகள் ஒன்றையும் அவள் எடுத்து வர வேண்டாம். அவைகளை இரும்புப் பெட்டியில் வைத்து, அத்துடன் ஒரு கடிதம் எழுதி வைக்க வேண்டியது. இரும்புப் பெட்டிச் சாவி ஒன்று காமாட்சிநாதனிடம் இருப்பதால் அவர் வந்ததும் திறந்து பார்த்துக் கொள்வார். வீட்டில் ஒரு சமையற்காரியும், ஒரு வேலைக்காரப் பையனும் இருந்தார்கள். அவர்களிடம் காந்திமதி புரசவாக்கத்தில் உள்ள ஒரு சிநேகிதியின் வீட்டுக்குப் போவதாகவும், திரும்புவதற்கு இரண்டு மூன்றுநாள் ஆகலாம் என்றும் சொல்லி விட்டு வரவேண்டியது.

இந்த ஏற்பாடுகள் பேசி முடிந்ததும், காந்திமதி ஒரு கடிதம் எழுதிக் காட்டினாள். அதில், அவர் தன்னிடம் காட்டிய விசுவாசத்துக்கும் தனக்குச் செய்த நன்மைகளுக்கும் மிகவும் நன்றியுடையவளாயிருப்பதாகவும், ஆனால் அதற்கெல்லாம் தான் பாத்திரமானவள் அல்லவென்றும், கல்யாணத்துக்கு முன்பே தன்னுடைய இதயத்தை

ஒருவருக்குப் பறிகொடுத்து விட்டதாகவும், விதி வசத்தால் அவரை மறுபடி சந்தித்ததாகவும், அவரைப் பிரிந்து தன்னால் உயிர் வாழ முடியாதென்று அறிந்து அவருடன் போவதாகவும், தன்னை மன்னித்து மறந்துவிட வேண்டுமென்றும் எழுதியிருந்தாள்.

அன்று சாயங்காலம் நான் பிரயாணத்துக்கு எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டு, காந்திமதியின் வரவை ஆவலுடன் எதிர் பார்த்து உட்கார்ந்தேன். நேரம் ஆக ஆக என் நெஞ்சத் துடிப்பு அதிகமாயிற்று. "ஒருவேளை வராமல் இருந்து விடுவாளோ!" என்று எண்ணியபோது இதயத்தில் சம்மட்டியால் அடித்தது போன்ற வேதனை ஏற்பட்டது. ஸ்வாமி தங்களிடம் உள்ளது உள்ளபடி சொல்வதாகச் சங்கல்பம் செய்து கொண்டேனல்லவா! அந்த இதய வேதனையில் ஒரு சந்தோஷம் இருந்ததென்பதையும் சொல்லி விடுகிறேன். உண்மையென்னவென்றால், நான் கோழையாகி விட்டேன். அபாயங்கள் நிறைந்த கரைகாணாத சமுத்திரத்தில் பிரயாணம் செய்வதற்காக ஒருவன் தயாராகிறான். ஆனால் பிரயாணம் புறப்பட வேண்டிய சமயத்தில் ஏதாவது ஒரு தடை வந்து குறுக்கிடாதா, அதைச் சாக்காக வைத்துக் கொண்டு கிளம்பாமல் இருந்து விடலாமே என்று அவனுக்குத் தோன்றுகிறது. என்னுடைய மனநிலையும் அப்படித்தான் இருந்தது; ஆனால் அதை நானே அப்போது தெளிவாக உணரவில்லை.

வாசலில் வண்டி வந்து நின்று, காந்திமதி மாடிப் படியேறி என்னுடைய அறைக்குள் வந்தபோது, என்னுடைய இதய நிலை எப்படியிருந்ததென்பதை என்னாலேயே விவரிக்க முடியாது.

அவள் வந்ததும், இன்னின்ன சொல்லி, இவ்விதமாக வரவேற்க வேண்டும் என்றெல்லாம் எண்ணியிருந்தேன். ஆனால் அதெல்லாம் இப்போது அடியோடு மறந்து போயிற்று. ஒரு வார்த்தைகூட வரவில்லை. அவளுடைய கரங்களைப் பிடித்து உட்கார வைத்தேன். அப்போது அவளுடைய தேகமெல்லாம் நடுங்குவதை அறிந்தேன். என் மனத்தில் மற்ற உணர்ச்சியெல்லாம் போய்ப் பரிதாப உணர்ச்சி பொங்கி எழுந்தது.

"இதோ பார், காந்தி! உன் உடம்பு நடுங்குகிறது. உன் மனத்தில் கொஞ்சமாவது தயக்கம் இருந்தால் நாம் இந்தக் காரியம் செய்ய வேண்டாம்" என்றேன்.

"தயக்கமிருந்தால் வருவேனா! நீங்கள் என்னைக் கட்டாயப் படுத்தினீர்களா! என் மனப்பூர்வமான விருப்பத்தினாலேயே வருகிறேன்" என்று சொன்னாள் காந்திமதி.

"அது வாஸ்தவந்தான். ஆனாலும் என்னுடைய சுயநலத்துக்காக உன்னைத் துன்பத்துக்குள்ளாக்குகிறேனோ என்று என் மனசுதான் தவிக்கிறது. உனக்கு வீடு, வாசல், செல்வம், சௌக்கியம் எல்லாம் அவர் அளித்திருக்கிறார். நானோ இவையொன்றும் உனக்குத் தரமுடியாது......"

"அதனாலேயேதான் நான் அவரை விட்டுச் செல்வது அவசியம். அவர் எனக்கு எல்லாம் அளித்திருக்கிறார்; நானோ அவருக்கு என் வெறும் இதயத்தைக் கூட அளிக்க முடியவில்லை. அதைத் தாங்கள் ஏற்கெனவே கவர்ந்து விட்டீர்கள். நான் என்ன செய்யலாம்!"

"என் வாழ்க்கையில் இப்படிப்பட்ட பாக்கியம் எனக்குக் கிடைக்குமென்று நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. உன்னுடைய காதலுக்கும் நீ என்னிடம் வைக்கும் நம்பிக்கைக்கும் நான் தகுதியுள்ளவனோ என்று தான் சந்தேகமாயிருக்கிறது."

"இந்த யோசனையெல்லாம் அன்று அரசமரத்தடியிலேயே உங்களுக்குத் தோன்றியிருக்க வேண்டும்" என்றாள் காந்தி.

"சரி, சரி; நம்முடைய பேச்சிலே ரயிலை மறந்து விடப் போகிறோம். இனிமேல்தான் தினம் இருபத்திநாலு மணி நேரமும் பேசப் போகிறோமே. இப்போது கிளம்பலாம்" என்றேன்.

"கிளம்புவதற்கு முன் இன்னும் ஒரு விஷயம் உங்களுக்குச் சொல்லிவிட வேண்டும். அது அவருக்குக் கூடத் தெரியாது" என்றாள் காந்தி. அப்போது அவள் முகத்திலே சிறிது வெட்கத்தின் அறிகுறி காணப்பட்டது. இதழ்களில் சிறுநகை உண்டாயிற்று.

அவள் சொல்லுவது என்னவாயிருக்கலாமென்று சற்று யோசித்தேன். ஒன்றும் தெரியாமல் "என்ன சொன்னாலும் கேட்கத் தயாராயிருக்கிறேன்" என்றேன். "மூன்று மாதமாய் எனக்கு உடம்பு ஒரு மாதிரியாயிருக்கிறது. மாத ஸ்நானம் செய்யவில்லை. நாம் போகுமிடத்தில் இது ஒரு சிரமம் இருக்கிறது" என்றாள்.

இதன் பொருள் எனக்கு நன்றாய் விளங்க ஒரு நிமிஷம் பிடித்தது. அது விளங்கியதும் ஒரு பெரிய ஆறுதல் உண்டாயிற்று. அபாயம் நிறைந்த கடற் பிரயாணம் தொடங்குவதற்கு அசட்டுத் தைரியத்துடன் தீர்மானித்து விட்டு அதற்கு ஏதாவது இடையூறு நேராதா என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு, உண்மையிலேயே ஓர் இடையூறு இப்போது தென்பட்டது.

சற்று நேரம் சிந்தித்துக் கொண்டிருந்தேன். "என்ன இவ்வளவு ஆழ்ந்த யோசனை!" என்று காந்திமதி கேட்டாள்.

"காந்தி! இந்த ஜன்மத்தில் நம்முடைய காதல் நிறைவேறுவது பகவானுக்கு இஷ்டமில்லை.



கடவுள் சித்தமிருந்தால், நீ இன்னும் ஒரு மாதம் கலியாணம் ஆகாமல் கன்னிகையாக இருந்திருக்க மாட்டாயா!" என்றேன்.

"இதுதானா உங்கள் காதல்! இவ்வளவுதானா உங்கள் தைரியம்!" என்றாள் காந்தி.

"ஆமாம்; உன் வாழ்க்கையைப் பாழாக்குவதற்கு எனக்குத் தைரியமில்லைதான். அவர் உனக்களிக்கும் வாழ்க்கை சௌகரியங்களுக்குப் பதில் நீ அவருக்கு ஒன்றும் கொடுக்க முடியவில்லை என்று கூறினாய். அது தவறு. அவைகளுக்கெல்லாம் மேலானதை—சந்தான பாக்கியத்தை—அவருக்கு நீ அளிக்க முடியும். இந்த ஜன்மத்தில் நீ அவரைச் சேர்ந்தவள். அடுத்த ஜன்மத்திலாவது நம்மை ஒன்று சேர்க்கும்படி பகவானை மனமாரப் பிரார்த்திப்போம்" என்றேன்.

"அவர்தான் வேதாந்தி என்று நினைத்தேன்; நீங்களும் ஒரு குட்டி வேதாந்தி என்பது தெரியாமல் போயிற்று" என்றான் காந்தி. அடுத்த நிமிஷம் வேறு வார்த்தை ஒன்றும் பேசாமல் 'விர்' என்று எழுந்து சென்றான்.

வெளியே காத்திருந்த ஜட்கா வண்டி கடகடவென்று சென்றது. அந்த வண்டியின் சக்கரங்கள் என் இதயத்தின் மேல் ஓடுவது போலிருந்தது.

காந்திமதி இறங்குவதற்கிருந்த பெரிய துன்பக் குழியிலிருந்து அவளைக் காப்பாற்றிக் கரை சேர்த்ததாக நினைத்தேன். ஆனால் என்னுடைய வாழ்க்கை என்னவோ பாழாயிற்று. இனிமேல் அது வெறும் பாலைவனந்தான்.

அன்றிரவு ஒரு கண நேரமும் நான் தூங்கவில்லை. இன்னும் சில நாள் அப்படியே இருந்தால் சித்தம் பேதலித்து விடும் என்று தோன்றிற்று. எனவே, மறுநாள் அதிகாலையில் திருக்கோவிலூரரை நோக்கிப் பிரயாணமானேன்.

திருக்கோவிலூர் மடத்தைப் பற்றித் தாங்கள் அறிந்திருப்பீர்கள். அப்போது அம்மடத்தின் தலைவராயிருந்த ஸ்வாமியை எனக்கு ஏற்கெனவே தெரியும். அவர் சிறந்த கல்விப் பயிற்சியும், ஒழுக்கமும், விசால புத்தியும், கருணையும் உள்ளவர். அவரிடம் சென்று நான் சன்னியாசியாக விரும்புவதாகவும், அவருடைய சீடனாக என்னை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்தேன். ஸ்வாமிகளும் அருள் புரிந்து என்னைத் தம்முடைய சீடனாக ஏற்றுக் கொண்டார்.

4

ஐந்து வருஷங்களுக்குப் பிறகு, என்னுடைய குருநாதரைச் சென்னையிலிருந்த ஒரு பக்தர் அழைத்திருந்தார். அவருடன் நானும் சென்றேன். ஒருநாள் கோவிலில் உபந்நியாசம் நடந்தது. ஸ்வாமிகள் வழக்கம் போல் அரிய பெரிய சமய தத்துவங்களைச் சரமாரியாகப் பொழிந்து கொண்டிருந்தார். ஆனால் என்னுடைய மனம் என்னமோ, அன்று உபந்நியாசத்தில் ஈடுபடவில்லை.

உண்மையில், சென்னைக்கு வந்ததிலிருந்தே என் உள்ளம் சரியான நிலைமையில் இல்லை. தியானத்தில் மனம் குவிதல் மிகவும் கடினமாயிற்று. அடிக்கடி காந்திமதியின் நினைவு வந்தது. "புலன்களை அடக்கி வெற்றி பெற்ற நாம் இப்போது காந்திமதியைப் பார்த்தாலென்ன!" என்று தோன்றிற்று. "அவளை நமது சிஷ்யையாய்க் கொள்ளலாம்" என்ற ஆசைகூட உண்டாயிற்று.

கோவிலில் ஸ்வாமிகள் உபந்நியாசம் செய்து கொண்டிருந்தபோது, மனம் அதில் ஈடுபடாமல் பெரிதும் சலித்துக் கொண்டிருக்கவே, நான் கோவிலைச் சுற்றி வரலாமென்று எண்ணி எழுந்து சென்றேன். அங்கே கர்ப்பக் கிரஹத்தில் அர்ச்சகர் பூஜைக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தார். வெளி மண்டபத்தில் ஒரு சிறு பெண் கைகூப்பிய வண்ணம் நின்று கொண்டிருந்தாள். அங்கு வேறு யாரும் இல்லை.

அந்தக் குழந்தைக்கு வயது ஐந்துக்குள்தான் இருக்கும். அவள் வாய்க்குள்ளே ஏதோ முணுமுணுத்துப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள். அவள் என்ன பிரார்த்திக்கிறாள் என்று தெரிந்து கொள்ள ஆவல் உண்டாகவே, அருகில் நெருங்கி உற்றுக் கேட்டேன்.

"அம்பிகே! தாயே! என் அம்மாவைக் காப்பாற்று. நாங்கள் திக்கற்றவர்கள்; உன்னைத் தவிர எங்களுக்குக் கதி கிடையாது......"

என் உடம்பெல்லாம் ஒரு குலுங்குக் குலுங்கிற்று. அந்தப் பரிதாபமான குரலையும், பிரார்த்தனையையும் என்னால் சகிக்க முடியவில்லை. இன்னும் அருகில் சென்று, "குழந்தாய்! நீ யாரம்மா! உன் தாயாருக்கு என்ன அம்மா!" என்று கேட்டேன்.

குழந்தை முதலில் கொஞ்சம் வெருண்ட கண்களுடன் என்னைப் பார்த்தாள். அப்புறம், அவள் முகம் சற்று மலர்ந்தது.

"அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. வீட்டிலே அரிசி வாங்கப் பணம் கிடையாது......!" என்றாள்.

"உனக்கு அப்பா இல்லையா, அம்மா!"

"அப்பா நான் பிறப்பதற்கு முன்பே போய் விட்டார். எங்களுக்கு வேறு திக்கில்லை. தெய்வந்தான் எங்களுக்குத் துணை."

இந்தக் குழந்தையின் மழலைச் சொற்கள் எல்லாம் அவளுடைய தாயார் அடிக்கடி சொல்லிக் கேட்டவை யென்று ஊகித்துக் கொண்டேன். என் உள்ளம் உருகிற்று.

அடுத்தபடி "உன் பெயர் என்ன, அம்மா!" என்று கேட்டேன்.

"என் பெயர் சௌபாக்கியம்."

"உன் அம்மாவின் பெயர்!"

"காந்திமதி."

என்னைத் தொடர்ந்து அவர்களுடைய வீட்டுக்கு வருவதற்கு அந்தக் குழந்தை ஓடவேண்டியிருந்தது. அவ்வளவு விரைவில் என் கால்கள் என்னை அங்கே கொண்டு சேர்த்தன.

ஒரு பழைய வீட்டின் சின்ன அறை ஒன்றில் வெறுந் தரையில் எலும்புந் தோலுமாய்ப் படுத்துக் கொண்டிருந்த காந்திமதியைக் கண்டேன். அவள் முகத்திலே மட்டும் முன் நான் பார்த்ததை விட அதிகமான தேஜஸ் இருந்தது.

வெகு நேரம் நாங்கள் ஒன்றும் பேசவில்லை. ஒருவரையொருவர் பார்த்துப் பார்த்துக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தோம்.

அவளுக்கு உடம்பு சரிப்படாததற்குக் காரணம் பட்டினிதான் என்று பார்த்த உடனேயே எனக்குத் தெரிந்து போயிற்று. பக்கத்துக் கடையிலிருந்து கொஞ்சம் பழங்கள் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து முதலில் அவர்கள் இருவரையும் சாப்பிடச் செய்தேன்.

"நான் சாவதற்குள் உங்களை மறுபடி பார்ப்பேன் என்று மட்டும் ஒரு நம்பிக்கை எனக்கு இருந்தது. நேற்றிரவு ஒரு கனவு கண்டேன். ஒரு வாய்க்காலுக்கு அந்தக் கரையில் நீங்கள் நிற்கிறீர்கள். அங்கிருந்து கையை நீட்டி என்னையும் அந்தக் கரையில் சேர்க்க முயல்கிறீர்கள். அப்போது நான் வாய்க்காலில் விழுந்து விடுகிறேன். வெள்ளம் அடித்துக் கொண்டு போகிறது. அப்புறம் வெகு நேரம் நினைவே இல்லாமல் இருந்தது. பிறகு, சமுத்திரத்தில் ஒரு படகில் இருப்பதாகத் தோன்றுகிறது. நீங்கள் படகு ஓட்டுகிறீர்கள். 'இது நம்முடைய மறு ஜன்மம்' என்று உற்சாகத்துடன் நீங்கள் சொல்லுகிறீர்கள்.

'விதியின் எழுத்தைக் கிழித்தாச்சு—முன்னே
விட்ட குறை வந்து தொட்டாச்சு'

என்று நந்தன் சரித்திரக் கும்மி நான் பாடுகிறேன். அப்போது திடீரென்று ஒரு புயற்காற்று வந்து படகைக் கவிழ்த்து விடுகிறது. இப்படியெல்லாம் ஏதேதோ சொப்பனம் கண்டு கொண்டிருந்தேன்"—என்று காந்திமதி கூறினாள்.


எங்களுடைய சம்பாஷணை ஒரு தொடர்ச்சியில்லாமல் ஒரே குழப்பமாயிருந்த படியால், அதை அப்படியே என்னால் இப்போது சொல்ல முடி

நோட்டீஸ்

B. I. S. N. கம்பெனி லிமிடெட்

S. S. ரஜுலா

சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு - சிங்கப்பூர்



மேற்படி கப்பல் கீழ்க்கண்ட தேதி வாக்கில் புறப்படும்

சென்னையிலிருந்து 22-1-1955 - நாகப்பட்டினத்திலிருந்து 23-1-1955

மாறுதலுக்கு உட்பட்டது

கப்பலில் குறைந்த எண்ணிக்கையுள்ள பங்குகள் (Bunks) பர்த் வசதி இல்லாத பிரயாணிகளின் வசதிக்காகப் பொருத்தப்பட்டிருக்கின்றன. இந்த 'பங்கு'களைப் பெற விரும்புகிறவர்கள் கொஞ்சம் கூடுதல் கட்டணம் செலுத்திப் பெறலாம். இவை உபயோகப் படுத்தாத சமயத்தில் மடக்கி வைத்து அதிக இடத்தையும் உண்டாக்கிக் கொள்ளலாம்.

கம்பெனியின் ஏஜண்டுகளிடமிருந்து உணவுடனோ அல்லது உணவின்றியோ பர்த் வசதி இல்லாததும் பங்க் வசதி உள்ளதுமான பிரயாண டிக்கெட்டுகள் கிடைக்கும்.

'பங்க்'குகளுக்கு டிக்கெட் கட்டண விவரம்:

	உணவுடன்	உணவில்லாமல்
சென்னையிலிருந்து பினாங்குக்கு ...	ரூ. 111/-	ரூ. 89/-
சென்னையிலிருந்து சிங்கப்பூருக்கு ...	ரூ. 137/-	ரூ. 108/-
நாகப்பட்டினத்திலிருந்து பினாங்குக்கு ...	ரூ. 110/-	ரூ. 86/-
நாகப்பட்டினத்திலிருந்து சிங்கப்பூருக்கு ...	ரூ. 135/-	ரூ. 106/-

இந்தக் கட்டண விவரங்கள் மாறுதலுக்குட்பட்டவை.

கோரண்டைன் கட்டணங்கள்:

பெரியவர் ரூ. 69/- சிறுவர் ரூ. 36/- குழந்தைகள் ரூ. 20/-

பினாங், போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றுமதிக்குச் சரக்குகள் ஏற்றுக் கொள்ளப்படும். சிங்கப்பூரில் மாற்றி பாங்காக்கிற்கு அனுப்புவதற்கான சரக்குகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றுமதி விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்

பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட்	மதுரா கம்பெனி லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, சென்னை-1	முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

யாது. என்னை விட்டுப் பிரிந்த பின் அவளுக்கு நேர்ந்ததைப் பற்றி நான் கேட்டுத் தெரிந்து கொண்டதை மட்டும் சொல்கிறேன்.

காந்திமதி வீடு சேர்ந்ததும், அங்கே வேலைக்காரப் பையன் மட்டும் பெரிதும் மனக் குழப்பத்துடன் உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். அவள் சென்றபின் ஊருக்குப் போயிருந்ததாக நினைத்த எஜமான் வந்ததாகவும், அம்மாள் வெளியில் போயிருக்கிறாள் என்று அறிந்ததும் அவர் ஒன்றும் சொல்லாமல் திரும்பிப் போனதாகவும் அவன் தெரிவித்தான். அன்றியும் எஜமான் வந்து சென்ற பின் சமையற்காரி இரும்புப் பெட்டி இருந்த அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு வெகுநேரம் ஏதோ குடைந்து கொண்டிருந்ததாகவும், பிறகு தான் அன்றிரவு திரும்பி வரமாட்டேன் என்று சொல்லிப் போய் விட்டதாகவும் கூறினான். காந்திமதி பதை பதைப்புடன் இரும்புப் பெட்டியைப் போய்ப் பார்த்தாள். பெட்டி திறந்திருந்தது. சாவிக் கொத்து கீழே கிடந்தது. பெட்டிக்குள் நகைகள் இல்லை. அவள் எழுதி வைத்திருந்த கடிதம் மட்டும் இருந்தது. அதை எடுத்துக் கிழித்துத் தீயில் போட்டு எரித்தாள்.

நகைகளைச் சமையற்காரி எடுத்துப் போயிருக்க வேண்டுமென்று அவளுக்குத் தோன்றிற்று. காமாட்சி நாதன் அவ்வளவு சீக்கிரம் திரும்பி வந்ததைப் பற்றி நினைக்க அவளுக்குக் கவலையாயிருந்தது. அவர் இரும்புப் பெட்டி இருந்த அறைக்குள் போகவில்லையென்று பையனை நன்றாய் விசாரித்துத் தெரிந்து கொண்டாள். ஆகையால் கடிதத்தைப் பார்த்திருக்க மாட்டார். எனவே, எப்படியும் அவர் சீக்கிரம் வருவாரென்று எதிர்பார்த்தாள். நகைகள் எல்லாவற்றையும் கழற்றி வைத்ததுபற்றி அவருக்கு என்ன காரணம் சொல்வதென்று கலக்கத்துடன் யோசித்துக் கொண்டிருந்தாள்.

ஆனால் அத்தகைய காரணம் சொல்வதற்கு வேண்டிய பிரமேயம் அவளுக்கு ஏற்படவேயில்லை. ஏனென்றால் காமாட்சி நாதன் திரும்பி வரவேயில்லை.

மறுநாளும் அவர் வரவில்லை. ஒரு வாரம், இரண்டு வாரம் ஆகியும் வரவில்லை. அவருக்கும் சமையற்காரிக்கும் வெகுநாளாகக் காதல் உண்டென்றும், அவளை அழைத்துக் கொண்டு அவர் ஓடி விட்டாரென்றும் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் சொன்னார்கள். காந்திமதியிடம் வந்து துக்கம் விசாரித்தார்கள். ஆனால் ஒருவராவது எவ்வித ஒத்தாசையும் செய்ய முன் வரவில்லை.

காந்திமதியின் தாயார் முன்னமே காலஞ் சென்று விட்டாள். வேறு உற்றார் உறவினர் யாருமில்லை. சொந்தக் கிராமத்துக்குப் போக அவளுக்கு இஷ்டமும் இல்லை. நல்லவேளையாகப் பாங்கியில் கொஞ்சம் பணம் இருந்தது. அதை வைத்துக் கொண்டு பட்டணத்திலேயே வசிக்கத் தீர்மானித்தாள். அதே தெருவில் சமீபத்திலிருந்த ஒரு வீட்டில் இரண்டு அறைகள் மட்டும் வாடகைக்கு வாங்கிக்கொண்டு வசிக்கலானாள். அந்த வீட்டில் மற்றொரு குடித்தனம் இருந்த தம்பதிகள் மிகவும் நல்ல மாதிரி. குழந்தைகளைப் படிக்க வைப்பதற்காகவே அவர்கள் பட்டணத்துக்கு வந்து வசித்து வருகிறார்கள்.

இரண்டு பேரில் ஒருவர் எப்படியும் திரும்பி வருவார்கள் என்ற நம்பிக்கையுடன் காந்திமதி காலங் கழிக்கலானாள். உரிய காலத்தில் இந்தப் பெண் குழந்தை பிறந்தது. குழந்தையை வளர்ப்பதில் அவள் பொழுதில் பெரும் பகுதி போயிற்று. செட்டாகக் குடித்தனம் செய்து எப்படியோ இத்தனை நாள் கழித்தாள். கடைசியாக, பாங்கியிலிருந்த பணம் முழுவதும் தீர்ந்து பரம தரித்திரம் நேரிட்டது. உணவுப் பொருள் வாங்கவும் பணம் இல்லாத நிலைமை ஏற்பட்டது.

இதையெல்லாம் அவள் சொல்லக் கேட்கக் கேட்க, எனக்கு என்மீதிலேயே ஏற்பட்ட கோபத்துக்கு அளவில்லாமல் போயிற்று. "பாவி என்னாலல்லவா உனக்கு இந்தத் துயரமெல்லாம் நேரிட்டது! சமயத்தில் நான் கோழையாகி உன்னை வீட்டுக்குத் திரும்பிப் போகச் சொன்னேனே!" என்று கதறினேன்.

"நான் திரும்பிப் போனதற்குக் காரணம் நீங்கள் மட்டுந்தான் என்று நினைக்கிறீர்களா! இல்லை, இல்லை. எனக்கு அவ்வளவு உறுதியிருந்திருந்தால், உங்களை எப்படியாவது கிளம்பச் செய்திருப்பேன். உண்மையில், என்னுடைய தைரியக் குறைவுதான் உங்களையும் பாதித்தது. என் தேகம் நடுங்கியதை அப்போது நீங்கள் அறியவில்லையா! நான் போய் விட்டேனென்று தெரிந்ததும் அவருடைய மனம் என்ன பாடு படுமென்று எண்ணிப் பார்த்தபோது என்னுடைய உறுதியெல்லாம் போய் விட்டது. அதனால்தான் நீங்கள் கொஞ்சம் தயக்கம் காட்டியதும் நான் திரும்பி விட்டேன்" என்றாள்.

"அதை நினைத்தால்தான் வயிற்றெரிச்சல் அதிகமாகிறது. பிரமாதமான வேதாந்த விசாரம் செய்து விட்டுக் கடைசியில் ஒரு சமையற்காரியை இழுத்துக் கொண்டு போன மனுஷ்யனுக்காக நம்முடைய வாழ்க்கை இன்பத்தையெல்லாம் தியாகம் செய்தோமே! நீ இப்படிப் பட்டினி கிடந்து எலும்புந் தோலுமாகும்படி ஆயிற்றே! இந்தக் கண்கள் என்ன பாவம் செய்தன!" என்று சொல்லி முகத்தில் அடித்துக்கொண்டேன்.

"சுவாமி! தாங்கள் அதை நம்புகிறீர்களா, என்ன! ஊரார் சொன்னார்களென்றால், அது நிஜமா! அவரிடம் நான் காதல் கொள்ள முடியவில்லை என்பது உண்மையே; அவருடைய குணத்தை நான் நன்றாய் அறிவேன். ஒரு நாளும் அப்படி நேர்ந்திராது."

"பின் ஏன் அந்த மனுஷர் திரும்பி வரவில்லை! உன்னை இந்தக் கதிக்கு ஆளாக்கி விட்டு அவர் ஏன் போக வேண்டும்! ஏதாவது விசேஷ காரணமிருக்க வேண்டுமல்லவா! வேறு என்ன இருக்க முடியும்!" என்றேன்.

"அதென்னமோ, நான் அறியேன். சந்தர்ப்பங்கள் எல்லாம் ஊரார் சொல்வதற்குப் பொருத்தமாய்த்தானிருந்தன. ஆனால் என் அந்தரங்கத்தில் நான் அதை நம்ப முடியவில்லை; இனியும் நம்ப மாட்டேன்" என்றாள்.

அவளுடைய உத்தமகுணத்தை நினைக்க நினைக்க எனக்கு என் பேரிலும், அவள் புருஷன் பேரிலும் பதின் மடங்கு கோபம் பொங்கிற்று. இன்னொரு ஸ்திரீக்கு இத்தகைய கஷ்டம் நேர்ந்திருந்தால், எவ்வளவு மனங் கசந்து போயிருப்பாள்! எப்படி எல்லாரையும் துவேஷிப்பாள்!

மறுபடி நாளைக்கு வருவதாகச் சொல்லி விட்டு என் குருநாதர் தங்கியிருந்த வீட்டுக்குத் திரும்பினேன். "எங்கே போயிருந்தாய்!" என்று அவர் கேட்டதற்கு, "பழைய சிநேகிதர் ஒருவரைச் சந்தித்தேன்; அவர் வீட்டுக்குப் போயிருந்தேன்" என்றேன். இனி என்ன செய்வதென்பதைப் பற்றித் திடமான முடிவு செய்து கொண்டு, அவ

ரிடம் முழு விவரத்தையும் தெரிவிக்க வேண்டுமென்று நினைத்தேன். உண்மையில், அவரிடம் சந்நியாஸாசிரமத்திலிருந்து விடுதலை கோரும்படியாக நேருமோ என்றுகூட என் உள்ளம் நினைத்தது.

ஆனால் அத்தகைய தர்ம சங்கடத்துக்குக் காந்திமதி என்னை ஆளாக்கவில்லை. மறுநாள் காலையில் நான் அவள் வீடு சென்றபோது காந்திமதி குழந்தையை அணைத்துக் கொண்டு, "ஸௌபா! உன்னை நான் பிரியுங் காலம் வந்து விட்டது. ஆனால் நீ வருத்தப்படாதே. பகவான் என்னை அடியோடு கைவிட்டு விடவில்லை. நேற்று உன்னோடு வந்த ஸ்வாமியார் உன்னைக் காப்பாற்றுவார்" என்று மெலிந்த குரலில் சொல்லிக் கொண்டிருந்தாள். தாய், குழந்தை இருவருடைய கண்களிலும் ஜலம் பெருகிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் எனக்கும் அழுகை வந்து விட்டது.

சற்று நேரத்துக் கெல்லாம் என்னையும் அந்தக் குழந்தையையும் கோவென்று கதற விட்டுவிட்டுக் காந்திமதி பரலோகம் சென்றாள்.

முடிவுரை

இப்படிச் சொல்லி வந்த குமாரானந்தரின் கண்களில் இப்போதும் கண்ணீர் துளித்தது. ஆனால் பெரிய ஸ்வாமியாரோ சாந்த ஸ்வரூபியாய் உட்கார்ந்தார். கடைசியில் குழந்தையைப் பற்றிச் சொன்னபோது மட்டும் அவருடைய மூச்சு வழக்கத்தை விடச் சிறிது பெரிதாக வந்தது.

"இப்போது ஸ்வாமி பணம் அனுப்பி வருவதெல்லாம் அந்தக் குழந்தைக்குத் தானா!" என்று ஆவலுடன் கேட்டார்.

"ஆமாம், அன்றைய தினமே நான் என் குருநாதரிடம் சென்று, உண்மை முழுவதையும் சொல்லி, இனிக் கொஞ்ச காலம் என் மனத்தில் சாந்தி இராதென்றும், ஒரே இடத்தில் இருக்க முடியாதென்றும், தெரிவித்து க்ஷேத்திர யாத்திரை செய்ய அநுமதி பெற்றேன். கொஞ்ச நாள் நான் போகுமிட மெல்லாம் ஸௌபாவையும் அழைத்துக் கொண்டு போனேன். கொஞ்சம் அவளுக்கு வயதானதும் சென்னையில் இளம் பெண்களுக்கு உணவு வசதியுடன் கல்வியும் அளிக்கும் ஒரு ஸ்தாபனத்தில் சேர்த்தேன். இப்போது அவளுக்குப் பதினைந்து வயதாகிறது. அவளிடம் எனக்கு இருப்பது த்வேஷமா, வாத்ஸல்யமா என்றே சில சமயம் தெரியவில்லை. 'இந்தப் பெண்ணாலல்லவா இன்னும் நான் விடுதலை பெறாமல் உலக பந்தத்தில் ஆழ்ந்திருக்கிறேன்!' என்று நினைக்கும்போது அவளிடம் கோபம் உண்டாகிறது. அடுத்த நிமிஷம் 'அந்தக் குழந்தையின் நல்வாழ்வுக்காக மோட்சத்தை இழந்து நரகத்துக்கும் போகலாம்' என்று தோன்றுகிறது......"

"ஸ்வாமிக்குப் பந்தத்திலிருந்து விடுதலை வேண்டுமானால் இப்போது அடையலாம். குழந்தை ஸௌபாக்கியத்தைக் காப்பாற்றும் பொறுப்பை இந்தக் கட்டை ஏற்றுக் கொள்ளும்" என்றார் பிரணவானந்தர்.

"ஓ! அதெப்படி முடியும்! காந்திமதி அளித்த பொறுப்பை நான் எப்படி இன்னொருவரிடம் கொடுப்பேன்! கொடுத்தாலும் நான் எப்படி நற்கதி பெறக் கூடும்! ஸ்வாமி சொல்லுங்கள்! இந்த உலகத்தில் துன்பமும், தீமையும் ஏன் இருக்கின்றன! சமையற்காரியை இழுத்துச் சென்ற ஒரு தூர்த்தனுக்காக எங்கள் வாழ்க்கையே பாழானதேன்! காந்திமதி பட்டினியால் உயிர் துறக்கும்படி நேர்ந்ததேன்! இதையெல்லாம் நினைக்கும் போது எனக்குக் கடவுளிடத்தி

லேயே அவநம்பிக்கை உண்டாகி விடுகிறது. அப்போதெல்லாம் என் சந்நியாச கோலத்தைப் பார்த்து நானே சிரித்துக் கொள்கிறேன்.''

''ஸ்வாமி! பகவானுடைய சிருஷ்டியில் ஏன் தீமையும் துன்பமும் இருக்கின்றன என்று நமது பெரியோர்கள் ஆராய்ச்சி செய்தார்கள்.''

''ஆராய்ச்சியில் அவர்கள் கண்டதென்ன!''

''அதுதான் நமக்குத் தெரியாது. ஏனெனில் அந்த இரகசியத்தைக் கண்டு பிடித்தவர்கள் யாரும் அதை வெளியிட வில்லை. கடவுளின் சாந்நித்யத்தைப் போலவே அவர் திருவிளையாடலின் இரகசியமும் விவரிக்க முடியாதது என்றார்கள். அதனால்தான் 'கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்' என்னும் வாக்கியம் எழுந்தது.''

''பின் மனிதன் சாந்தி பெறுவதுதான் எப்படி!''

''மனச்சாட்சிக்குச் சரியென்று தோன்றுவதைச் செய்வதும், பலன்களைப் பகவானுக்கு அர்ப்பணம் செய்வதும்தான் சாந்தி அடையும் உபாயம். உதாரணமாக, காந்திமதியின் புருஷன், அவள் வேறொருவனைக் காதலித்திருக்கையில் தான் மணம் புரிந்தது பிசகு என்று அறிந்த போது, அவளை விட்டுச் செல்வதே சரியென்று எண்ணினான். அதன் விளைவுகள் விபரீத மானதை இப்போது அறிந்த போதிலும் அவன் மனம் கலங்கவில்லை.''

சின்ன ஸ்வாமியாருக்குத் துணுக்கென்றது. ''ஸ்வாமி! என்ன சொல்கிறீர்கள்! காமாட்சி நாதனை உங்களுக்கு தெரியுமா!'' என்றார்.

''ஆமாம்; அவரைப் பற்றி இந்தக் கட்டைக்கு நன்றாய்த் தெரியும். ஸ்வாமி கருதியது போல் அவள் சமையற்காரியுடன் போக வில்லை. காந்திமதியும் அவள் காதலனும் சந்தோஷமாயிருக்கட்டும் என்றுதான் போனான். அதைப் பற்றி நிச்சயமாய்த் தெரிந்து கொள்வதற்காகவே அவன் ஊரிலிருந்து மறு நாளே திரும்பி வந்தது. காந்திமதி வீட்டில் இல்லாமல், அவளுடைய காதலன் அறையில் இருக்கக் கண்டதும் நிச்சயம் பெற்றுச் சந்நியாசியாகி வடநாட்டுக்குச் சென்றான். அவன் வீட்டில் விட்டுச் சென்ற சாவிக் கொத்தைக் கொண்டு சமையற்காரி பெட்டியைத் திறந்து நகைகளைத் திருடிச் சென்றிருக்க வேண்டும்.''

''ஸ்வாமி, ஸ்வாமி! இதெல்லாம் தங்களுக்கு எப்படித் தெரியும்! தாங்கள் யார்!''

''பூர்வாசிரமத்தில் இந்தக் கட்டையைக் காமாட்சிநாதன் என்று சொல்லுவார்கள்.''

அமரர் கல்கி

கல்கியின் மறைவைக் குறித்துப் பல சங்கங்களும், பள்ளிக்கூடங்களும், பிரமுகர்களும் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்து எழுதிக் கொண்டே இருக்கிறார்கள். அவைகளில் சிலவற்றை மட்டும் வெளியிடுகிறோம்.

டிசம்பர் 30உ சென்னை ராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் கல்கி நினைவுக் கூட்டம் நடந்தது. திரு. வி. க. மணி மண்டபக் குழுவினரின் ஆதரவில் நடந்த இந்தக் கூட்டத்துக்கு ஸ்ரீ பி. டி. ராஜன் எம். எல். ஏ. தலைமை வகித்தார். ஸ்ரீ சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார், ஸ்ரீ டி. கரிய கவுண்டர், திரு கி. ஆ. பெ. விஸ்வநாதன் முதலியோர் கல்கி அவர்களின் பெருமையைக் குறித்துப் பேசினர். கடைசியில் ஸ்ரீ கல்கி அவர்களின் மறைவைக் குறித்து அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

●

நண்பர் ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களைப் பற்றிச் சொல்லவோ, எழுதவோ தோன்றவில்லை. தேசத்துக்கும், தமிழ் மொழிக்கும் அன்னார் செய்துள்ள சிறந்த தொண்டுக்கு ஈடு இணையாக இன்னொருவரை இனி நாம் காண்பதரிது.

வேதாரண்யம் அ. வேதரத்னம்

●

டிசம்பர் ஏழாம் தேதி மாலை தில்லித் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் நடந்த அனுதாபக் கூட்டத்தில் அமைச்சர்கள், அதிகாரிகள், பிற ஸ்தாபனப் பிரதிநிதிகள், பார்லிமெண்டு அங்கத்தினர்கள் உள்படத் தமிழ் மக்கள் திரளாகக் கூடியிருந்தனர். சங்க அக்ராசனர் டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் தலைமை வகித்தார்.

பார்லிமெண்டு அங்கத்தினர் ஸ்ரீ டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார், ரயில்வே போக்குவரத்து இலாகா அமைச்சர் ஸ்ரீ ஓ. வி. அழகேசன், பார்லிமெண்டு அங்கத்தினர் ஸ்ரீ சி. ஆர். நரசிம்மன், 'நவபாரத் டைம்ஸி'ன் உதவி ஆசிரியர் ஸ்ரீ பூர்ணம் சோமசுந்தரம், பாரத சுகாதார இலாகா உப மந்திரி ஸ்ரீமதி மரகதம் சந்திரசேகரன் ஆகியோர் கல்கி ஆசிரியர் ஆற்றிய தொண்டைப் பற்றி உணர்ச்சியோடு பேசினார்கள். பின்னர் சபைத் தலைவர் பிரேரேபித்த அனுதாபத் தீர்மானத்தைக் கூட்டம் அங்கீகரித்தது.

●

சென்னை மகாஜன சபையின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் டிஸம்பர் 31உ ஸ்ரீ எஸ். வெங்கட்ராமன், எம். பி. தலைமையில் கூடி அநுதாபத் தீர்மானம் நிறைவேற்றிக் கல்கிக்குச் சபையின் மரியாதையைத் தெரிவித்துக் கொண்டது.

●

இன்னும் பல பொதுநல ஸ்தாபனங்களிலிருந்தும் பிரமுகர்களிட மிருந்தும் வந்துள்ளன :—

பீஹார் மாகாணத்தைச் சேர்ந்த ஹஸாரிபாக் மாவட்டத்தில் இருக்கும் கர்கலி நிலக்கரிச் சுரங்கத் தமிழ் நாட்டுத் தொழிலாளர்கள்; எஸ். கே. வேலாயுதம் உயர்தரப் பாடசாலை, குறிஞ்சிப்பாடி கிராமம், தென்னாற்காடு ஜில்லா; அயன்பாக்கம் பஞ்சாயத்துச் சபையார், கல்யாணபுரம்; முதல்சேத்தி, கிராம காங்கிரஸ் கமிட்டி; பி. எம். சுந்தரம் கம்பெனி, மேட்டுப்பாளையம், நீலகிரி; டி. கே. நித்தாரப்ப முதலியார், மத்தளம் பாறை, தென்காசி; காசி இந்து சர்வகலாசாலை தமிழ்ச் சங்கம்; கல்கத்தா தென் இந்தியர் சங்கம்; உடன்குடி நகர காங்கிரஸ் ஊழியர் கமிட்டி.

மேற் குறிப்பிட்டவர்களைத் தவிர இன்னும் நமக்கு அனுதாபங்கள் தெரிவித்துக் கடிதம் எழுதும் அன்பர்களின் பெயர்களையும், அவர்களின் உணர்ச்சி மிக்க கடிதங்களையும் பிரசுரிக்க இயலவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். கல்கி நேயர்கள் கல்கிப் பத்திரிகை மீது காட்டி வரும் இந்த அன்புக்கும் ஆதரவுக்கும் மிக்க நன்றியுடையவர்களாயிருக்கிறோம். அமரர் கல்கியின் நாமம் வாழ்க!

Printed and Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road. Kilpauk, Madras-10. Editor: M. P. Somasundaram.



பெர்டுஸின் "டெஷ்னர்"

சென்ற 60 வருஷ காலத்தில் கக்குவான் இருமல் உட்பட சகல விதமான இருமல்களினின்று அவதிப்படுபவர்களுக்கு பெர்டுஸின் துரித நிவாரணம் அளித்திருக்கிறது. ஆகவே நீங்களும் பெர்டுஸின் வாங்குங்கள்.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கிறது.

இடாபா லிமிடெட், ஷான், லீஷென்ஸ்டீன் ஸ்விஸ் கஸ்டம் அண்ட் இகனமிக் டெரிடெரி இவர்களின் அனுமதியின் பேரில் இன்பா லிமிடெட் தபால் பெட்டி 1041, பம்பாய் - 1 இவர்களால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

REGISTERED No. M. 4392
Registered as newspaper in Ceylon